
கல்கி
பாண்டிமாதேவி
அடுத்த இதழில்
ஆரம்பமாகிறது
KALKI 29-6-1958
30
நயா
பைசா

சினிமா நட்சத்திரங்களின் பொலிவுடன்

உங்கள் மேனியும் மிளிரட்டும்!

நகையழகையும் உடையழகையும்விட மாசற்ற மேனியழகையே மேலான அழகாக மதிப்பவர் பேரழகி எம். என். ராஜம். ''எனது மேனியைத் தெளிவுடனும், புதுமையுடனும் வைத்திருப்பதற்கு ஆதாரம், நான் அன்றுடம் உபயோகித்துவரும் லக்ஸ் டாய்லெட் சோப்பே'' என்கிறார் எம். என். ராஜம். என்னே அதன் நுரையின் செழிப்பு. அதன் நறுமண இன்பம்! அத்தகைய லக்ஸ் பராமரிப்பை உங்கள் மேனிக்கும் அளியுங்கள்!



எம்ஜியார் பிக்சர்ஸ் ''நாடோடி மன்னன்'' படத்தில் தோன்றும் அழகு நட்சத்திரமாகிய எம். என். ராஜம்

தூய, வெண்மையான

லக்ஸ் டாய்லெட் சோப்



சினிமா நட்சத்திரங்களின் அழகுசாதன சோப்

LTS. 576-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட், பம்பாய்.

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


ஜூலை
4 முதல்
சென்னை
காஸினோ
கிரௌன்
ராக்ஸி
மற்றும்
தென்னாடெங்கும்
தேவர் பிலிம்ஸ்
செங்கோட்டை சிங்கம்
டைரக்ஷன்: V.N.ரெட்டி
ஸ்டுடியோ
விஜயா வாஹினி



மலர் 17 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற | விளம்பி௵
இதழ் 48 | தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | ஆனி௴ 15உ

மாயூரம் வழிகாட்டுகிறது!

"ஆயிரமானாலும் மாயவரம் ஆகாது!" என்று மாயூர நகரவாசிகள் பெருமைப்பட்டுக் கொள்வார்கள்.

மற்ற ஊர்வாசிகள் இதைப் பார்த்து, எதைக்கொண்டு இவர்கள் இவ்வளவு பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள் என்று எண்ணி வந்தனர். ஆனால் சென்ற ஞாயிற்றுக் கிழமை அங்கு நடைபெற்ற தமிழ்நாட்டு இளைஞர் மத்திய ஆட்சிமொழி மகாநாடு, மேற்கண்ட பழமொழி மிக உண்மை என்பதை உறுதிப்படுத்தி விட்டது!

ஆட்சி மொழி மகாநாடு சென்னையில் நடைபெற்றது; வங்கத்தில் நடைபெற்றது. இங்கெல்லாம் வயதிலும் அனுபவத்திலும் முதிர்ச்சி பெற்றவர்கள் காரண காரியங்களுடன் ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்திச் சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி வந்தனர்.

இப்பொழுது அந்தப் பொறுப்பைப் பெரியவர்களிடமிருந்து இளைஞர்கள் வாங்கிக் கொண்டு விட்டனர். இளமையும் உணர்ச்சி வேகமும், அடக்கமும் அமைதியும், செயல் திறமையும் நாட்டுப் பற்றும் பெற்ற இளைஞர்கள்தான் மாயவரத்தில் மிக அழகிய முறையில் மகாநாடு நடத்தினர். அதைப் பார்த்தபோது, இதுகாறும் ஆட்சிமொழி விஷயத்தில் தீவிரப் பங்கு கொண்டு, கிளர்ச்சி செய்து வந்த பெரியோர்கள் நீண்ட பெருமூச்சு விட்டனர். தங்களிடமிருந்து இளைஞர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டது பற்றி ஆறுதலடைந்தனர். ராஜாஜி அவர்களோ, இந்த இளைஞர்களின் உற்சாகத்தைப் பார்த்துவிட்டு, "இனி நமது தேசத்துக்கு ஆபத்தில்லை என்பதை அறிந்து கொண்டேன்!" என்று மிகுந்த பெருமிதத்துடன் கூறினார்.


"ஆட்சிமொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும்; மத்திய சர்க்கார் நிர்வாகம் இப்பொழுது இருப்பது போலவே தொடர்ந்து நடைபெற வேண்டும்; சுதந்திரம் பெற்றுப் பத்து வருடங்களாக ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகக் கையாண்டு வருவதனால் நமக்கு ஏதொரு அவமானமோ, கௌரவக் குறைவோ ஏற்பட்டு விடவில்லை. அதற்குமாறாக ஆங்கிலத்தை உள்நாட்டு அரசாங்க நிர்வாகத்திலும், வெளிநாட்டுப் பொது அரங்கங்களிலும் கையாண்டு வந்ததால் நமது புகழ் பரவியிருக்கிறது. நமது பெருமை வளர்ந்திருக்கிறது. ஆகவே, 1965 லிருந்து நமது ஆட்சிமொழி இந்தியாக மாற வேண்டும் என்றிருக்கும் அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பதினேழாவது அத்தியாயத்தை அப்படியே அகற்றிவிடவேண்டும். அதுதான் நாட்டுக்கு நன்மை; எதிர்கால மக்களுக்கும் நன்மை" என்று ராஜாஜி, டாக்டர் வி. பி., மீர்ஸா இஸ்மெயில், டாக்டர் ரத்னசுவாமி, ஆர். வி. கிருஷ்ணய்யர் போன்ற பெரியவர்கள் சொல்லி வந்தார்கள்.

நாட்டு மக்களின் நலன்களில், வருங்கால சந்ததிகளின் வாழ்க்கையின் உயர்வில், அக்கறை கொண்டு, தெளிவாகச் சிந்திக்கும் திறம் படைத்த பெரியவர்கள் இவர்கள். இவர்கள் கூறியதை "ஏதோ கிழவர்கள் பேசுகிறார்கள்!" என்று நாட்டின் மற்றத் தலைவர்கள் அலட்சியமாகப் பேசி வந்தார்கள்.

ஆங்கிலமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வரும் தலைவர்கள் இளைஞர்களின் நன்மையை, வருங்கால சந்ததிகளின் உயர்வைக் கருதியே பேசி வந்தார்கள். இதை இளைஞர்கள் உணர்ந்து விட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டியது மாயூரம் மகாநாடு.

"இது கிழவர்கள் பேச்சல்ல; எங்கள் நலனுக்காக, பாரத நாட்டின் எதிர்கால நன்மைக்காகப் பேசப்படும் பேச்சு! இனி அவர்கள் பேச வேண்டாம்! இதோ இளைஞர்க

தூண்டிலில் சிக்காது !



அல்ஜீரிய மக்களுக்கும், பிரஞ்சு மக்களுக்கும் சமமாக வோட்டுரிமை அளிப்பதாக பிரஞ்சுப் பிரதமர் டிகால் அறிவித்திருக்கிறார்! வோட்டுரிமையைப் பெற்றுக்கொண்டு, சுதந்திரத்தை இழக்க எந்த நாடும் தயாராக இல்லை!

ளாகிய நாங்கள் இருக்கிறோம். நாங்கள் ஆங்கிலமே ஆட்சி மொழியாக வேண்டும், இந்தி வேண்டாம் என்று சொல்லுகிறோம்! நாம் வெற்றி பெறுவோம்'' என்று இளைஞர்கள் முதன் முதலில் குரல் கொடுத்த மகாநாடு இது. காஷ்மீர் முதல் கன்யா குமரி வரை பரவியுள்ள பாரத நாட்டின் வாலிபர்களுக்கு வழிகாட்டிய மகாநாடு மாயூரம் மகாநாடு! இந்த மகாநாட்டைப் பற்றிக் கேள்விப்படும் இளைஞர்கள் இனி ஒவ்வொரு ஜில்லாவிலும் மகாநாடுகள் கூட்டி, பாரத சர்க்காருக்குத் தங்கள் உள்ளத்தின் உணர்ச்சியை உணர்த்துவார்கள்.

மற்றொரு விதத்திலும் இது மிகவும் முக்கியமானதோர் மகாநாடாகும்.

இந்தி ஆட்சிமொழி யாவதற்குச் சற்றும் தகுதியில்லை என்றும், அதனால் விபரீத விளைவுகள்தான் ஏற்படும் என்றும் எத்தனையோ காரணங்கள் காட்டி விளக்கப் பட்டிருக்கிறது. அதற்கெல்லாம், தகுந்த பதில் அளிக்க முடியாத வடநாட்டினரும், இந்தி ஆதரவாளர்களும், அந்நிய மொழியை மேல் நாட்டில் எங்கள் ஆட்சி மொழி என்று எப்படிச் சொல்லிக் கொள்வது, அது அவமானமாக அல்லவா இருக்கிறது. இது பாரத தேசத்தின் கௌரவத்துக்கே குறைவல்லவா என்று திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார்கள்!

இதற்கு இந்த மகாநாட்டில் இளைஞர்கள் தக்க பதில் அளித்து விட்டார்கள்!


அந்நிய மொழியை ஆட்சி மொழியாக வைத்துக் கொள்வது அவமானமாகக் கருதப்பட்டால், முக்கியமான அரசாங்கச் சடங்குகளுக்கு மட்டும் சமஸ்கிருத வாக்கியங்களையும் வாய்பாடுகளையும் உபயோகித்துக் கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள். இதை ஒரு தீர்மானம் மூலம் நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

பிரதம நீதிபதி பிரமாணம் எடுத்துக் கொள்ளுதல், மந்திரிகள் பிரமாணம் எடுத்துக் கொள்ளுதல், வெளிதேசங்களில் தூதர்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளுதல் போன்ற அரசாங்கச் சடங்குகளுக்கு வடமொழியை வைத்துக் கொண்டால் போதும், பாரத நாட்டின் கௌரவம் காப்பாற்றப்படும் என்று இளைஞர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள்.

சமஸ்கிருதம் யாரும் பேசாத மொழி. எந்தப் பகுதி மக்களின் தாய்மொழியுமல்ல. ஆனால் பாரத நாட்டின் மொழி. முக்கியமான விசேஷ நாட்களில் வீடுகளில் சம்ஸ்கிருதத்தை உபயோகப் படுத்தி வருவது போல், அரசாங்கச் சடங்குகளிலும் உபயோகப் படுத்தி வரலாம் என்று கூறி யிருக்கிறார்கள்!

பாரத நாட்டில் இந்தி பேசாத எல்லாப் பகுதி மக்களுக்கும், இந்தி ஆட்சி மொழியாவதில் விருப்பமில்லை. ஆனால் ஆங்கிலத்தை ஏற்றுக் கொண்டால் பாரத நாட்டின் கௌரவம் என்ன ஆவது என்ற கவலையில் பாரத நாட்டின் மற்றப் பகுதி மக்கள் தயங்கித் தயங்கிப் பின் நின்றனர். இந்த மாயூரம் தீர்மானம், பாரத மக்கள் அனைவரையும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஆங்கிலமே ஆட்சி மொழியாக வேண்டும் என்ற இயக்கத்தில் மிகுந்த ஊக்கம்கொள்ளச் செய்யும். இவ்வியக்கத்தில் தமிழ் மக்களுக்குப் பின்னால் துணை நிற்கச் செய்யும். வடமொழியைத் தவிர வேறு எந்த மொழியையாவது ஏற்றுக் கொண்டால், எந்த மொழியை ஏற்றுக் கொள்வது என்ற சண்டைவந்துவிடும். அப்போது இந்தி பலம் பெற்று விடும். ஆகவே, பாரத நாட்டில் யாருமே பேசாத சம்ஸ்கிருதத்தைத் தேர்ந்தெடுத்ததில் ராஜதந்திரம் இருக்கிறது! மற்ற மொழியாளர்களும் இதற்கு இணங்குவார்கள். பாரத நாட்டு மற்ற மக்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும் தலைமைப் பதவி இந்த மாயூரம் தீர்மானத்தினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு விட்டது. அவ்வகையில்இந்த மகாநாடு பாரதநாட்டுச் சரித்திரத்திலே மிகமுக்கியம் அடைந்துவிட்டமகாநாடு என்கிறோம். இந்தப் பெருமை மாயூரத்துக்குக்கிடைத்ததைப் பார்த்தும், "ஆயிரம் ஆனாலும் மாயவரம் ஆகாது!" என்ற பழமொழி எவ்வளவு உண்மையாகிவிட்டது என்பதை நினைத்தும் பெருமிதம் அடைகிறோம்!

முதலைக் கண்ணீர்!



"அன்று பிரிட்டிஷார் ஜாலியன்வாலாபாக்கில் முந்நூறு பேர்களைச் சுட்டுக் கொன்றார்கள்! அதற்காக பிரிட்டனுடன் தனது ராஜதந்திர தொடர்பை அறுத்துக் கொள்ளாத அமெரிக்கா, ஹங்கேரித் தலைவர் நாகி மரண தண்டனை விதிக்கப்பட்டார் என்பதனால் அணுகுண்டு சோதனைகளை நிறுத்த ருஷ்யத் தலைவர்கள் அழைக்கும் மகாநாட்டிற்குப் போக முடியாது என்று சொல்வது எனக்கு வியப்பாக இருக்கிறது!" என்றார் ராஜாஜி.

கடைத்தேங்காயும் வழிப்பிள்ளையாரும்

சமீபத்தில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்த சென்னை முதன் மந்திரி காமராஜ் அவர்கள் பேசிய பேச்சு நாட்டு நலனில் அக்கறை கொண்டு பேசிய பேச்சாகத் தோன்றவில்லை.

குடியானவர்களுக்கு 60 சதவிகிதம் கொடுத்தது போதாது. இன்னும் அதிகம் கொடுக்க வேண்டும். மிராசுதார்கள் முன்னைப்போல் ஆடம்பர வாழ்க்கை வாழ முடியாது. அவர்கள் தங்கள் சுகபோக வாழ்க்கையை யெல்லாம் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் ரொம்பவும் வசீகர யோசனையுடன் சென்னை ராஜ்ய முதன் மந்திரி பேசியிருக்கிறார்.

இந்தப் பேச்சைப் பார்க்கும்போது, நாட்டில் விவசாயம் பெருக வேண்டும் என்பதில் இருக்கும் அக்கறையை விட மிராசுதார்கள் மீது ஆத்திரப்படுவதில்தான் அக்கறை அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

நமது முதன் மந்திரி தஞ்சையில் பேசியுள்ள பேச்சு மிராசுதார்களிடம் குடியானவர்கள் நிரந்தரப் பொறாமையும் வெறுப்பும் கொள்ளும் வகையில் அமைந்திருக்கிறது.

நிலத்தின் விளைவைப் பெருக்க அதற்காக முதல் போட்டு விவசாயம் செய்யக்கூடிய உரிமையாளர்களும் வேண்டும், உழைத்துப் பாடுபடுபவர்களும் வேண்டும் என்று பல முறை வற்புறுத்தி யிருக்கிறோம். இந்த இரு கூட்டத்தினரும் சேர்ந்து உழைத்தால்தான் பலன் காண முடியும்; விளைவைப் பெருக்க முடியும்; உணவுப் பஞ்சத்தை விரட்ட முடியும்!

'நம்முடைய ஸ்டர்லிங் மூலதனம், உணவுப் பொருள் இறக்குமதி செய்வதிலேயே கரைந்து கொண்டு வருகிறதே!' என்று தேசத் தலைவர்கள் பெருங் கவலையுற்றிருக்கும் இந்தச் சமயத்தில் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிக அவசியமாகும். அதற்கு நிலத்தில் வேலை செய்பவர்கள், சொந்தக்காரர்கள் இவர்களுக்கு இடையே ஒற்றுமையும் நேசப்பான்மையும் மிக மிக அவசியமாகும். அந்த நேசப்பான்மையை வளர்ப்பதற்குப் பதில் துவேஷமும், பிரிவினையையும் வளர்க்கப் பார்ப்பது, உணவு உற்பத்திக்குத்தான் தடையாக முடியும். சமுதாய சுக வாழ்வுக்கு இடையூறாக முடியும்!

ஆனால் நமது முதன் மந்திரி இப்படிப் பேசியதற்குக் காரணமில்லாமல் இல்லை. 1952-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தஞ்சை ஜில்லா கம்யூனிஸ்ட் கோட்டையாக இருந்து வந்தது. பிறகு காங்கிரசுக்குப் பெரும் செல்வாக்கு ஏற்பட்டது. மறுபடியும் தஞ்சை ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும் இப்பொழுது மற்ற எதிர்க்கட்சிகள் செல்வாக்கு அடைந்து வருவதைப் பார்த்துக் கலவரமடைந்து, குடியானவர்களை மீண்டும் தம் பக்கம் வைத்துக் கொள்ள இவ்வாறு பேசி யிருக்கிறார். நூற்றுக்கு நூறு சத விகிதம் குடியானவனுக்கே கொடுத்து விட்டால், ஒருகால் அடுத்த தேர்தலில் வோட்டுக்களை இன்னும் அதிகமாகப் பெற்று விடலாம். ஆனால் தானிய விளைவைப் பெருக்க முடியாது!

நூற்றுக்கு அறுபதோ அல்லது நூறு சத விகிதமோ கொடுப்பதாக இருந்தால், சரியான மதிப்பிட்டு பூமியைச் சர்க்காரே எடுத்துக் கொண்டு விடுவது நலம். அதன்பின் விவசாய முறைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து எவ்வளவு சத விகிதம் கொடுத்தால் மூலதனத்துக்குத் தகுந்த வருமானமாகும், உழைப்பவனுக்கு உற்சாகமும், சந்தோஷமும் ஏற்படும், வெள்ளாமையும் சரியாக, குறைவர உண்டாகும் என்பதெல்லாம் தெரிய வரும்; தற்போது கடைத் தேங்காயும் வழிப்பிள்ளையாருமாக யோசித்து வரும் திட்டத்தின் தீமையையும் உணர்வார்கள்!

வேலை நிறுத்தம் போதும்!

துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஆரம்பித்து ஒரு வாரமாகியும், இன்னமும் நீடித்துக் கொண்டே இருப்பது வருந்தத் தக்கதே. லக்ஷக்கணக்கான தொழிலாளிகளின் நலன் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் நேர்ந்த உயிர்ச் சேதமும், இந்த நிலைமையைச் சம்பந்தப்படாதவர்களும் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்திக் கொள்வதும், எல்லோருக்கும் மிகுந்த வருத்தத்தைத் தரும் அம்சங்கள்.

அவர்கள் வேலைநிறுத்தம் செய்தது அவசியம் தானா, அவர்கள் குறைகள் கவனிக்கப் படவில்லையா என்பதைப் பற்றி யெல்லாம் இங்கே விவாதிக்க வேண்டியதில்லை. அவர்கள் கோரிக்கைகளில் நியாயம் இருக்கலாம். சௌத்திரி கமிஷன் செய்துள்ள சிபார்சுகளின் மீது நடவடிக்கை எப்படியும் எடுத்துத் தானே ஆகவேண்டும். இவ்வளவு மாதங்கள் காத்திருந்தவர்கள் மேலும் சில நாட்கள் காத்திருக்கலாம். அரசாங்கமும் பரிசீலனையைத் துரிதமாகவே செய்திருக்கலாம். ஆனால் அமைச்சர் எஸ். கே. பாட்டீல் சொன்னதைப் போல் பல துறைமுக அதிகாரிகளுடன் கலந்து பரிசீலிக்க வேண்டிய விஷயமாதலால் சிறிது தாமதம் ஏற்பட்டது. தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. இருதரப்பிலும் கருத்தில் வேற்றுமை இருப்பதாகத் தோன்றவில்லை. எனவே சற்றுத் தாமதித்திருக்கலாம்.

ஆனால் தொழிலாளிகள் நிலையை அவர்கள் தானே அதிகமாக உணர்வார்கள். நடவடிக்கை மேற்கொண்டு விட்டனர். இதில் பொது மக்களுக்கு இவ்வளவு நஷ்டம் என்பதை அவர்கள் கவனித்திருப்பார்கள். நாட்டின் தற்போதைய நிலையில் இறக்குமதியையோ, ஏற்றுமதியையோ மற்றப்படி போக்குவரத்துக்கான முதல் கட்ட வேலைகளையோ முடக்கி வைப்பதில் நாட்டுக்கல்லவா சேதம். ஏற்கனவே பல

கோடி ரூபாய்களுக்குச் சேதம் ஏற்பட்டு விட்டதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளிகளும் நம் பாரத மக்கள்தானே? இந்த மாதிரி நாட்டின் முன்னேற்றத்தில் தடை ஏற்பட்டதை அவர்களும் உண்மையிலேயே விரும்ப மாட்டார்கள்தான். இதெல்லாம் அவர்களுக்குத் தெரியாதா?

இதையொட்டி அனுதாப ஸ்டிரைக்கூடச் சில இடங்களில் மற்றத்தொழிலாளிகள் செய்ததாகச் சொல்லப்படுகிறது. கடையடைப்பு, ஹர்த்தால் கூட நடந்ததாகவும் கூறப்படுகின்றன. இம்மாதிரி சந்தர்ப்பங்களில் உண்மை அனுதாபம் எவ்வளவு, பயம் எவ்வளவு, தற்காப்பு எவ்வளவு என்று பாகுபாடு செய்வது கடினம். ஆனால் இதைப்பற்றி ஆராய்ச்சியும் அவசியமில்லை. நாட்டு நலனை உத்தேசித்து இந்த வேலை நிறுத்தத்தை உடனே வாபஸ் பெறுவது இன்றியமையாதது. டில்லியில் கூடும் தொழிலாளித் தலைவர்கள் விவேகத்துடன் பிரதமர் நேருஜி விடுத்த வேண்டுகோளை ஒரு முகாந்தரமாக வைத்து, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற உத்தரவு கொடுப்பார்கள் என்று நம்புகிறோம்.

பாண்டிமாதேவி

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிய நாட்டை ஆண்ட திரிபுவன சக்கரவர்த்தி பராந்தக பாண்டியன் அமரபதவி அடைந்தான். அவனுடைய மனைவி கோப்பெருந்தேவி வானமாதேவியும், புதல்வன் இராசசிம்ம பாண்டியனும் தனியாகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வடதிசைப் பேரரசர்கள் மூவரும் பாண்டி நாட்டின்மீது படையெடுத்துப் பிடித்துக் கொண்டு விடுகின்றனர்.

இளைஞன் இராசசிம்மன் வடதிசைப் பேரரசர்களுக்குப் பயந்து சிங்களத் தீவுக்கு ஓடி விடுகிறான். தென்பாண்டி நாட்டு மகாமண்டலேசுவரர், மகாராணி வானமா தேவிக்குத் தங்க இடமும் ஆதரவும் அளிக்கிறார்.

வடதிசைப் பேரரசர்கள் மகாராணியைக் கொல்லச் சதி செய்கின்றனர். ஒற்றுவேலைகளும், ஏமாற்று வேலைகளும் நடக்கின்றன. போரும் புயலும் வீசத் தொடங்குகின்றன. முன்னொரு காலத்தில் தென்பாண்டி நாடாக இருந்த இன்றையக் கன்னியாகுமரி மாவட்டத்தின் பின்னணிச் சூழலில் இந்தச் சரித்திரக் கதை நடைபெறுகிறது.

மகாராணி வானமாதேவியைத் தவிர, பகவதி, விலாசினி, குழல்மொழி என்னும் மூன்று கதாநாயகிகள் வந்து வீரதீர சாகஸச் செயல் புரிகிறார்கள். இந்த நால்வரில் யார் முக்கிய பாத்திரம் என்று நாம்கூற முடியாது. நேயர்கள் தங்கள் உசிதம்போல் தீர்மானித்துக் கொண்டு திருப்தியடையலாம்.

அடுத்த இதழில் ஆரம்பமாகும் இந்தச் சரித்திரப் பெருங் கதையில் வரும் ஒரு முக்கிய நிகழ்ச்சி இந்த வாரத்து அட்டைச் சித்திரமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூக்காரப் பெண் சாதாரணமான பெண் அல்ல. சந்தன நிறமும், செங்குமுத இதழும், கருமேகக் கூந்தலுமாகப் பூப்போன்ற கையினால் பூப்போன்ற விரல்களைக் கொண்டு பூச்சரத்தை எடுத்துக் காட்டுகிறாள். சண்பக மொட்டுக்களைப் போன்ற அவளுடைய விரல்களில் ஒளிந்து கொண்டிருந்த திறமை, உதிரிப் பூக்களை, ஊழ்வினையை வரிசைப் படுத்தும் பரம்பொருள் நியதிபோல் வரிசைப்படுத்தித் தொடுத்தல்லவா வைத்திருக்கிறாள்!

தன் சொந்தக் கவலைகளையும், அதிர்ச்சிகளையும் மறந்து, அந்த விரல்களின் நளினத்தை, விரலுக்கு உரியவளின் வனப்பை அனுபவித்துக் கொண்டு நிற்கிறானே அந்த வீரன், அவன் யார்? அமுத குடம்போல் பருவம் மெருகு செய்திருக்கும் அந்தப் பூக்காரப் பொற்சித்திரம் யார்? இந்த விவரங்களை யெல்லாம் பாண்டிமாதேவி சரித்திரத் தொடர் கதையில் பின்னால் தெரிந்து கொள்ளலாம்!

என்ன சேதி?

மானம் போகிறது!


திரு ஈ. வெ. ரா. விடுதலையானதிலிருந்து, ஊர் ஊராகச் சென்று தமது கொள்கைகளைப் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார். அதில் நமக்கு அவ்வளவு அக்கறையில்லை. ஆனால் அவ்வளவு நல்லபடியாகப் பாதுகாத்து வந்த சென்னை சர்க்காரின் ரகசியத்தை யெல்லாம் அம்பலப் படுத்துவதைப் பார்க்கும் போதுதான் சென்னை சர்க்காரிடம் இரக்கம் ஏற்படுகிறது!


மத்திய சர்க்காரின் வற்புறுத்தலின் பேரில்தான் சென்னை சர்க்கார், தம்மைச் சிறை வைத்தார்களாம். மத்திய சர்க்காரின் கண்ணைத் துடைப்பது போல் தம்மைச் சிறை வைத்து விட்டு, உடனே ஆஸ்பத்திரிக்கு அனுப்பி நல்லபடியாகக் கவனித்துக் கொண்டார்களாம்!

'ஒரு நன்மை செய்தால் இப்படியா அதை யெல்லாம் வெளியில் அவிழ்த்து விட்டு மானத்தை வாங்குவது?' என்று சென்னை சர்க்கார் நினைக்கலாம்.

கேரள முதன் மந்திரி

சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெற்ற சமாதான மகாநாட்டில் ராஜாஜி கேரள முதன் மந்திரி திரு





புகழ்படைத்த புதல்வர்களைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அப்புகழும் ஒருநாள் இரண்டு நாள் அல்ல, ஒரு வருஷம் இரண்டு வருஷம் அல்ல, பலப் பல வருஷங்கள் நீடித்து நின்று, மக்கள் நாவார, மனமாரப் புகழ் படைத்த தனயனைப் பெற்ற தந்தை தாயாரைப் பற்றி என்னவென்பது!

டாக்டர் அருணாசலம் அவர்கள் வைத்திய உலகில் புகழ்பெற்றுச் சென்னை ராஜ்ய வைத்தியத் துறை டைரக்டராக இருந்து சிறந்தபணி ஆற்றியபின் சமீபத்தில்தான் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பிறகும் அடையாறு புற்று நோய் ஆஸ்பத்திரியில் அவர் ஆற்றி வரும் தொண்டை அறியாதவர்கள் இருக்க முடியாது. இத்தகைய புகழ் பெற்ற டாக்டர் பி. அருணாசலம் அவர்களின் தந்தை வரகூர் ஸ்ரீ பிரணதார்த்திஹர அய்யருக்கு சதாபிஷேகமும், டாக்டர் அருணாசலம் அவர்களுக்குச் சஷ்டியப்தபூர்த்தியும் ஜூன் எட்டு ஒன்பது தேதிகளில் வெகு விமரிசையாக நடந்தேறின.

இந்த வைபவத்துக்கு உறவினர்களும், நண்பர்களும், சென்னை நகரப் பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

சதாபிஷேகம் செய்து கொள்ளும் பாக்கியம் பெற்ற ஸ்ரீ பிரணதார்த்திஹர அய்யர் தம்பதிகளும், அறுபதாண்டு நிறைவு விழா கொண்டாடிய டாக்டர் அருணாசலம் தம்பதிகளும் இன்னும் பல்லாண்டுகள் வாழப் பிரார்த்திக்கிறோம்.

ஈ. எம். சங்கரன் நம்பூத்ரிப்பாடு அவர்களுக்கு மனம் நிறைந்த வரவேற்பு அளித்தார். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருந்தும், ராஜாஜி அவருக்கு அமோகமாக வரவேற்பு அளித்ததற்குக் காரணம் சங்கரன் நம்பூத்ரிப்பாடு அவர்களின் நேர்மைக்குணமும் சீலமும்தான் என்று கூறினார். நம்பூத்ரிப்பாடு அவர்களைத் தமக்கு வேலூர்ச் சிறையில் இருந்த நாட்களிலிருந்தே தெரியும் என்றும், அப்பொழுதே அவரது ஒழுக்கமும் நடத்தையும் தம்மைப் பெரிதும் கவர்ந்தன என்றும், மிக உயரிய பதவியைத் திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல் பெற்றவர் என்று தாம் அன்று கருதியது, இன்று உண்மையாயிற்று என்றும் கூறினார். சங்கரன் நம்பூத்ரிப்பாடு ராஜாஜி அவர்களின் ஆசியைப் பெற்றுவிட்டார்! எந்தக் கட்சியாயினும் அரசியலுக்கு முக்கியமாக வேண்டியது, குணமும் சீலமும்தான். அரசியல் என்பது மிகவும் அபாயகரமானது. அது மறைந்து கிடக்கும் ஒரு விஷம். மிகச் சிறந்த மனிதர்களின் ஒழுக்கத்தைக்கூட அது குலைத்து விடுகிறது. அரசியலைக் காட்டிலும் ஒழுக்கம்தான் பெரியது. ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வந்தால், நாம் கொண்டுள்ள கொள்கையை அடைவதற்கு அது பலம் அளிக்கும் என்று பொதுவாக வற்புறுத்தி ராஜாஜி அவர்கள் கூறியதை கோகலே மண்டபம் நிறைந்து வழியும்படி கூடியிருந்த கூட்டம் அமோகமான உற்சாகத்துடன் கைதட்டி ஆரவாரித்து ஆதரித்து வரவேற்றது.

அருள் வாக்கு

மற்றவர்களுடைய குறைபாடுகளைப் பற்றிப் பேசக் கூடாது என்பது ஒரு நல்ல விதி. ஆனால் மற்றவர்களுடைய நற்குணங்களைப் பற்றிப் புகழ்வது நன்மை செய்யவல்லது. தண்டி என்ற மகாகவி, தாம் எழுதிய 'அலங்கார' சாஸ்திரத்தின் மங்களா சரண சுலோகத்தில் இந்த உண்மையை மிகப் பொருத்தமாக எடுத்துக் காட்டுகிறார்.

குண தோஷௌ புதோ க்ருண்ஹன்
இந்துஷ் வேளா விவேச்வர :
சிரஸா ச்லாகதே பூர்வம்
பரம் கண்டே நியச்சதி.

சுக்ல பட்சத்துச் சந்திர கலையை, அதனுடைய ஆஹ்லாதகாரமான குளிர்ச்சி கிரணங்களைப் புகழ்வதன் மூலம் பரமேச்வரன் தமது சிரஸில் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக் கொண்டார். ஆனால் ஆலகால விஷத்தைத் தம்முடைய கழுத்தில் மறைத்துக் கொண்டார். அதே போல் மற்றவர்களின் நற்குணங்களையும் பெருமைகளையும் பலர் அறியப் புகழ வேண்டும். அதே சமயம் அவர்களுடைய தோஷங்களைப் பற்றிப் பேசக் கூடாது. மறைத்து வைக்க வேண்டும்.

இதனால் மற்றவர்களிடம் காணப்படும் தோஷங்களைப் பாராமலே இருந்து விடுவது என்று அர்த்தமல்ல. வித்வான் என்று நாம் அடிக்கடி ஒரு பதம் உபயோகிக்கிறோம். எவனொருவன் மற்றவர்களின் குற்றங் குறைகளை உணருகிறானோ, அவனே வித்வான் என்று இதற்கு இலக்கணம் சொல்லி யிருக்கிறது. 'வித்வான் விபஸ்சித் தோஷக்ஞ :' என்று வித்வானுக்கு லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. தோஷத்தைத் தெரிந்து கொள்கிறவன் வித்வான் என்று இதற்குப் பொருள். நல்ல சங்கீதத்தையும், நல்ல சிற்பத்தையும், நல்ல விருந்தையும் எல்லோரும் ரசிக்கலாம். ஆனால் இவற்றில் குற்றங் குறைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அந்தந்த விஷயத்தில் திறமையுள்ளவனால்தான் முடியும். குற்றங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்; ஆனால் அவற்றைப் பற்றி மனம் போனபடி பேசுவது கூடாது. இப்படி வாய்விட்டு யோசனையின்றிப் பேசிக்கொண்டே போனால், நம்மையறியாமலே அவதூறு பேசுவதில் கொண்டுவிட்டு விடும்.


மற்றவர்களைப் பற்றிப் புகழ்ச்சியாகப் பேசும்போதும் சில விதிகளை அனுஷ்டிக்க வேண்டும். இதைப் பற்றி ஒரு சுலோகத்தில் சொல்லி யிருக்கிறது :

ப்ரத்யக்ஷே குரவ : ஸ்துத்யா :
பரோக்ஷே மித்ர பாந்தவா :
கார்யாந்தே தாஸ ப்ருத்யாச்ச
ந ஸ்வபுத்ரா : கதாசன.

ஆசாரியனையும் ஈசுவரனையும் அவர்கள் முன்னிலையிலேயே ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். இங்கு 'குரு' என்ற பதத்தில் ஈச்வரனும் அடக்கம். ஈசுவரனையும் குறிப்பிட்டதாகக் கொள்ள வேண்டும். நண்பர்களையும் உறவினர்களையும் அவர்கள் மறைவிலேதான் புகழ வேண்டும். வேலைக்காரர்களையும் தன்னை அண்டியுள்ளவர்களையும் அவரவர்கள் வேலையைச் செய்து முடித்தபின் புகழ வேண்டும். ஆனால் தன்னுடைய புத்திரனை அல்லது சிஷ்யனை அவன் முன்னிலையிலாகட்டும், மறைவிலாகட்டும், ஒரு போதுமே புகழக் கூடாது. புத்திரன் என்னும் பதத்தில் சிஷ்யனும் அடங்கியுள்ளது. இதுவே சுலோகத்தின் பொருள்.

விரிவான பிரபஞ்சத்தைப் படைத்த பரமேச்வரனை எவ்வளவு துதித்தாலும் மிகையாகாது. நண்பர்கள், உறவினர்கள் விஷயத்தில் மறைவாகத்தான் அவர்களைப் பற்றிப் புகழ வேண்டும். அவர்கள் முன்னிலையில் அவ்வாறு செய்தால் உண்மையான புகழுரைகள் வெறும் முகஸ்துதியாக மாறிவிடக் கூடும். அவர்களைப் பற்றி மறைவில் உயர்வாகப் பேசலாம். நீங்கள் சொன்ன புகழ் வார்த்தைகளை மற்றவர்கள் மூலமாக அவர்கள் கேட்டுக் கொள்ளட்டும். ஆனால் அவர்கள் காதுக்கு எட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் நீங்கள் அப்படிப் பேசக் கூடாது. அவ்வாறு செய்தால் உங்கள் புகழ்ச்சியில் இருக்க வேண்டிய உண்மை பாவம் குறைந்து விடும். வேலைக்காரனை அவன் வேலை செய்து முடித்தபிறகே புகழவேண்டும், நாம் சவாரி செய்த பிறகு குதிரையைத் தட்டிக் கொடுப்பதைப் போல. ஆனால் புத்திரனாகட்டும், சிஷ்யனாகட்டும், நேரடியாகவோ மறைமுகமாகவோ, ஒருபோதும் அவர்களைப் புகழக் கூடாது. அவர்களுடைய குற்றங் குறைகளைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டும். அப்போதுதான் அவற்றைத் திருத்திக் கொள்ளுவார்கள்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சிகாமகோடிபீடம்



வெளிநாடுகளில் "கல்கி"

மத்திய கிழக்கில் உள்ள பல நாடுகளுக்கும் சென்ற பிறகு, நான் நேற்று முன் தினம் பாஹ்ரீன் வந்து சேர்ந்தேன். நான் சென்ற நாடுகளில் உள்ள இந்தியர் சங்கங்களில் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கு உள்ள இந்தியர்கள் தங்களுக்கே உரித்தான சிறந்த முறையில் என்னை அவர்களுடைய வீடுகளில் அழைத்து உபசரித்தார்கள். அவர்களின் பேரபிமானத்தைப் பெற்றுள்ள "கல்கி", இந்தியர்களுடைய வீடுகளிலும் சங்கங்களிலும் முக்கிய ஸ்தானம் வகிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

பாஹ்ரீன்
10—6—58 டி. வி. ராமானுஜம்

எங்கள் கதியென்ன?

அல்ஜீரியாவில் நடக்கும் அட்டூழியங்களையும், ஆப்பிரிக்காவில் நடக்கும் காட்டுமிராண்டி தர்பாரையும் இலங்கையில் நடக்கும் அநீதிகளையும் பற்றிப் பக்கம் பக்கமாகத் தலையங்கம் எழுதியுள்ள தங்களுக்கு, உங்கள் கண்ணெதிரே நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளுக்கு, இழைக்கப்பட்டுள்ள சொல்லொணுக் கொடுமையைக் காட்டவே இக்கடிதம் எழுதுகிறேன். இதுவரையில் கல்லூரிகளில் 'இண்டர்மீடியட்' என்று அழைக்கப்பட்டுவந்த இரண்டு வருடப்படிப்பைச் சென்ற ஆண்டிலிருந்து மாற்றி, முதல் வருடத்தை 'பிரி யுனிவர்சிடி' என்றும், இரண்டாம் ஆண்டை 'பிரி புரபஷனல்' என்றும் அமைத்தார்கள். நானும் என் நண்பர்களும் இண்டரில் 1957 மார்ச்சில் தோல்வியடைந்து செப்டம்பரில் நூற்றுக்கு எழுபத்தைந்து மார்க் வாங்கித் தேர்ச்சி பெற்றேம். எங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி, சென்ற ஆண்டு 'பிரி மெடிக்க'லில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களில் 50 சதவீதம் பேர்களை நிறுத்தி அந்த ஐம்பது சதவீதத்துக்கு இண்டர் தேறிய எங்களை எடுத்துக் கொள்வது என்பது. ஆனால் 'பிரி மெடிகல்' மாணவர்களில் 97·2 சதவீதம் தேர்வு கொடுத்ததோடு, மீதமிருந்த பத்து இடங்களையும் மைசூர் மாணவர்களுக்குக் கொடுத்து, எங்களுக்குக் கைவிரித்து வாக்கைக் காற்றிலேவிட்டுவிட்டார்கள். ஓராண்டு வீணுக்கவும் துணிந்து 'பிரிமெடிக்க'லில் சேருகிறேம் என்றால் அதற்கும் வழிவிடவில்லை. இந்நிலையில் எங்கள் கதி என்ன?

செய்யூர்
11-6-58 மா. போ. தசரதன்

மின்சார வெட்டு

மின்சார போர்டார் இப்பொழுது 75 சதவிகிதம் மின்சார வெட்டு செய்து விட்டார்கள். தற்பொழுது அத்தியாவசியமான தொழிற்சாலைகளுக்கும் இது பொருந்தும். இந்த மின்சார வெட்டினால் மிகவும் பாதிக்கப்பட்டது தேயிலைத் தொழிற்சாலை. தேயிலைப் பச்சை இலையைச் செடியில் விட்டு வைத்தாலும் அது முற்றி உபயோகமில்லாமல் போய் விடும். பறித்துத் தொழிற் சாலைக்குக் கொண்டு வந்தாலும் உடனே அரவை செய்து பக்குவம் செய்யாவிடில் பச்சை இலை வறண்டும், அழுகியும், உபயோகமில்லாமல் போய் விடும். இதன் காரணமாக எல்லாத் தரப்பட்டவர்களுக்கும் மிக நஷ்டம் ஏற்படுவதுடன் நாட்டுக்கே நஷ்டம் உண்டாகும்.

நீலகிரி
13—6—58 குர்னைத இ. மாதன்

மீண்டும் பழைய யமன்

பி. வி. ஜி யின் தீமைகளைக் குறித்துத் தாங்கள் பல அறிவுரைகள் கூறி யிருக்கிறீர்கள். ஆனால் மீண்டும் தற்போது இவ்வூரில் சினிமா விளம்பரம் மூலமும் பிரசார வான் மூலமும், பி. வி. ஜி. போட்டுக் கொள்ளுமாறு அரசியலார் விளம்பரமும் பிரசாரமும் செய்வது விந்தையாக இருக்கிறது. "பழைய யமனுக்கு" இப்பகுதியில் எத்தனை குழந்தைகள் பலியாகுமோ? அதனால் மக்கள் பீதி அடைந்திருக்கின்றனர்.

கள்ளக்குறிச்சி
18—6—58 கு. கிருஷ்ணமூர்த்தி

விளக்கு வசதி


செய்யார் மாவட்டம், பெரிய கோவில் கிராமத்தில் விளக்குகள் கிடையாது. இரவில் ஒரே இருட்டு மயமாய் இருக்கிறது. பெண்களும் குழந்தைகளும் நடமாடவும் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இம்மாதிரியாக இருபது ஆண்டுகளாக இருந்து வருகிறது. இதை எவரும் கவனிக்கவில்லை. எங்கள் ஊரில் பஞ்சாயத்துப் போர்டு கிடையாது. எத்தனையோ முறை அதிகாரிகளுக்குத் தெரிவித்தோம்; கவனிப்பாரில்லை.

பெரிய கோவில்
14—6—58 மு. பாலகிருஷ்ணன்

மின்சாரவெட்டின் விளைவு

தென்னிந்திய ஜின்னிங்-பிரஸ்ஸிங் பாக்டரி தொழில் வருடத்தில் குறிப்பிட்ட ஒரு சில மாதங்களில்தான் நடைபெறும். மின்சார வெட்டு ஏற்படும் காலமும், பருத்தி அரவைத் தொழில்கள் நடைபெறும் காலமும் துரதிர்ஷ்டவசமாக ஒன்றுக வருகின்றன. இந்தக் குறையை நீக்குவதற்கு மின்சார வெட்டிலிருந்து விதிவிலக்கு கோரி 2-2-58 ல் மதுரையில் நம் மாகாண முதல் அமைச்சரையும் சங்கத் தூதுக் குழுவினர் நேரில் பேட்டி கண்டு, குறைகளை மகஜர் மூலம் தெரியப்படுத்தினேம். நாளது தேதி வரை எங்கள் குறைகளை நிவர்த்திக்க யாதொரு நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை.

கோவில்பட்டி
12—6—58 ஆர். கிருஷ்ணமூர்த்தி



பஸ்களும் நோயும்

நான் இந்த மாதம் ஒன்பதாம் தேதி இங்கட்கிழமை மாலையில் சுமார் ஆறு மணிக்குத் தண்டையார்ப் பேட்டைக்கு மயிலாப்பூரிலிருந்து செல்லும் நான்காம் நம்பர் பஸ்ஸில் லஸ்ஸிலிருந்து ராயபுரம் சென்றுவரப் புறப்பட்டேன். ஏறினதும் பெண்கள் உட்காரும் இடத்திலும், ஆண்கள் உட்காரும் ஓர் இடத்திலும் சொல்லத் தகாதபடி எவரோ வாந்தி எடுத்து வைத்திருந்தார்கள். ஜனங்களோ கும்பலாக பஸ்ஸில் ஏறிவிட்டார்கள். அந்த வாந்தி எடுத்த இடத்தில் ஜனங்கள் எப்படி உட்காருவார்கள் என்ற எண்ணம் கண்டக்டருக்கு ஏற்படவில்லை. நாற்றமோ சகிக்க முடியாமல் இருந்தது.

கண்டக்டரோ ஜனங்களை உட்காரும்படி வற்புறுத்த ஆரம்பித்து விட்டார். வாந்தியெடுத்தவருக்கு ஏதாவது தொற்று நோய் இருந்தால் பஸ்ஸில் உட்காரும் ஜனங்களுக்கும், டிரைவருக்கும் கண்டக்டருக்கும் அந்த வியாதி பரவி விடாதா?

சென்னை
13-6-58

வி. ஜுஸ்பன்

பிரயாணிகள் படும்பாடு!

துறையூரிலிருந்து திருச்சி ஜங்ஷன் வழியாக வெளியூர் செல்கிறவர்களும், திருச்சி ஜங்ஷன் வழியாகத் துறையூர் வருகிறவர்களும் திருச்சி ஜங்ஷனுக்குப் பக்கத்திலே பஸ் ஸ்டாண்ட் இல்லாததால் தங்கள் பெட்டி படுக்கை முதலியவைகளுடன் வெகுவாக அல்லல்பட்டு நகர பஸ்ஸில் இடம் பிடித்து மெயின்கார்ட் கேட் வந்து, அங்கிருந்து வண்டி வைத்து வெளியூர் பஸ் ஸ்டாண்ட் வந்து துறையூர் பஸ்ஸைப் பிடிக்க வேண்டியிருக்கிறது. துறையூரில் சாமான் போக்குவரத்துக்கு மட்டும் அவுட் ஏஜன்ஸி இருக்கிறது. அதைப் பிரயாணிகள் போக்குவரத்துக்கும் விஸ்தரித்தால்வசதியாயிருக்கும்.

துறையூர்
16—6—58

வா. கோ. பா.

இருந்து பயன் என்ன?

எங்களூர் பஞ்சாயத்து போர்டு ரேடியோ 'பாட்டரி'யின் உதவியால் வேலை செய்கிறது. ஒவ்வொரு தடவையும் வரும் 'பாட்டரி' இருபத்தோரு நாட்களுக்கு வரும். அதன் பிறகு, பதினேழு அல்லது பதினெட்டு நாட்களிலேயே 'பாட்டரி'யின் சக்தி குறைந்து ரேடியோ பாடாமல் நின்றுவிடும். ஆனால் இம்முறையோ சேர்ந்தாற்போல் பத்து நாட்களாக 'பாட்டரி'யே வரவில்லை. இவ்விதம் 'பாட்டரி'யே வராமல் இருந்தால், ரேடியோ எங்களூரில் இருப்பதும் ஒன்றுதான், இல்லாமலிருப்பதும் ஒன்றுதான்.

வன்னிவேடு
17—6—58

ஆ. துரைசாமி

கருணை பிறக்குமா?

சென்ற 1-4-55க்குப் பின் வேலையிலிருந்து ஓய்வுபெற்று விலகிய பல ஆரம்ப ஆசிரியர்களின் பென்ஷன் விண்ணப்பங்களை அவர்கள் சர்வீஸில் ஏற்பட்ட முறிவுகள் காரணமாகச் சர்க்கார் நிராகரித்து விட்டார்கள். பென்ஷன் விதிகள் 10-Bல் சொல்லியபடி மேற்படி முறிவுகளுக்கு விலக்களித்து, பென்ஷன் வழங்க அதிகாரமிருந்தும் சர்க்கார் இப்படிச் செய்திருக்கிறார்கள். திரும்பவும் ஏப்ரல் 1958ல் மேற்படி ஆசிரியர்கள் வேலை செய்த காலத்தில் ஏற்பட்ட முறிவுகளுக்கு விலக்களித்து இவர்கள் வேலை செய்த மொத்த காலத்துக்கு பென்ஷன் வழங்க சர்க்கார் முடிவு செய்திருப்பதாகப் பத்திரிகைகளில் வெளியாயிற்று. மாதங்கள் இரண்டு ஆகியும் மேற்படி உத்தரவு வரவில்லை.

மாம்பலம்
17—6—58

ஆர். சுப்பிரமணிய அய்யர்

எது முக்கியம்?

என் மகன் எம். ராமச்சந்திரன் மூன்றாவது வருஷாந்திரப் பரீட்சையில் பெற்ற மார்க்குகள் வருமாறு:- பொதுத் தமிழ் 44, சிறப்புத்தமிழ் 42, விஞ்ஞானம் 46, சமூக அறிவு 45, கணக்கு 47, ஆங்கிலம் 16. ஆனால் ஆங்கிலத்தில் 20 மார்க்குகள் வாங்காத குறையினால் தேர்ச்சி பெறவில்லை. அதேசமயம் கணக்கில் 20க்கும் குறைவாக வாங்கிய பிள்ளைகள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆங்கிலம் முக்கியமா, கணக்கு முக்கியமா என்பதுதெரியவில்லை. அவன் சைதாப்பேட்டை கார்ப்பொரேஷன் உயர்நிலைப்பள்ளி மாணவன்.

சென்னை
14—6—58

சுபத்ரா மாதவன்

கிராமங்களுக்கு வைத்திய உதவி

திருநெல்லை மாவட்டத்தில் அம்பலசேரி ஒரு சிறிய கிராமம். உடல் நலக் குறைவோ பிரசவ வேதனையோ ஏற்பட்டால் வைத்திய உதவியை நாடிச் சுமார் ஐந்து மைல் தூரமுள்ள நாசரேத் ஆஸ்பத்திரிக்குத் தான் போக வேண்டும். கிராமாந்திரங்களில் வைத்திய வசதியில்லாது பொது ஜனங்கள் படும் கஷ்ட நஷ்டம் சொல்லி முடியாது. ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கிராமாந்திரப் பகுதிகளில் மக்களின் நோயற்ற வாழ்வுக்காக நமது அரசாங்கத்தார் வகுத்துள்ள அநேக நல்ல திட்டங்க ளெல்லாம் செயல் முறையில் இன்னும் வரவில்லை.

அம்பலசேரி
9—6—58

மு. மா. முத்தையா

★ [பாவை விளக்குத் தொடர் கதையின் முடிவைப் படித்து விட்டு நூற்றுக் கணக்கான நேயர்கள் பாராட்டுக் கடிதங்கள் எழுதி யிருக்கிறார்கள். அவற்றில் சில கடிதங்களை வெளியிட்டிருக்கிறோம். பாராட்டுக் கடிதம் எழுதிய நேயர்களுக்கெல்லாம் நமது நன்றி. —ஆசிரியர்]

பாவை விளக்கு

தமிழ்ச் செல்வங்களுள் ஒன்றெனவைத்துப் போற்றத் தக்கது திரு அகிலன் ஆக்கித் தந்த 'பாவை விளக்கு' எனும் பனுவல்.

புதினம் - புனை கதை என்ற பெயரில் எத்தனையோ நெடுங்கதைகள் வருகின்றன. 'பாவை விளக்கு' என்ற சந்தனச் சோலையிலிருந்து வரும் மணத்துக்கு ஈடாமோ மற்றவை?

பாவை உமா, மங்கை நல்லாள் தேவகி, இல்லாள் கௌரி, செம்பவளச் செங்கமலம் ஆகிய பைங்கிளிகளிடையே, தணிகாசலம் என்ற மனிதனை நடமாட விட்டு ஆசிரியர் உணர்ச்சியூட்டும் உயிர்ச் சித்திரம் தீட்டி, பல திங்களாக வாசகர்களை உவகையில் ஆழ்த்தினார்.

ஒப்பற்ற இந்நவினம் முடிந்து விட்டதை எண்ணி வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஆக்ரா
18—6—58
[ஆன்செல்ம் வாஸ்

அகிலன் அவர்களின் [அற்புதமான தொடர் நவினம் 'பாவை விளக்கு'! நாவலில் வந்த அத்தனை கதா பாத்திரங்களும் ஆயிரமாயிரம் வாசகர்களின் உள்ளத்தில் அழியா இடம் பெற்றவர்களாகி விட்டார்கள். உமா ஒவ்வொருவருடைய இதயத்திலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் பாவை விளக்கு.

சரோடு
19-6-58
கு. அருணாசலம்

பத்து மாத காலமாக எங்களைப் பரவசப் படுத்திய 'பாவை விளக்கு' இவ்வாரத்தோடு முற்றுப் பெறுகிறது. இதை நினைக்க வருத்தமாகத்தான் உள்ளது. அகிலனின் சிரஞ்சீவித்தன்மை பெற்ற சீரிய சிற்பம்தான் இந்தப் பாவை விளக்கு! வாழ்வைப் பிழிந்து கொடுத்த இலக்கியப் பெருஞ் செல்வம்தான் இந்தப் பாவை விளக்கு! உமா மறைந்து விட்டாள்; ஆனால் அவளை எங்களுக்கு அறிமுகப்படுத்திய அகிலனை மறக்கமுடியாதே.

சேலம்
19—6—58
ஆர். எஸ். ராஜன்

திரு அகிலனின் அற்புதப் படைப்பு ''பாவை விளக்கு.'' உமா பாவைவிளக்காய்த் தணிகாசலத்தின் உள்ளத்தில் மட்டும் ஒளிவீசவில்லை; கல்கி நேயர்களின் உள்ளங்களிலும் அணையா விளக்காய் ஒளிபரப்புகிறாள்!

இளம்பிள்ளை
19—6—58
ரா. அமிர்தலிங்கன்

பாவை விளக்கின் ஜீவஜோதியைக் கண்டேன். ஆம், ஜீவன் முடிந்து விட்டாலும் அதன் ஒளி என்றும் எங்கும் நிறைந்திருக்கும். மீண்டும் நமது கல்கியில் அகிலனது எழுத்தைக் காண்போம் என்பதில் பெருமகிழ்ச்சி.

சென்னை-7
19—6—58
ஏ. ஆர். ராஜாமணி

கடந்த பல ஆண்டுகளாக நான் 'கல்கி'யில் வரும் தொடர்கதைகளை விடாமல் படித்து வருகிறேன். 'பாவை விளக்'கைப் போல் இவ்வளவு உணர்ச்சி மிகுந்த, என் உள்ளம் கவர்ந்த தொடர்கதை வேறு எதுவுமே இல்லை. இவ்வளவு விரைவில் முடித்து விட்டீர்களே? இந்தக் கதையைத் திரைப்படமாக வெளியிட்டால் என்ன?

ஸ்ரீரங்கம்
19-6-58
எஸ். ஏ. சண்முகம்

[நேயர்களின் உள்ளம் கவர்ந்த பாவை விளக்குக் கதை திரைப்படமாக உருவாகி வருகிறது என அறிகிறோம். —ஆசிரியர்]

"கல்கி"யின் 17 ஆண்டு காலச் சரித்திரத்திலேயே பொற்காலமெனக் கூறவேண்டிய காலம், "பாவை-விளக்கை" ஏற்றித் தந்த காலம்; அது ஒளி வீசிய காலம். பாவை விளக்கை"ப் பத்திரிகை மூலம் அளித்த உங்களுக்கு எனது நன்றி. உயிருக்கு உணர்வளித்தது போன்று ஓவியம் தீட்டிய "வினு"வுக்கும் நன்றி. தணிகாசலத்தையும் உமாவையும் தரணிக்கு அளித்த திரு அகிலன் அவர்களுக்கு உள்ளம் கனிந்த நன்றி.

வலங்கைமான்
19—6—58
அப்துல்லா

திரு அகிலனின் அற்புத சிருஷ்டி "பாவை விளக்கு" முடிந்ததை நினைத்து ஏங்குகிறேன். ஆசிரியர் அநியாயமாக "உமா"வைக் கொன்று விட்டார். அவளைத் தாலியுடன் வாழ விட்டிருந்தால் என்ன? ஆசிரியரது "நெஞ்சின் அலைகளை" இன்னும் ஒய்ந்த பாடில்லை. பாவம், தணிகாசலம்! அவனுக்கு அமைதி எங்கே? ஆனால் "உமா" என்றென்றும் அணையாப் பாவைவிளக்காய் வாசகர்கள் உள்ளத்தில் ஒளி வீசுவாள்.

மகாதானபுரம்
19—6—58
எம்.என்.எஸ். ராஜன்

பாவை விளக்கை ஏனோ அன்பர் அகிலன் முடித்து விட்டார் என்று நினைக்கச் செய்கிறது. அவ்வளவு அற்புதம் கதை!

எனக்குப் பிடித்த பாத்திரங்கள் உமாவும், கௌரியும்தான். இவர்களிருவரும் அன்பைத் தணிகாசலத்தின்மீது சொரியும்போது திகைப்பையே உண்டாக்குகிறது. நல்ல அழகியாய், குறும்பு நிறைந்தவளாய், கற்பனையுள்ளம் கொண்டவளாய், பெண்மையைப் பெற்றவளாய் உமாவை எப்படி அகிலனால் காட்ட முடிந்தது? உமாவையும் மீறிக் கௌரியை சிருஷ்டித்திருக்கிறார் அகிலன்.

வேலூர்
19—6—58
சி. பி. சுப்பிரமணியம்



ஜூலை 11ம் முதல்
வலம்புரி பிக்சர்ஸ்
திருமணம்
கலையுலகம் இதுவரை
கண்டிராத கலர் நடனங்களுடன் கூடிய
ஒரு குடும்பப் படம்
டைரக்ஷன்
வசனம்
சங்கீதம்
A. பீம்சிங் · வலம்புரி சோமநாதன் · எஸ்.எம். சுப்பையா நாயுடு



36

பொறாமைப்படுகிற மனிதன் நரக வாழ்வு வாழ்வான். எவ்வளவு செல்வம் எவ்வளவு வேறு நற்குணங்கள் இருந்தும் பயனில்லை.

அழுக்காறு எனஒரு
பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து
விடும்.

அழுக்காறு என்று சொல்லப்படும் குற்றம் தனிப் பண்பு பெற்ற குற்றம். வேறு எவ்வளவு நல்ல அம்சங்கள் ஒருவன் சுபாவத்தில் இருந்த போதிலும் இந்தக் குற்றம் அவனைத் தீயில் தள்ளும். இதை அழுத்தத்தோடு விளக்க "ஒரு பாவி" என்றார்.

திருச்செற்று—திருவை அழித்து. அவனுடைய செல்வத்தையும் நல்ல லக்ஷணங்களையும் அழித்து. தீ—நரகம்; மரணத்துக்குப் பின் கிடைக்கும் தண்டனை. இம்மை வாழ்வும் நரகம் போலாகும். உய்த்து விடும்—செலுத்தி விடும்.

* * *

பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமைப்பட்டு யாரும் செல்வம் அடைந்ததில்லை. பிறர் சுகத்தையும் செல்வத்தையும் கண்டு பொறாமைப் படாமல் மகிழ்ந்தவர்கள் யாரும் நஷ்டம் அடைந்ததுமில்லை. இது எவ்வளவு உண்மை, எவ்வளவு எளிதில் எல்லாரும் காணக் கூடிய உண்மை! ஆயினும் பிறன் ஒருவன் பாக்கியத்தைக் காணும்போது இந்த உண்மையை மறந்து விடுகிறோம். மறந்து விட்டுப் பொறாமைப் படுகிறோம். அதனால் ஒரு லாபமும் இல்லை. துன்பம்தான்.

அழுக்கற்று அகன்றாரும்
இல்லை ; அஃது இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும்
இல்.

அழுக்கற்று—அழுக்காறு செய்து. அதாவது பொறாமைப்பட்டு. அகறுதல்—செல்வமோ சுகமோ அதிகமாதல்.

பொறாமைப் பட்டுச் சுகமோ செல்வமோ யாரேனும் அடைந்தது உண்டா? இல்லை. பொறாமைப்படாமல் மற்றவர்களுடைய சுகத்தைப் பார்த்துப் பொறுத்தவர்கள் யாரேனும் அதனால் நஷ்டம் அடைந்ததுண்டா? இல்லை.

அஃது இல்லார்-அழுக்காறு செய்யாதார்; பெருக்கத்தின் தீர்தல்—தம்முடைய செல்வம் குறைதல்.

ஒரு பயனும் தராத இந்தக் குற்றத்திற்கு இடம் தருகிறார்களே மூடர்கள். இடம் தந்து அனாவசியமான துன்பத்தை விளைவித்துக் கொள்கிறார்களே என்று முனிவர் தம்முடைய தனிப் பாணியில் சொல்லுகிறார்.

பிறருடைய பொருளை வெளவும் யோசனை வேறு, பொறாமை வேறு. களவும் மோசமும் செய்து பிறருடைய சொத்தை அடையப் பார்க்கும் குற்றத்தை இந்தக் குறள்களில் எடுத்துக் கொள்ளவில்லை. பிறர் ஆக்கத்தைக் கண்டு சகிக்காமல் உள்ளத்தில் வேதனைப்படும் குற்றத்தைத்தான் இங்கே முனிவர் கண்டிக்கிறார். அதைப் பற்றிச் சொல்லுகிறார்: இந்த வேதனையை ஏன் நீயே உண்டாக்கிக் கொள்கிறாய்? இதனால் உனக்கு என்ன பயன்? உன் சொத்து இதனால் வளராது. வீண் துன்பம் தான் என்கிறார். பிறர் சொத்தை அபகரிக்க முயற்சி செய்தால் அதற்கு ராஜ தண்டனையை அனுபவித்து ஓரளவு பாவத்தைத் தீர்த்துக் கொள்ளலாம். களவிலும் மோசத்திலும் இறங்க எண்ணாதவர்களுங்கூடப் பிறனுடைய சுகத்தையோ ஆக்கத்தையோ கண்டு உள்ளத்தில் வேதனைப்படுகிறார்கள். அந்தப் பாபத்துக்கு ராஜ தண்டனை இல்லை. ஆயினும் அது பெரும்பாவம் என்கிறார் முனிவர். பொறாமைப்படுதல் பொருளற்ற பாவம், அதைச் செய்யாதே என்கிறார்.



அவன் அமரன்

காந்தன்

நீண்ட நாள் நோய்வாய்ப்பட்டிருந்து கஞ்சியே சாப்பிட்டு வந்த ஒருவனுக்கு, ''இனி நீ கஞ்சி சாப்பிட வேண்டியதில்லை. ரொட்டி சாப்பிடலாம்'' என்று டாக்டர் கூறினால் அவன் அடையும் குதூகலத்துக்கு எல்லையேது!

சினிமாத் தியேட்டரில் வேலை பார்க்கிறவனுக்கு, அந்தத் தியேட்டரில் வெகு நாட்களாக ஓடும் படம் நிறுத்தப்பட்டுப் புதுப் படம் வருகிறது என்றால் எத்தனை உற்சாகம் உண்டாகும்?

பிப்பின்ஸ் பிலிம்ஸாரின் தயாரிப்பான ''அவன் அமரன்'' படம் பார்த்ததும், எனக்கு மேலே கூறிய நிலைதான் ஏற்பட்டது.

வெறும் காதலையும், வயல் வரப்புகளில் வேலை செய்பவர்களின் சண்டை சச்சரவுகளையும், இன்னும் பொருளற்ற எத்தனையோ சம்பவங்களையும் புகுத்திப் படமாக்கப்படுவதை நாம் பார்த்து வந்திருக்கிறோம். இந்தச் சமயத்தில், முற்றிலும் மாறுபட்ட சம்பவங்களைக் கொண்ட ஒரு படத்தைப் பார்க்கும்போது மனதுக்கு ஒரு மாறுதல் ஏற்படுகிறது. எந்தத் துறையிலும் யாரும் மாறுதலை எதிர்பார்ப்பது இயல்புதானே!

கதாநாயகன் அருளையும் கதாநாயகி வில்லியையும் அவர்களுடைய பிள்ளைப் பிராயத்திலேயே பார்த்து விடுகிறோம். மில் முதலாளி சந்தோஷத்தின் மகள் வில்லிக்கு, அநாதை மரியம்மாளின் ஓரே மகன் அருளிடம் அன்பும் அநுதாபமும் ஏற்பட்டுக் காலப்போக்கில் காதலாகப் பரிணமிக்கிறது. ஆனால், அருள் அந்தக் காதலுக்கு இடங்கொடாமல் ஒதுங்கியிருக்கவே முயல்கிறான்; சமூக சேவையில் அவன் கொண்டுள்ள நாட்டம் அவன் முயற்சிக்கு உறுதுணையாயிருக்கிறது. ஆரம்பம் முதலே மில் முதலாளி சந்தோஷம் இந்த நட்பை அழிக்க முயல்கிறான். பிறகு, இங்கிலாந்து சென்று பாரிஸ்டராகத் திரும்பிய அருளையும் அவனது தொழிற் சங்க நடவடிக்கைகளையும் அடியோடு தீர்த்துக் கட்ட முற்படுகிறான்.

டி. எஸ். பாலையா மில் முதலாளி சந்தோஷத்தின் பாகத்தை ஏற்று வெளுத்து வாங்கியிருப்பதில் அதிசயம் இல்லை. இம்மாதிரி பாகங்கள் ஏற்கெனவே பல முறையும் இவரால் வெளுத்து வாங்கப்பட்டிருக்கின்றன! இந்தப் படத்தில் அவரது நடிப்பைப் பாராட்டுவதோடு அவர் வைத்திருக்கும் நறுக்குமீசையை மிகவும் பாராட்ட வேண்டும். அது அவர் முக பாவத்தையே மாற்றி, ஒரு புதிய தோற்றத்தை அளித்து விடுகிறது!

மரியம்மாளாக நடிக்கும் கண்ணம்மாள் மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். கார் விபத்தில் காலை இழந்து கட்டையின் உதவியோடு நடந்து அவதியுறும் புது மாதிரி வாய்ப்பில் அவர் இந்தப் படத்தில் உணர்ச்சிப் பெருக்கோடு நடித்திருக்கிறார்.

தன் மகன் படித்துப் பட்டம் பெற்று மாஜிஸ்திரேட்டாவான்; ஜட்ஜாவான்; பெரிய பெரிய உத்தியோகங்களெல்லாம் கிடைக்கும் என்று கனவு காணும் ஏழைத் தாயின் பாகம் அவருக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறது.

சின்னப் பையன் அருளாக நடிக்கும் சிறுவனும், சிறுமி வில்லியாக நடிக்கும் பேபி உமாவும் மிகவும் இயல்பாக நடித்திருக்கிறார்கள். அவர்கள் பெரியவர்களானதும், கே. ஆர். ராமசாமியாகவும், ராஜசுலோசனாவாகவும் மாறி விடுகிறார்கள்.

கே. ஆர். ராமசாமி இந்தப் படத்தில் ஒரு தர்மசங்கடமான பாத்திரத்தை ஏற்றிருக்கிறார். காதலை வெறுத்துக் கடமையில் கவனம் செலுத்த வேண்டும், ஆனால் காதலியை அடியோடு வெறுக்கக் கூடாது - நன்றாய் நடித்திருக்கிறார் ராமசாமி.

முதலாளியினால் வைக்கப்பட்ட தீவிபத்தில் கால் வெந்து அவதிப்படும் நேரத்திலும் பாட்டாளி மக்களின் எழுச்சியிலேயே நினைவை இருத்தி, இறுதியில் உயிருக்கும் துணிந்து அவர்களுக்கு நேர இருந்த விபத்தைப் போக்கித் தன் உயிரைத் தியாகம் பண்ணிய வரையில் அவருடைய நடிப்பில் உயிர்த் துடிப்பைக்


காண முடிகிறது. அவரது பாட்டைச் சொந்தக் குரலில்கேட்க முடிகிறது.


ராஜசுலோசனா விஸ்வியாகவே மாறி விட்டார். சோகம், இன்பம் ஆகிய இரண்டு உணர்ச்சிகளையும் மாறி மாறி ஏற்று மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். ஆனால் அவர் ஆண் உடையில் தோன்றி நடனமாடுவது கோரமாயிருக்கிறது. இங்கிலாந்துக்குப் போன அருளை நினைத்து ஏங்கி, பூகோள உருண்டையை உருட்டி விட்டு, கற்பனையில் அருளுடன் சேர்ந்து நடனமாடுவதாகக் காணும் காட்சி மிகவும் நன்றாயிருக்கிறது.

கிறிஸ்தவப் பாதிரியாக வரும் எஸ். வி. சுப்பையாவுக்கு வேஷப் பொருத்தத்தோடு நடிப்புத் திறமையும் இருக்கிறது. சாந்தமாகப் பேசி, சமத்துவ நோக்கோடு பார்த்து மிகவும் நன்றாக நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தின் கதை, வசனம் அமைத்திருப்பவர் நாகர்கோயில் எஸ். நாகராஜன் என்று அறிந்து மிகவும் வியந்து மகிழ்ந்தேன். ஒரு தமிழ் எழுத்தாளர் எழுதிய கதை தமிழ்ப் படமாக்கப்பட்டிருப்பதில் வியப்பு ஏற்படுவது இயல்புதானே? சாதாரணமாக ஒரு தமிழ்ப் படத்துக்கு ஹிந்தி, மராத்தி ஆசிரியர்களின் கதை தான் பெரும்பாலும் மூலக் கதையாக இருப்பது வழக்கம்! நாகர்கோயில் எஸ். நாகராஜன் கதையையும் வசனத்தையும் நன்றாகவே எழுதி யிருக்கிறார்.

இப்படத்தின் பாடல்கள் என்னவோ சுவாரஸ்யமாயில்லை. முன்பு ''வேலைக்காரி'' படத்தில் கேட்ட கே. ஆர். ராமசாமியின் பாட்டுகள் இன்னும் செவிகளில் ஒலிக்கின்றன. ஆனால் இந்தப் படத்தின் பாடல்கள் எனக்குத் தியேட்டரிலேயே மறந்துபோய் விட்டன. மேலும், பாட்டுக்களின் ஒலிப்பதிவு பல இடங்களில் பயங்கரமா யிருக்கிறது. அந்தச் சத்தத்தையும் மீறி நல்ல பாட்டை எப்படிக் கண்டு பிடிப்பது?





சில குறைகள்

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்க மறுப்பது, அதன் காரணமாக எழும் அவர்களது எழுச்சியை அடக்க முற்படுவது முதலியவைகளை யெல்லாம் நாம் நேரில் பார்த்து வருகிறோம். அத்தகைய காட்சிகளை நாம் இன்று காண்பது போலவே படமாக்க வேண்டும். இந்தப் படத்தில் அந்த இடங்களிலெல்லாம் சரியான கவனம் செலுத்தப்படவில்லை. இத்தகைய கட்டங்களை மேல்நாட்டுப் படங்களில் பார்க்கும்போது மெய்சிலிர்த்து விடுகிறது. ஏதோ பெரும் புரட்சி உருவாவதை அப்படியே காண முடிகிறது. நம் படங்களிலும் அம்மாதிரியான காட்சிகளைக் காட்ட முடியாது என்பதற்கில்லை. படம் தயாரிப்பவர்கள் சிறிது முயன்றால், இக் குறைகளைத் தவிர்க்கலாம்.

மில் முதலாளியின் கொடுமையைக் காட்டும்போது, தொழிலாளர் எழுச்சியைத் தடுக்கப் பாலத்தில் வெடி வைப்பது, வெடியைத் தகர்த்தெறிந்த அருளைத் துப்பாக்கியினால் சுட்டுவிட்டு ஓடுவது ஆகியவையெல்லாம் 'வெறும் நாடகம்' போலாகி விடுகின்றன. இவையெல்லாம் நடக்கக் கூடியவைதானா என்று ஒரு சந்தேகம் தோன்றித் திரைக் கதையின் சுவையைக் குறைத்து விடுகிறது.


அருள் இறந்தபின் இறுதிச் சடங்குகளும், மரியம்மாவின் கதறல்களும் அடிமேல் அடியாயிருக்கின்றன. அவைகளை எடுத்து விட்டு, வெற்று பிலிமின் பல நூறு அடிகளை மிச்சப் படுத்தி யிருக்கலாம்.

இப் படத்தின் டைரக்ஷன் பொறுப்பை ஏற்று எஸ். பாலசந்தர் மிகவும் திறமையாகத் தம் பணியைச் செய்திருக்கிறார். அருள் வீடு தீப்பற்றி எரியும்போது அவரது திறமை மிகவும் பயனளித்திருக்கிறது. உண்மையில் தீப்பற்றியதுபோலவே தோன்றுகிறது.

பாபுலர் ரிலீஸின் முதல் வெளியீடான ''அவன் அமரன்'' ஒரு நல்ல படம். தொழிலாளரைப் பற்றிய பழைய கதைதான் என்றாலும் நன்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

விளையாட்டு மன்னர்கள்: 15

மகாராஷ்டிரம் வென்றது



சீசாப் கதைகளில் ஒற்றுமையின் பலத்தைப் பற்றி விளக்க ஒரு கதை உண்டு; தனித்த ஒரு குச்சியை எளிதில் ஒடித்து விடலாம். ஆனால் ஒரு கட்டுக் குச்சியை ஒடிப்பது இயலாத காரியமென்று. இந்த ஒற்றுமையின் பலம் வெற்றி பலித்ததைச் சென்ற இரண்டு வாரங்களுக்கு முன் கண்கூடாகப் பார்த்தோம்.

சென்னை ஹாக்கி கழகத்தின் ஆதரவில் சென்னை நகரசபை ஸ்டேடியம் மைதானத்தில் ஹாக்கிப் போட்டி நடைபெற்றது. இதில் இறுதியில் பம்பாய் ஹாக்கிக் குழுவினரும் மகாராஷ்டிர ஹாக்கிக் கோஷ்டியினரும் விளையாடினர். இரண்டு நாட்கள் வெற்றி தோல்வியின்றி இரு கட்சிகளும் பிரமாதமாகப் போட்டியிட்டன. ஒருவருக் கொருவர் சளைத்தவரில்லை என்பதை நிரூபித்தனர்.

மூன்றும் நாள் ஒற்றுமையின் பலத்தினால் மகாராஷ்டிர ஹாக்கிக் குழுவினர் பம்பாய் ஹாக்கி குழுவினரைத் தோற்கடித்தனர். பம்பாய் கோஷ்டியில் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் விளையாட்டுக்காரர்களான ஜெண்டில், பெருமாள் ஆகியவர்கள் விளையாடியும், பம்பாய் தோற்றுப் போய்விட்டது.

மகாராஷ்டிர ஹாக்கிக் குழுவினரது வெற்றிக்கு மூலகாரணமாக விளங்கியவர்கள் நால்வர். கோல்கீப்பர் திரு தாஸ் திறமையுடன் 'கோல்' போகாமல் தடுத்தார். திரு கதம் பந்தைத் தடுத்துத் தேக்கி எதிரியைக் 'கோல்' வலைவுக்குள் நுழைய விடாமல் செய்தார். சரித்திரப் பிரசித்திபெற்ற மன்னன் சிவாஜியின் பெயரைத் தாங்கிய இளைஞர் சிவாஜி விரைவாகப் பந்தை எதிர்க்கட்சிக்கு எடுத்துச் செல்லும் திறமையைக் காண்பித்தார். திரு பிள்ளை என்ற இளைஞர்,—மைதானத்தில் எப்பொழுதும் துரு துரு வென்று ஓடிக்கொண்டிருப்பவர்,—எதிரியின் மேல் ஒரு 'கோல்' அபாரமாகப் போட்டு, மகாராஷ்டிரத்துக்கு மாபெரும் வெற்றியைத் தேடித் தந்தார்.


ஹாக்கி விளையாட்டில் முக்கியமாக வேண்டியவை ஓட்டத் திறமை, இணைப்புச் சக்தி, பந்தை வாகவமாக எதிரிகளின் கையில் சிக்காமல் கொண்டு செல்லும் ஆற்றல், விடுவிடென்று தன் கட்சியினரிடம் பந்தை அடித்து எதிர்ப் பக்கம் முன்னேறுவது ஆகியவைதான். இத்தனை ஆற்றலும் மகாராஷ்டிர ஹாக்கிக் குழுவினரிடம் இருந்தன. அதனலேயே அவர்களுக்கு வெற்றி கிடைத்தது.

ஜூன் 13ந் தேதியன்று நடந்த இந்த இறுதிப் பந்தயப் போட்டிக்கு டாக்டர் யு. கிருஷ்ணாராவ் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள். வெற்றி பெற்ற மகாராஷ்டிரக் குழுவின் தலைவர் திரு பான்லோடுக்குப் பிரும்மாண்டமான வெள்ளிக் கோப்பையை அவர் வழங்கினார். பம்பாய்க் குழுவினருக்கு 'ரன்னர்' கோப்பைகளைக் கொடுத்தார். இந்த ஹாக்கி விளையாட்டுப் போட்டியைத் திறமையாக நிர்வகித்து நடத்திய சென்னை ஹாக்கி கழகக் காரியதரிசி திரு வரதராசன், உதவிக் காரியதரிசி திரு விக்டர் சைமன், ஹாக்கி பெடரேஷன் காரியதரிசி திரு நவாகிஷன் ஆகியவர்களைப் பாராட்ட வேண்டும்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இது நாள் வரையில் ஹாக்கி விளையாட்டில் ஒப்பாரும் மிக்காருமற்று இமயமலைச் சிகரம்போல் விளங்கிய இந்திய கோஷ்டியினருக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. ஆசிய ஹாக்கி வீரர் பதவியைப் பாகிஸ்தான் பெற்றுவிட்டது. இது இந்தியாவின் பெருமைக்கு இழுக்கைத் தேடித் தந்துவிட்டது. அதற்குக் காரணத்தை நம் பாரதப் பிரதமர் நேரு விளக்கியிருக்கிறார். "ஹாக்கி விளையாட்டில் கட்சிப் பூசலும், பொறாமையும் புகுந்ததுதான் காரணம்" என்று கூறியிருக்கிறார். அல்லும் பகலும் அனவரதமும் ஹாக்கி விளையாட்டில் இந்தியாவின் பெருமை என்றும் உச்ச நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக ஹாக்கி வீரர் தயான்சந்த் பாடுபட்டதெல்லாம் வியர்த்தமாகி விட்டது. "கூட்டுத் திறமையில் கவனம் செலுத்தாத விளையாட்டுக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்ததினால் விளைந்த விளைவு" என்கிறார் திரு தயான் சந்த். விளையாட்டு உலகில் சண்டையும், பூசலும் ஆகிய காளான்கள் புகுந்து விட்டால் விரைவில் அவை விளையாட்டுத் திறமையை அழித்து விடும் என்பது ஆசிய ஹாக்கி விளையாட்டுப் போட்டியில் நிதர்சனமாகத் தெரிந்துவிட்டது.

இத்தகைய இழுக்கை நிவர்த்தி செய்ய, இந்தியாவின் பெருமையை நிலைநாட்ட ஹாக்கி விளையாட்டில் தலைசிறந்து விளங்கும் விளையாட்டு மன்னர்கள் ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும். விளையாட்டில் திறமைக்கும், இளமைக்குமே முதல் இடம் கிடைக்க வேண்டும். மகாராஷ்டிரக் குழுவிலுள்ள திரு தாஸ், திரு கதம், திரு சிவாஜி, திரு பிள்ளை போன்ற இளஞ் சிங்கங்கள் பயிற்சியின் மூலமும், ஆட்டத் திறமையினாலும் ஹாக்கி உலகில் இந்தியாவின் வெற்றிக்கொடியை மறுபடியும் நிலை நிறுத்த வேண்டும்.

— குண்டுமணி



ஹர்ஷ சக்கரவர்த்தியின் ஆஸ்தானத் தலைமைக் கவிஞரான பாணர் அரண்மனைக்கு முன் பரந்திருந்த மலர்ப் பொழிலில் வெகு அமைதியாக அமர்ந்திருந்தார். அவர் நினைவெல்லாம் வான நிலவைப் போலவே மெதுவாகப் பழைய சம்பவ வெளியில் ஊர்ந்து கொண்டிருந்தது. நிலவைச் சுற்றிலும் அலையும் மேகத்திரள்களைப் போன்று அவர் நினைவைச் சுற்றிலும் சஞ்சலம், தடுமாற்றம், கோபம், ஏக்கம் முதலிய வெவ்வேறு விதமான உணர்ச்சிகள் அலைமோதிக் கொண்டிருந்தன. அவர் உள்ளத்தில் நடந்துகொண்டிருந்த போராட்டங்களின் எந்த அடிச்சுவட்டையும் பிரதிபலிக்காமல் நிஷ்களங்கமாக அவர் முகம் மட்டும் விளங்கியது. சிந்தனைத் தேக்கத்தின் இருண்ட முத்திரை மட்டும் அவர் முகத்தில் படிந்திருந்தது!

"பாணரே!......"

அவர் நிமிர்ந்தார். ஹர்ஷ சக்கரவர்த்தி புன்னகையோடு அவர் முகத்தைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். பாணர் உடனே எழுந்திருக்க முயன்றார்.

"பரவாயில்லை...! அப்படியே அமர்ந்திருங்கள்" என்று அவரைக் கையமர்த்தியவண்ணம் தாமும் அவர் பக்கத்தில் உட்கார்ந்தார். பாணர் அரசர் உட்காரச் சற்று நகர்ந்து இடம் கொடுத்தார். தென்றல் மலர் மணம் முழுமையும் சுமந்து வந்ததோ என்று எண்ணும்படி மணத்தை வாரி இறைத்தது. ஹர்ஷர் காற்றின் முழு சுகந்தத்தையும் அனுபவிக்க விரும்பியவர் போன்று காற்றை வேகமாக உள்ளுக்கு இழுத்தார். அவரைத் திரும்பிப் பார்த்த பாணர் ஆழ்ந்த பெருமூச்சுவிட்டார்.

"உங்கள் அமைதியைக் குலைத்துவிட்டேனா?" என்றார் மன்னர்.

"அப்படியொன்றுமில்லை! நானும் உங்கள் வரவை எதிர்பார்த்த வண்ணம்தான் காத்துக்கொண்டிருந்தேன்" என்றார் பாணர் வணக்கத்துடன்.

"ஏதோ புதிய காதல் காவியம் படைத்திருக்கிறீர்களாமே? தம்பி கிருஷ்ணன் சொன்னான். அது பற்றி இரண்டு நாட்களாகவே கேட்க வேண்டுமென்று.........அதற்குள் சீன யாத்திரிகர் யுவான்சுவாங் வந்துவிடவே முடியவேயில்லை! காவியத்துக்கு என்ன பெயர் வைத்திருக்கிறீர்கள்?"

"காதம்பரி!" என்றார் பாணர் வெகு அமைதியாக.

"காதம்பரியா?" ஆச்சரியத்துடன் கேட்டார் ஹர்ஷர். அவர் குரலில் ஒலித்த ஆச்சரியத்தின் ஊடே படபடப்பும் தெளிந்தது.

"ஆமாம்!......"

"காதம்பரியின் நினைவாகவா?"

அதற்குப் பாணர் ஒன்றுமே பதில் சொல்லவில்லை! மௌனமாக வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். மன்னர் ஹர்ஷரே மறுபடியும் பேசினார் :

"உங்கள் காதல் விஷயத்தில் நான் மிகவும் கடுமையாகத்தான் நடந்துகொண்டேன். ஏனோ எனக்கு அப்பொழுது அத்தகைய மனநிலையைப் புத்தர்பிரான் அருளினார்."

இருவருமே வெவ்வேறான நினைவுகளில் மூழ்கி அமைதியாக இருந்தார்கள். அந்த அமைதியை விரும்பாதவர் போன்று ஹர்ஷரே மறுபடியும் பேச ஆரம்பித்தார்:

"அது போகட்டும்!......கதையின் முடிவு எப்படி?" என்று வினவினார் மன்னர்.

"இன்ப முடிவுதான்!"

"இன்ப முடிவா?" ஹர்ஷரின் குரலில் வியப்பு குமிழியிட்டது.

"ஏன்? என் வாழ்க்கையில் காணாத இன்பத்தைக் கற்பனையில் காணக் கூடாதா? அதற்குமா ஹர்ஷ சக்கரவர்த்தியின் தடை?"

அதற்கு ஏதும் பதில் சொல்லாமல் ஹர்ஷ சக்கரவர்த்தி ஆழ்ந்த பெருமூச்சு விட்டார்! பாணரின் நினைவு சிதறிய பாதரஸத் திவலைகள் போன்று எங்கோ உருண்டோடியது.

★

சாமையாக இருந்த நடன அணிகளைக் கழற்றிக் கொண்டிருந்த காதம்பரி கனைக்கும் சத்தம் கேட்டு நிமிர்ந்தாள். அவள் எதிரில் அழகிய வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். அவள் தன் கருங்குவளைக் கண்களை அழகுற அகல விரித்து அவனை ஏறிட்டுப் பார்த்தாள். வெண் முத்துக்கள் போன்ற பற்கள் சற்று தெளியும் அதரத்தில் மின்ன ஆச்சரியத்துடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள் அவள். முகத்தில் துளித்த வியர்வையைத் துடைத்தவண்ணம் அவன் அசையாது நின்றான். அவனுடைய கண்களில் மிளிர்ந்த அறிவொளியும், கூர்மையும் காதம்பரியின் கர்வம் நிறைந்த தலையையும் தாழ வைத்தன.

"அரண்மனையில் இன்று உங்கள் நடனம் வெகு பிரமாதம்!" என்றான் அவன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு.

"ஓகோ! உட்காருங்கள்......"

அவள் காட்டிய ஆசனத்தில் அவன் அமர்ந்துகொண்டான்.

"நீங்கள் வளைந்து வளைந்து ஆடியபொழுது வர்ண ஜாலங்களைச் செய்யும் வானவில்லும் வெளிறிப் போனது. சிந்தனையைத் தேக்க

வைத்த உங்கள் ஒவ்வொரு அசைவிலும் உயிர்த் துடிப்பு நிரம்பி வழிவதைப் பார்த்தேன்'' என்று பாராட்டினான்.

''நீங்கள் என் நடனத்தைப் பார்த்தீர்களா? அரண்மனை கொலு மண்டபத்தில் உங்களை நான் பார்த்ததாக நினைவில்லையே!'' என்றாள் காதம்பரி நினைவைத் தேடுவாள் போன்று.

''நிச்சயம் நீங்கள் என்னைப் பார்த்திருக்க முடியாது! காவலர்கள் என்னைக் கொலு மண்டபத்தில் பிரவேசிக்க விடவில்லை. வாயிலில் நின்ற வண்ணம் உங்கள் கலா மேன்மையை ரசித்தேன். நான் மட்டும் ஹர்ஷ சக்கரவர்த்தியாக இருந்தால் இந்தச் சாம்ராஜ்யத்தையே உங்கள் காலடியில் சமர்ப்பித்திருப்பேன். ஆனால் உங்கள் கலையை அவர் புரிந்து கொள்ளவேயில்லை!'' என்று வருத்தப்பட்டான் அவன்.

''உங்கள் பெயர்?''

''பாணன்!'' இளமையின் துடிப்பும், இனிமையான சொல் அசைவும் அவன் குரலில் குழைந்து வந்தன. மறுபடியும் அவனே தொடர்ந்து பேசினான் :

''ஏழைக் கவிஞன்! ஹர்ஷ சக்கரவர்த்தியின் உதவியை நாடிப் பிரிதிகூடத்திலிருந்து வருகிறேன். ஆனால் வந்த வேலை பாதிகூட



நிறைவேறவில்லை, சக்கரவர்த்தியைப் பார்ப்போம் என்ற நம்பிக்கை கூட எனக்குக் குறைந்திருக்கிறது.''

''கவிஞரா?....அதனால்தான் சொல்லடுக்குகள் பலமாக இருக்கின்றன. உங்கள் கவிதைத் திறமையை நான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக என்னைப் புகழ்கிறீர்கள்...... அப்படித்தானே?''

''சேச்சே! நான் அவ்வளவு இழிந்தவனல்ல. உண்மையிலே உங்கள் ஆட்டத்தில் மனத்தைப் பறி கொடுத்தவர்களில் நானும் ஒருவன். நிலவொளியில் துள்ளி நீரில் மூழ்கும் கயலையும் வயற்காட்டில் தென்றலில் தலை சாய்க்கும் நெற் பயிரையும் என் போன்ற கவிஞர்களால் ரசிக்க முடியாமல் இருப்பதில்லை. சில சமயம் கயல் போலும் துள்ளினீர்கள். சில வேளை நெற் பயிர் போன்றும் வளைந்தீர்கள்......''

''அழகாகப் பேசுகிறீர்கள்'' என்று காதம்பரி வெட்கத்துடன், சரிந்த தன் மேலாடையைச் சரிசெய்த வண்ணம் அவனைப் பார்த்தாள். அவன் உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பதைப் போன்ற பார்வையை அவள்மீது வீசினான். அவள் நாணித் தலைகுனிந்தாள்.

''நீங்கள் எதற்காகச் சக்கரவர்த்தியைப் பார்க்க வேண்டும்?'' என்று குனிந்த தலை நிமிராமல் கேட்டாள்.

''நான் கற்ற வித்தையைக் காட்டிப் பரிசு பெறத்தான்! அடங்காத பிள்ளையென்று ஊரில் பெயரெடுத்து விட்டேன். சுற்றத்தார் என்னைக் கண்டாலே வெறுத்து ஒதுங்க ஆரம்பித்தார்கள். என்னால் அந்த நரக வேதனையைப் பொறுக்க முடியவில்லை. ஹர்ஷ சக்கரவர்த்தியின் நன்மதிப்பைப் பெற்றுச் சுற்றம் மலைக்க ஊர் திரும்ப எனக்கு ஆசை!''

''நல்ல ஆசைதான்! ஆனால்...நிறைவேற வேண்டுமே!'' என்று நீண்ட பெருமூச்சு விட்டாள் காதம்பரி.

''ஏன்? அது நிறைவேறக் கூடாத ஆசைதானோ?'' என்றான் அவன்.

''நான் அப்படிச் சொல்லவில்லையே! பெருங் கவிஞர்கள் அணி செய்யும் கொலு மண்டபத்தில் தங்களைப் போன்ற இளங் கவிஞர்களை ஹர்ஷ சக்கரவர்த்தி போற்றுவாரா என்பது என் சந்தேகம்...''

''திறமை வயதைப் பொறுத்ததல்லவே! அநுபவம் வேண்டுமானால் வயதைப் பொறுத்திருக்கலாம். காதல் கவிதைகள் பாடுவதில் அவர்கள் வேண்டுமானால் போட்டியிட்டுப் பார்க்கட்டுமே, என்னோடு!'' என்று மார் தட்டினான் அவன்.

''ஐயோ, பாவம்!'' என்று பெருமூச்சு விட்டாள் காதம்பரி. அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''ஏன் பெருமூச்சு விடுகிறீர்கள்?''

''ஹர்ஷசக்கரவர்த்திக்குக் காதல் என்றாலே பிடிக்காது. அவர் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்; தீவிரமாகப் புத்த மதத்தைப் பின்பற்றுபவர். காதல் சுவையை அறவே வெறுப்பவர். இம்மை இன்பத்தைவிட மறுமை இன்பத்தையே அவர் பெரிதாக எண்ணுபவர். அவருக்கு எங்கே உங்கள் கவிதை ரசிக்கப் போகிறது?''

''என் திறமைகளில் ஒரு திறமை போற்றப் படாமல் போனால் போகட்டும்! யாழின் நரம்புகளை மீட்டி அதன் அடுக்கடுக்கான நாத பேதங்களுடன் என் குரலை நான் குழைத்துக் கொடுக்கும் பொழுது ஹர்ஷ சக்கரவர்த்தியென்ன?...இந்த நிலவுலகமே தன்னை மறக்கத்தான் வேண்டும்.''

''யாழிலும் நீங்கள் வல்லவரா? அப்படியானால் நிச்சயம் நீங்கள் அவரின் நன்மதிப்பைப் பெறுவீர்கள். சோக கீதங்களைக் கேட்பதில் அவருக்குத் தனியான ஆவல்'' என்று கூறினாள் காதம்பரி.

''முயற்சி செய்து பார்க்கிறேன்...!''

காதம்பரி சுருதி கூட்டிக்கொடுத்த யாழ், இசையை மீட்டினான் பாணன். நாதவெள்ளம் அந்த மலர்வனம் முழுவதும் கரைபுரண்டது. அவன் விரல்களின் ஓட்டத்தின் விரைவைக் கண்டு கிளர்ந்தெழுந்தவை போன்று நரம்புகள் ஸ்வர ஜாலங்கள் செய்தன. அவன் தன்னை மறந்தான். அமைதி கொட்டும் அம்மலர் வனத்தில் யாழின் இசை வெள்ளத்தைத் தவிர வேறு ஒலியே எழவில்லை. அவன் தன்பாட்டுக்கு வாசித்துக் கொண்டேயிருந்தான். யாழின் பொங்கி வழியும் இசை நாதத்துடன் தன் குரலையும் மெதுவாகக் குழைத்துக் காதலன் பிரிவை நினைத்தேங்கும் பிரிவுப் பாடலைப் பாடினான். நேரம் ஓடிக் கொண்டேயிருந்தது! அவன் கை ஓய்ந்து நிமிர்ந்தபொழுது எதிரில்ஹர்ஷ சக்கரவர்த்தி சிரித்தவண்ணம் நின்று கொண்டிருந்தார். வணக்கத்துடன் எழுந்து ஒதுங்கிப் பணிவாக நின்றான் பாணன்.

''உங்கள் பெயரென்ன?''

''பாணன்!...''

''எங்கிருந்து வருகிறீர்கள்?''

''பிரீதிகூடத்திலிருந்து...''

''பிரீதிகூடத்திலிருந்தா? அதுதான் இத்தனை புலமை உங்களிடமிருக்கிறது. அற்புதமான கலை; அருமையான வாசிப்பு. நான் என்னையே மறந்து விட்டேன். எங்கோ சென்று கொண்டிருந்த என்னை உங்கள் வாசிப்பில் இங்கு கொண்டு வந்து சேர்த்து விட்டீர்கள். கொலு மண்டபத்தில் இத்தகைய அபூர்வமான இசையை வாசிக்கக் கேட்டால் கொலு மண்டபமே நினைவைக் கழலைப் பறி கொடுத்து விடுமே!'' என்றார் ஹர்ஷர் தணியாத ஆவலுடன்.

''மன்னிக்க வேண்டும், அரசே! கொலு மண்டபத்தில் உங்களைச் சந்திக்க எவ்வளவோ முயன்றேன். ஆனால் காவலர்கள் என்னை உள்ளே அனுமதிக்கவே மறுத்துவிட்டார்கள்'' என்றான் பாணன் வருத்தத்துடன்.

''வெறும் மனிதராக உங்களை நினைத்திருப்பார்கள். கவிஞர் என்று சொல்லியிருந்தால் அப்பெரிய அரண்மனை வாசற்கதவே உங்களுக்கு வரவேற்பு கூறியிருக்குமே? கவிவாணருக்கும், இசைவாணருக்கும் அடையாத நெடுங்கதவல்லவா அது! அரண்மனைக்கு வாருங்கள். வேண்டிய பரிசில்கள் வழங்குகிறேன்'' என்றார் அரசர்.

''ஆகட்டும், அரசே!''

''மறந்துவிடப் போகிறீர்கள்.''

★

''காதம்பரி!'' என்று மகிழ்ச்சி பொங்க அழைத்தபடி உள்ளே நுழைந்தான பாணன். காதம்பரி ஆவலுடன் அவனை எதிர்கொண்டு அழைக்க ஓடி வந்தாள்.

''வெற்றி! சக்கரவர்த்தி என் யாழிசையைக் கேட்டு மெய்ம்மறந்து விட்டார். நாளை அரண்மனை வந்து பரிசும் பெற்றுப் போகச் சொல்லி யிருக்கிறார். இவ்வளவும் உன் வெற்றிதான்!'' என்றான் பாணன்.

''என் வெற்றியா?'' என்று கேட்ட அவள் புருவங்கள் ஆச்சரியத்தால் நெற்றி விளிம்பில் அழகுற நெளிந்தன.

''நீ சுருதி சேர்த்துக் கொடுத்த யாழ்தானே தேனைவிட இனிமையாகக் குழைந்து கொடுத்தது. அதன் இனிமையில்தான் அரசர் பெருமானும் தம் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டார். நீ செய்த இந்த உதவியை நான் ஒருநாளும் மறக்க மாட்டேன்'' என்றான் பாணன் நன்றி சொற்களில் கனிய.

''உண்மையாகவா?''

''ஏன்? உனக்கு என் மீது சிறிதும் நம்பிக்கையில்லையா?''

''இல்லை! கவிஞர்களே சபலபுத்தியுள்ளவர்கள் என்று கேள்வியுற்றிருக்கிறேன். நீங்கள் அதற்கு விதிவிலக்கு என்று எனக்குத் தெரியாது'' என்றாள் காதம்பரி.

''நான் ஒரு நாளும் சொன்ன சொல் தவற மாட்டேன். என் உயிர் உள்ளவரையில் உன் நினைவும் மறையாது.''



''அது போகட்டும். நாளை எப்படி அரசரைக் காணப் போகிறீர்கள்? இதே உடையுடன்தானா?'' என்று கேட்டாள் அவள்.

''பாணன் ஏழைக் கவிஞன்தானே?'' என்று சொன்ன அவன் முகம் சொல்ல முடியாத் துயரத்தில் கூம்பியது. அவன் வறண்ட கண்கள் அண்ணாந்து நோக்கின. அதொன்றையும் காதம்பரி கவனிக்கவில்லை.

''நான் உங்களுக்காக அழகிய உடை தயாரித்து வைத்திருக்கிறேன். அதை மட்டும் நீங்கள் அணிந்தால் அசல் அரசகுமாரர் போலவே இருப்பீர்கள்'' என்றாள் காதம்பரி வெட்கத்துடன். அதைக் கேட்டுப் பாணனுடைய கண்கள் இருமுறை ஆச்சரியத்தால் பிரகாசமாக ஒளிர்ந்தன.

''அப்படியானால் நான் அதிர்ஷ்டம் செய்தவன்தான்!'' என்றான் பூரிப்போடு.

"உங்களுக்கு வரும் அதிர்ஷ்டத்தில் காதம்பரியின் எளிய அன்பை மறந்து விடாதீர்கள். உங்களுக்குக் கிடைக்கும் புகழும், பெருமையுந்தான் காதம்பரி இந்த உலகில் கேட்டுப் பெறும் நிலையான செல்வங்கள்" என்றாள் அவள்.

"காதம்பரி!" என்றான் பாணன் உணர்ச்சிப் பெருக்குடன்.

"உம்!" என்றாள் இமைகளை விழி விழுங்க. அவனும் அவள் பூங்கரத்தைப் பற்றியவன், "நீ உயிர்; நான் உடல்" என்றான்.

★

ஹர்ஷ சக்கரவர்த்தி தனியாக வந்து தன்னைப் பார்க்கும்படி சொல்லியனுப்பினதைக்கேள்வியுற்றுக் காதம்பரிமிகவும் ஆச்சரியமடைந்தாள். காரணம் பிடிபடாமல் சற்று நேரம் குழம்பினாள். அவள் உள்ளத்தின் ஆழத்தில் மட்டும் கலக்கத்தின் ஜுவாலை படிந்தது. தியக்கும் பற்பல நினைவுகளுடன் ஹர்ஷ சக்கரவர்த்தியின் முன் வந்து நின்றாள் அவள். ஆழ்ந்த சிந்தனையிலிருந்த சக்கரவர்த்தி தம் இருண்ட முகத்தை நிமிர்த்தினார். அவர் முகத்தில்தான் எத்தனை ஆயிரம் சிந்தனை நெளிவுகள்? காதம்பரி காரணமில்லாமல் பயந்து நடுங்கினாள்.

"நீ நல்லவளென்று நினைத்தேன். ஆனால்..." என்று நிறுத்திக் கூம்பி இருண்டிருந்த அவள் முகத்தைப் பார்த்தார். பெரும் சுமையேற்றிய கழுத்தை நிமிர்த்த முடியாதவள் போன்று அவள் தலை கவிழ்ந்திருந்தாள். உண்மையிலேயே அவள் தலை பெரும் பாரத்தால் கனத்துப் போயிருந்தது!

"உங்களைப் பற்றி அரண்மனை முழுவதும் பேசிக் கொள்வது உனக்குத் தெரியாதா? உங்களால் நிறைமையை ஹர்ஷன் அரண்மனையிலேயே வளர்த்தானென்ற அவப்பெயர்."

அவள் இமைகளை உயர்த்தினாள். அதுவரை கண்களில் தேங்கியிருந்த கண்ணீர் முழுவதும் அவள் இமைகளை மூடியபொழுது பொல பொலவென்று சரிந்து கன்னத்தில் வழிந்தது.

"தகாத காதல் சோக வாழ்வுக்கு வித்தல்லவா? பாணனின் மயக்கும் பேச்சால் மனத்தைப் பறி கொடுத்திருக்கிறாய் போலிருக்கிறது! அரண்மனை நாட்டியக்காரியும், கவிஞனும் காதலுற்றுக் கண்டபடி திரிவதும் அதைக் கண்டு ஊரார் கைகொட்டிச் சிரிப்பதும் பொறுக்க முடியாத குற்றங்கள். முடிவாகச் சொல்லுகிறேன். பாணன் முன்னுக்கு வரவேண்டியவன். அவன் எதிர்கால வாழ்வைப் பாழடித்து விடாதே! உன் நினைவால்தான் என் சரித்திரத்தைக்கூட எழுத மாட்டேனென்கிறான். முடிவாகவும், திட்டமாகவும் சொல்லுகிறேன். இனிமேல் நீ எக்காரணத்தைக் கொண்டும் அவனைச் சந்திக்கக் கூடாது!"

"ஐயோ!" என்று அலறினாள் காதம்பரி.

"அப்படி மீறினால் ஹர்ஷ சக்கரவர்த்தியின் கடுந் தண்டனைக்கு இருவருமே ஆளாக வேண்டி வரும்" என்று அங்கிருந்து அவர் எழுந்து நடந்தார். காதம்பரி அங்கேயே இடிந்து உட்கார்ந்து விட்டாள்.

★

பாணன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தான. நடையைக் கண்ட அதே படபடப்பு உள்ளத்திலும் சூழ்ந்திருந்தது. காதம்பரியின் எழில் முகத்தை அவன் கண்டு ஏழு பகலாகி விட்டன. உணர்ச்சிக் கவிதைகள் கூறும் அவள் மென்சொற்கள் அவனைப் பித்தனாக்கின. அவளைக் கண்டால்தான் உயிர் நிற்கும்போல் அவனுக்குத் தோன்றியது. ஹர்ஷர் தனக்கு விதித்திருந்த தடையையும் பொருட்படுத்தாமல் காதம்பரி தனக்குக் கொடுத்த யாழைத் தூக்கிக் கொண்டு அருவிக் கரையை நோக்கி ஓடினான்.

சலசலவென்று ஓடும் அருவி, அவனுக்குப் பழைய நினைவுகளை ஓடவிட்டது. காதம்பரியும், அவனும் எத்தனையோ நாள் தங்களை மறந்த வண்ணம் இன்பக் கனவுகளில், அங்கு மூழ்கியபடி இருந்திருக்கிறார்கள். யாழை எடுத்தான்; ஹர்ஷ சக்கரவர்த்தியின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அதே பாடல் இசைத்தான். காதம்பரியும் அதைத்தான் அவனிடம் வாசிக்கும்படி கேட்பாள். நாத வெள்ளம் கரை புரண்டது. ஏற்கனவே உள்ளத்தில் கவிழ்ந்திருந்த சோகத்தை அனைவிறந்து நெகிழ விட்டான். 'பட்'டென்று யாழின் நரம்பு அறுந்தது! தன்னை மறந்திருந்தவன் தலை நிமிர்ந்தான். காதம்பரி அவன் எதிரில் நின்றுகொண்டிருந்தாள். இருள் சூழ்ந்திருந்த அவள் முகத்தில் இரு அருவிகள் மின்னலிடுவதைப் பார்த்தான்.

செய்தியும் செயலும்!



''காதம்பரி! வந்து விட்டாயா ? கடைசியில் உன் யாழ் கடமையை நிறைவேற்றி விட்டுத் தான் ஓய்ந்தது. உன்னைப் பார்க்காத வாழ்வும் ஒரு வாழ்வா?'' என்றான் அவன். அவனுக்குப் பதிலொன்றும் சொல்லாமல் அவள் விம்மினாள்.

''அழுகிறாயா, காதம்பரி? உன் மென்மையான இருதயத்தைப் புண்ணாக்கி விட்டேன். என்னால்தானே உனக்கு இவ்வளவு தொல்லை! பாவி, நான் ஒருத்தன் இல்லையென்றால்......'' என்ற அவன் வாயைத் தன் நடுங்கும் கரத்தினால் பொத்தினாள்.

''அப்படியெல்லாம் பேசாதீர்கள்! உங்கள் உயர்வுக்கு நான் தடையாக இருக்கிறேனே என்றுதான் வருத்தப் படுகிறேன். நாம் தனியாகச் சந்தித்ததை ஹர்ஷ சக்கரவர்த்தி அறிந்துகொண்டால்...'' என்னும்பொழுதே அவள் உடல் நடுங்கியது.

''தண்டனை கோழைகளை அடிபணிய வைப்பதற்காகக் கையாளப்படும் கடைசி ஆயுதம். நெஞ்சுரம் படைத்தவனை எந்தத் தண்டனையும் கலக்கி விட முடியாது. சரி! வா, கங்கையில் சற்று உல்லாசமாகப் படகில் போகலாம்'' என்று வர மறுத்த அவளைக் கையைப் பற்றி இழுத்தவண்ணம் அவன் நடந்தான்.

மெல்லப் படகு அசைந்தது. தன் ஆசையையெல்லாம் விழி வழியே பேசித் தீர்த்தான் அவன். விழிதானே பிரிந்த காதலர் கூடும் பொழுது பேசும் இதயம்! காதம்பரி ஒன்றுமே பேசவில்லை. அவன் மட்டும் தான் சோக நாடகத்தின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருப்பதைப் போன்று உணர்ந்தான். அவன் வெகு உற்சாகத்துடன் பேசிக் கொண்டே வந்தான். மாலைச் சூரியனும் விழுந்து அந்திவானமும் இருண்டது. இருள் மெல்ல உலகெங்கும் சூழ்ந்து வான மங்கை தன் எண்ணிறந்த நக்ஷத்திரக் கண்களுடன் உலகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வானத்தில் இன்னும் நிலவைக் காணவில்லை. அவன் துடிப்பிடுவதை நிறுத்தாமல் வலித்துக் கொண்டிருந்தான்.

''காதம்பரி! சுற்றிலும் கவிந்திருக்கும் இருளைக் காட்டிலும் நம் இருவர் மனத்திலும் சூழ்ந்திருக்கும் இருள் மிகவும் கொடிதல்லவா? இந்த இருளாவது வண்ண நிலவு வந்தால் சரிந்திருக்கும் மரங்களிடையே ஒதுங்கும். ஆனால் நம் மன இருளைப் போக்குவதற்கு எந்த ஒளி தோன்றப் போகிறது ?''

''ஒளியிருக்கும் இடங்களிலெல்லாம் இருளும் இருக்கிறது. ஒளியின் உண்மையான வெளிச்சத்தைப் பெற இருளை அதிகமாக்க வேண்டியிருக்கிறது. நாமும் நம்முடைய இன்பத்தைப்பெறத் துன்பங்களை அதிகமாக்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது'' என்றாள் காதம்பரி நிதானமாக.

''அதனால்தான் நானும் துணிந்து விட்டேன். நாமிருவரும் கங்கை வழியே தப்பிச் சாளுக்கிய நாட்டையடைந்து விட்டால் நம்மை யாரும் ஒன்றும் செய்ய முடியாது. நம்முடைய இன்பம் சாளுக்கிய நாட்டில்தான் காத்திருக்கிறது'' என்றான் பாணன்.

''ஐயோ !'' — திடீரென்று அலறினாள்.

"என்ன காதம்பரி?" என்று அவன் சொல்ல முடியாத படபடப்புடன் கேட்டான்.

"அதோ பாருங்கள்!" அவள் கைகாட்டிய இடத்தில் சக்கரவர்த்தியின் அன்ன முகப் புள்ள ஓடம் வெகுவேகமாக அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. பாணன் திடுக்கிட்டான்! சுற்றிலும் கவிந்திருந்த இருளால் அதில் அமர்ந்திருப்பவர்கள் யாரென்று தெரிந்துகொள்ள முடியவில்லை.

"இப்பொழுது என்ன செய்வது?" என்று கேட்ட அவன் குரலில் திகில் வழிந்தது.

"ஒரே ஒரு வழிதான் இருக்கிறது" என்றாள் காதம்பரி.

"என்ன வழி?" என்று வியப்புடன் கேட்டான் பாணன்.

"சுழித்துக் கொண்டோடும் கங்கையில் என்னை அர்ப்பணித்துக் கொள்ளப் போகிறேன். அதனால் நீங்களாவது தண்டனையில்லாமல் தப்பலாம்."

"என்னது!......"

"அதைத் தவிர வேறு வழியில்லை. என்னால் உங்களுக்குத் துன்பம் ஏற்படுவதை என்னால் பொறுக்க முடியாது. உங்கள் யாழிசையைக் கேட்டு நான் வந்திருக்கக் கூடாது. ஹர்ஷ சக்கரவர்த்தியின் கடும் நிபந்தனையை நாம் மீறியதைக் கண்டாரானால் இருவருக்குமே ஆபத்து. நான் ஆற்றில் குதித்து விடுவதால் உங்கள் மானமும், உயிருமாவது தப்பும்" என்றாள் காதம்பரி.

"காதம்பரி! சாவை நீ மட்டும் அணைக்கிறேன் என்கிறாயே! பாணன் சாவுக்குப் பயந்தவனா என்ன? நீ கங்கையின் சுழிப்பிலே குதித்த பிறகு வாழ்க்கையில் நான் என்ன சுகத்தைக் காணப் போகிறேன்? இருவருமே சாவை அணைப்போம். உயிர், உடல் இரண்டுமே கங்கையில் தகனமாகட்டும்!"

"வேண்டாம்! உலகில் அழியாத புகழோடு வாழப் போகும் நீங்கள் என் பொருட்டு உயிரை மாய்த்துக் கொள்ள விரும்ப மாட்டேன். கேவலம், இந்த நடனக்காரி இறப்பதால் யாருக்கும் நஷ்டமில்லை" என்றாள் காதம்பரி நீர்மல்கும் கண்களுடன்.

"அப்படியெல்லாம் சொல்லாதே, காதம்பரி! மற்றவர்கள் உன்னைக் கேவலமாக நினைக்கலாம். ஆனால் நீதான் எனக்கு......" என்று அவன் கூறி முடிப்பதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

"ஓடம் நெருங்கி விட்டது!" என்று அவசரத்துடன் எழுந்தாள். படகு பயங்கரமாக மேலும், கீழும் ஆடியது. பாணன் அவளை எட்டிப் பிடிப்பதற்குள் அவள் கங்கையில் பாய்ந்து விட்டாள். கண்மூடிக் கண் திறக்கும் நேரத்துக்குள் இந்த விபரீத காரியம் நடந்துவிட்டது.

"காதம்பரி!" என்று அலறிய அவனும் மறு விநாடி கங்கையில் பாய்ந்தான். நீரின் ஆழத்துக்குப் போய்க் கொண்டிருந்த தன்னை வலிமையான இரு கரங்கள் தாங்கிப் பிடிப்பதை அவன் உணர்ந்தான். அடுத்த சில விநாடிகளில் தான் நீர் மட்டத்தை நோக்கி விரைவதும் அவனுக்குத் தெரிந்தது. யாரோ சம தரையில் அவனைக் கிடத்தினார்கள். கனக்கும் தன் இமைகளை மிகுந்த சிரமத்துடன் திறந்து பார்த்தான். ஹர்ஷர் கவலையுடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். ஓடத்தின் நாற்புறமும் கண்களைச் சுழற்றினான். எங்கும் காதம்பரியைக் காணவில்லை.

"காதம்பரி!" என்று அலறிய வண்ணம் அவன் எழுந்தான். ஹர்ஷர் அவன் தோள்களை இறுகப் பற்றினார்.

"அவள் கிடைக்கவில்லையா?" அவன் வாய் குழறக் கேட்டான். அவர் அதற்குப் பதிலொன்றும் சொல்லாமல் சுழித்துக் கொண்டோடும் கங்கையைப் பார்த்தார். அவன் நெஞ்சமே சிதறுண்டு போவதுபோல் விம்மினான். அவன் கண்களிலிருந்து பெருகிய நீர் நெஞ்சை நனைத்தது.

"பாணரே!" என்று பாணரின் தோள்மீது கை வைத்தார் ஹர்ஷர். பாணரின் உள்ளத்தில் திரண்டிருந்த சிந்தனை சிதறுண்டது. சிந்தனையிலிருந்து மீண்டவர் நீர்மல்கும் கண்களுடன் சக்கரவர்த்தியை ஏறிட்டுப் பார்த்தார். அவர் உள்ளத்தில் குமிழியிடும் சோகத்தை நினைத்துத்தானோ என்னவோ, ஹர்ஷர் அங்கிருந்து மௌனமாக எழுந்து நடந்தார்.

அவ்வளவு சிக்கனம்! ஒரு முறை தேய்த்தால்

கால்கேட் டெண்டல் கிரீம்

85% கிருமிகளை ஒழிக்கிறது

சொத்தையும் மற்றும் துர்நாற்றமும் ஏற்படுத்தும் கிருமிகள் அவை



மிகச் சிறந்த பலனுக்கு எப்பொழுதும் உபயோகியுங்கள்!

கால்கேட் டூத் பிரஷ்

DCC/24 R2

காட்லிவர் ஆயில்
கூடிய
மால்ட் சத்து

இது ஒரு
புஷ்டியளிக்கும் உணவுதான்-
மருந்து அல்ல



ஏ & டி விடமின் சத்துக்கள் நிரம்பிய மிக நேர்த்தியான காட் லிவர் ஆயில் மற்றும் மால்ட் சத்தைச் சோத்துத் தயாரிக்கப்பட்ட இந்த ஐ. டி. எல். விசேஷத் தயாரிப்பில், முதிர்ந்த தானிய விதைகளில் காணப்படும் உடல் போஷாக்கு அம்சங்கள் யாவும் அடங்கியுள்ளன.

தயாரிப்பவர்கள்:

தி மைசூர் இண்டஸ்ட்ரியல் & டெஸ்டிங் லாபரேட்டரி லிட்.,

மல்லேஸ்வரம், பெங்களூர்-3.

ஒரு ஐ. டி. எல். தயாரிப்பு

I·T·L

விற்பனை டிப்போக்கள்: 35/37, தம்புச் செட்டித் தெரு, சென்னை-1
71/4, ஆர்க்காட் ஸ்ரீனிவாஸாசார் தெரு, பெங்களூர்-2.
விற்பனை ஏஜெண்டுகள்: மெஸர்ஸ். கர்நாடக் & டெக்கான் ஏஜன்ஸீஸ், ஹூப்ளி,
மெஸர்ஸ். டெக்கான் ட்ரக் ஏஜன்ஸி, ஹைதராபாத் (டெக்கான்)
மெஸர்ஸ். ஸனாஃ மெடிக்கல் ஏஜன்ஸீஸ், அஹம்மதாபாத்.

சிங்கள ராஜ்யத்தின் தலைநகரான அனுராதபுரம் அன்று திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. நாடு நகரமெங்கும் உற்சாகம் கரைபுரண்டோடியது. ஆண் பெண், வயோதிகர் பாலர் முதலான சகல ஜனங்களும் மெய்மறந்து ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

இருபத்தைந்து வருட அன்னிய ஆட்சிக்குப் பின்னர் தென் இலங்கையிலே தாதுசேனன் என்ற ஒரு மாவீரன் தோன்றிச் சிங்களப் பேரரசைப் புனருத்தாரணம் செய்த ஆண்டு விழா என்றால் அதைச் சிங்கள மக்கள் சிறப்பாகக் கொண்டாடக் கேட்க வேண்டுமா?

நாடு முழுவதும் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தபொழுது அரண்மனைக்குள் தர்பார் மண்டபத்திலே ஒரு சோக நாடகம் நடந்து கொண்டிருந்தது. துக்கம் தோய்ந்த அந்தச் சோக நாடகத்தின் பயனாக நாட்டுக்குப் பல நன்மைகள் ஏற்பட்டது என்னவோ உண்மைதான். அதே சமயம் காதினால் கேட்பதற்குக் கூட மிக மிகப் பயங்கரமான பல கொடூரச் சம்பவங்களுக்கும் இந்தச் சோக நாடகமே காரணமாக அமைந்தது.

சுதந்திரத்தின் ஆண்டு விழாவைச் சம்பிரதாயப்படி கொண்டாட மன்னன் தாதுசேனன் சர்வாபரண பூஷிதனாய்க் கொலுவீற்றிருக்கிறான். அவன் அன்பைப் பெறுவதற்காக, அவன் முகத்திலே ஒரு சிறு புன்னகையைக் காண்பதற்காகக் குறுநில அதிபர்கள் முத்தையும் மணியையும் அவன் காலடியிலே காணிக்கையாகக் குவிக்கிறார்கள். ஆனால் மன்னன் அந்தக் குறுநில அதிபர்களையோ அவர்கள் செலுத்தும் காணிக்கையையோ கவனிக்கவில்லை. அவன் கவனமெல்லாம் சபை நடுவே தூணோடு தூணாகக் கட்டி வைத்திருந்த ஒரு கிழவன் மீது பதிந்திருந்தது. வைத்த விழிகளை எடுக்காமல் அந்தக் கிழவனையே தாதுசேனன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நாடு முழுவதும் சுதந்திரக் கொண்டாட்டங்களில் லயித்திருக்கையில் அந்தக் கிழவனின் சுதந்திரம் மட்டும் பறிக்கப்பட்டிருந்தது. துறவியைப் போலத் தென்பட்ட அவன் கண்களிலிருந்து மாலை மாலையாக வடியும் கண்ணீர், இடுப்பளவு வளர்ந்து தொங்கும் தாடிக்குள் மறைந்து, தாடியின் நுனி வழியே அருவி போலப் பெருகியோடிக் கொண்டிருந்தது. அந்தப் பரிதாபக் காட்சியைக் கண்டும் காணாததைப் போல் இருந்தனர், தர்பாரிலிருந்த பிரமுகர்கள்.

ராஜசபையில் வழக்கமான காரியங்கள் நடந்து முடிந்ததும் தாதுசேனன் மந்திரியின் பக்கம் திரும்பி, ஏதோ சமிக்ஞை கொடுத்தான். அதைப் புரிந்து கொண்ட மந்திரி தமது ஆசனத்தை விட்டு எழுந்து, மன்னனுக்குக் கரம் குவித்து வணக்கம் செலுத்தி விட்டு, சபையோரைச் சுற்றி ஒரு கம்பீரமான கண்ணோட்டம் விட்டார். அவர் பார்த்த பார்வை ஏதோ ஒரு அதி முக்கியமான ராஜப் பிரகடனத்தை அவர் வெளியிடப் போவதைப் போலத் தோன்றியது.

"மங்களமான இந்தச் சுப நேரத்தில் காட்டு மனிதன் ஒருவனை இங்கு கட்டி வைத்திருப்பது உங்களில் பலருக்கும் ஆச்சரியமாயிருக்கலாம். 'பௌத்தத்தில் திளைத்த நமது மாமன்னர் தாடி நரைத்த ஒரு கிழவனை இப்படிக் கட்டி வைத்துக் கொடுமைப்படுத்துவது தர்மமா?' என்று கூட நீங்கள் நினைக்கலாம். ஆனால் உண்மை தெரியும்போது நீங்கள் திடுக்கிட்டுப் போவீர்கள். காட்டு வீரன் என்ற இக் கிழவன் இலேசுப்பட்ட மனிதனில்லை. மகாவிஹாரையின் சுவர்ணக் கலசத்தைக் களவாடிக் கொண்டு போன மித்திரசேனன், நாட்டில் நடத்திவரும் பல கொள்ளைகளைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். இந்தக் கிழவன் மித்திரசேனனின் கூட்டாளிகளில் ஒருவனென்று உளவு கிடைத்திருக்கிறது. இவனுடைய வயோதிகத்தை முன்னிட்டு இவனை விடுதலை செய்து விடுவதென மாமன்னர் தீர்மானித்திருக்கிறார். அதற்கு ஒரே ஒரு சிறிய நிபந்தனை. கொள்ளையிட்ட பொருள்களையெல்லாம் மித்திரசேனன் காட்



டில் புதைத்து வைத்திருக்கும் இடம் இவனுக்குத் தெரியும். அந்த இடத்தைக் காட்டினால் இவன் உயிர் பிழைக்கலாம். இல்லாவிடில் பாதாளச் சிறையில் பட்டினி கிடந்து அணுஅணுவாகத் துடித்துச் சாக வேண்டும். இது மன்னர் தாதுசேனரின் ஆக்ஞை!''

இவ்விதம் கூறிய மந்திரி காட்டு வீரனைக் கட்டியிருந்த இடத்தின் அருகில் போய் நின்று கொண்டு, ''காட்டுவீரா! நான் கூறியதையெல்லாம் கேட்டாயல்லவா? வாழ விரும்புகிறாயா அல்லது சாக விரும்புகிறாயா?'' என்று கேட்டார்.

படபட வென்று வார்த்தைகளைக் கொட்டக் கிழவனின் உதடுகள் துடித்தன. ஆனால் வார்த்தைகள் வெளி வரவில்லை.

''உன் பதில் என்னவென்று கேட்கிறேன்!'' என்றார் மீண்டும் மந்திரி.

அதற்கும் அவன் பதிலளிக்கவில்லை.

''ஊமையைப் போல் நடித்து நம்மை ஏமாற்றப் பார்க்கிறான்'' என்றார் மந்திரி.



''எவ்வளவு காலத்துக்கு அவன் ஊமையாக நடிக்க முடிகிறது என்பதைப் பார்த்து விடுவோம். வாய் திறந்து பேசும் வரையில் அவனை நிலவறையில் அடைத்து வையுங்கள். குடிப்பதற்குத் தண்ணீரும் கொடுக்கக் கூடாது!'' என்று ஆக்ஞையிட்டான் தாதுசேனன்.

கிழவனின் கட்டுக்களை அவிழ்த்து அவனைத் தரதர வென்று காவலர்கள் இழுத்துக் கொண்டு போனார்கள். அவ்வளவு நேரமும் ராஜ கம்பீரத்துடன் மன உறுதி தளராமல் இருந்த மன்னனின் கண்களே கலங்கி விட்டன, கிழவன் இழுத்துக் கொண்டு போகப்பட்டதைப் பார்த்த பொழுது. மளமள வென்று அவன் எழுந்து போய்விட்டான்.

அன்று முழுவதும் கோலாகலமான வைபவங்கள் நாடெங்கும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவை ஒன்றிலும் மனம் லயிக்காமல் மன்னன் மாத்திரம் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். 'மந்திரியும் மற்றவர்களும் சொல்லுவது போல் காட்டுவீரன் குற்றவாளியாக இல்லாதிருந்தால், நிரபராதியான ஒரு தள்ளாடும் கிழவனைக் கொடுமைப்படுத்திய பாவம் நம்மைச் சும்மா விடுமா?' இந்தக் கேள்வியையே அவன் மனம் திரும்பத் திரும்ப அவனைக் கேட்டுக் கொண்டிருந்தது. அது அவனுடைய அமைதியை மட்டுமல்ல, அன்றிரவு தூக்கத்தையும் கெடுத்து விட்டது.

• • •

மறுநாட் காலையில் காட்டுவீரன் சம்பந்தமாகப் பேட்டி காண இரண்டு கிராமவாசிகள் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டவுடன் தாதுசேனன் ஆவலோடு பள்ளியறையை விட்டு வந்து சமூகம் கொடுத்தான்.

பேட்டி காண வந்தவர்களில் ஒருவன் காட்டு வீரனைப் போலவே வயதான கிழவன். மற்றொருவர் நடுத்தர வயதுடைய சிங்களப் பெண்மணி.

கிழவனைக் கண்டவுடன், ''கிராமாதிகாரி ஜோதிபாலனல்லவா? உன்னுடன் வந்திருக்கும் இந்தப் பெண்மணி யார்? காட்டு வீரனைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டான் அரசன் தாதுசேனன்.

''நான் உங்கள் ஊழியன் ஜோதி பாலன்தான், மகாராஜா! இவள் காட்டு வீரனின் இரண்டாவது மனைவி. காட்டுவீரன் என் அண்ணன்'' என்றான் ஜோதிபாலன் என்ற முதியவன்.

''காட்டுவீரன் உன் அண்ணனா? உனக்கு உடன் பிறந்தவன் இருப்பதாக நான் கேள்விப்பட்டதே இல்லையே!

இவளைக் காட்டு வீரனின் மனைவி என்கிறாய். மனைவி கிராமத்திலிருக்கும்போது, கணவன் காட்டில் குடியேறி வசிப்பானேன்?'' என்று கேட்டான் மன்னன் தாதுசேனன்.

'' அது ஒரு பெரிய கதை, மகாராஜா! அதைச் சொல்லுவதற்கு முன்னால் வீரன் ஏன் சிறையிடப்பட்டிருக்கிறான் என்பதைக் கருணைகூர்ந்து தெரிவிக்க வேண்டும். தங்களுடைய தர்ம ஆட்சியிலே நியாயம் தவறி விடக் கூடாது என்ற கவலையோடுதான் இவளையும் வலுக் கட்டாயமாக இழுத்துக் கொண்டு இங்கே வந்தேன். அன்னிய ஆட்சியின் கீழ் கால் நூற்றாண்டு காலமாக நாடு அவதிப்பட்டபொழுது, துட்டகமுனுவையும் கயவாகுவையும் போல ஒரு மாவீரன் மறுபடியும் தோன்றமாட்டானா என்று சிங்கள ஜாதி அல்லும் பகலும் தவம் கிடந்தது. மகானுமனுடன் லம்பகர்ண வம்சமும் நசித்து விட்டதினால் அரசியல் வானில் அந்தகாரம் சூழ்ந்து கொண்டு விட்டது. அத்தகைய நெருக்கடியான தருணத்தில் மௌரிய வம்ச திலகமாகிய நீங்கள் தோன்றினீர்கள். நீங்கள் மூட்டிய சுதந்திரக் கனல் ஒவ்வொருவர் இதயத்திலும் கொழுந்து விட்டு எரிந்தது. ஆயிரமாயிரமாகச் சிங்கள மகாஜனங்கள் உங்கள் சேனையிலே வந்து சேர்ந்தார்கள். அன்று அவர்கள் தங்கள் உயிரையே தங்கள் காலடியில் அர்ப்பணிக்க முன் வந்தது அன்னிய ஆட்சியை வீழ்த்தி, சிங்கள ஆட்சியைப் புனருத்தாரணம் செய்வதற்கு மட்டுமல்ல; பௌத்த தர்மமும் நல்லாட்சியும் நீதியும் இந்நாட்டில் தழைக்க வேண்டுமென்பதற்காகப் பல்லாயிரக் கணக்கானோர் போரில் உயிர்த் தியாகம் செய்யப் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தார்கள். அவர்கள் செய்த அரும்பெரும் தியாகங்கள் பயனற்றுப் போய்விடக் கூடாதே என்ற கவலையோடுதான் நான் ஓடோடியும் வந்திருக்கிறேன், மகாராஜா!''

ஜோதிபாலன் உணர்ச்சி வசப்பட்டு இவ்விதம் மளமளவென்று பேசினான்.

'' உன் ராஜ விசுவாசத்தை நன்றாக நான் அறிவேன், ஜோதிபாலா! பாண்டியர்களுடன் செய்த பயங்கரப் போரில் நீயும் உன் கிராமத்தவர்களும் செய்த பேருதவியை நான் இன்னும் மறந்து விடவில்லை!'' என்றான் தாதுசேனன்.

'' அப்படியானால் காட்டு வீரனைச் சபை நடுவே கம்பத்தோடு கட்டிவைத்து அவமானப்படுத்தியது செய்நன்றி மறவாமையாகுமா, மன்னா! தமிழருடன் போராடத் தீவிரமாக உதவி புரிந்த என் அண்ணன் ஆயிற்றே அவன்!'' என்றான் ஜோதிபாலன்.

தாதுசேனன் ஒரு கணம் தயங்கினான். பிறகு, '' ஜோதிபாலா! வேறு ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லு. நீ உதவி செய்தாய் என்பதற்காகக் குற்றவாளியான உன் அண்ணனை மன்னிக்க முடியாது. குற்றம் புரிந்தவர்கள் யாராயிருந்தாலும் தண்டனை பெறுவது தான் நியாயம்'' என்றான்.

'' என் அண்ணன் செய்த குற்றந்தான் என்ன, மகாராஜா!''

'' மித்திரசேனனுக்குக் கொள்ளையிடும் பொருள்களைப் பதுக்கி வைக்க உதவியாகவும், உடந்தையாகவும் இருந்தது குற்றமில்லையா?''

'' இதற்கு ஏதாவது சாட்சியங்கள் உண்டா, மகாராஜா!''

''ஏன் இல்லை? ராஜாங்க உளவாளிகள் கூறுகிறார்கள்.''

'' என் அண்ணனையும் மித்திரசேனனையும் எப்பொழுதாவது அவர்கள் சேர்ந்து பார்த்ததாகச் சொல்லியது உண்டா? கொள்ளை இட்ட பொருள்களை மித்திரசேனன் என் அண்ணனிடம் ஒப்படைத்ததையாவது அவர்கள் பார்த்திருக்கிறார்களா?''

'' இல்லை.''

'' என் அண்ணனைக் கைது செய்த சமயம் கொள்ளையிடப்பட்ட பொருள்களில் எதையேனும் கண்டதாகக் கூறினார்களா?''

'' இல்லை.''

'' அப்படியானால் என் அண்ணன் குற்றவாளி என்று தீர்மானிக்க வேறு என்ன காரணமிருக்கிறது, மகாராஜா? மித்திரசேனனை யாரும் பார்த்ததில்லை. அவன் கொள்ளையடித்ததாகக் கூறும் காட்டிலே வசிப்பது ஒரு குற்றமா?'' என்றான் ஜோதிபாலன்.

''இரவு முழுதும் காட்டுக்குள் நிலத்தை வெட்டிச் சுரங்கம் அமைக்கும் சத்தத்தை உளவாளிகள் கேட்டிருக்கிறார்கள். மர்மமான இந்தச் சத்தத்தைப் பல இரவுகளில் கேட்ட பிறகே உன் அண்ணனைக் கைது செய்திருக்கிறார்கள். உன் அண்ணன் நடத்தை அவர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருடைய சந்தேகத்தையும் பலப்படுத்தியிருக்கிறது. காட்டுவீரன் நிரபராதியென்றால் காட்டில் தலைமறைவாக வசிப்பதற்குக் காரணம் கூறுவதற்கு என்ன? காட்டுக்குள் கேட்கும் மர்ம ஒலிக்குச் சரியான விளக்கம் கொடுத்து விட்டு விடுதலை பெற்றிருக்கலாமே! மித்திரசேனனைக் காட்டிக் கொடுத்து விடக் கூடாதென்று நினைப்பதாயிருந்தா


SCISSORS

லொழிய அவன் ஊமையைப் போல நடிக்க வேறு என்ன நியாயம் இருக்கிறது?'' என்று கேட்டான் தாதுசேனன்.

''என் அண்ணன் பிறவியில் ஊமையில்லை. இப்பொழுது தீய எண்ணங்களுடன் ஊமையாக நடிக்கவுமில்லை. அவனுடைய சோகம் நிறைந்த கதையைக் கேளுங்கள், மகாராஜா! சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பெண்மணியை அவன் இரண்டாந்தாரமாக மணந்து கொண்டான். என்றைய தினம் இந்தப் புண்ணியவதி எங்கள் வீட்டில் அடியெடுத்து வைத்தாளோ, அன்றைய தினமே என் அண்ணன் வாழ்வு சீரழிந்து விட்டது. வீட்டில் ஓயாமல் சண்டை; ஒழியாமல் சண்டை. மனைவியின் கொடுமை பொறுக்க மாட்டாமல் ஒரு நாள் இரவு காட்டுவீரன் வீட்டிலிருந்து ஓடி விட்டான். பல வருடங்கள் வரையில் அவன் எங்கு போனான், என்ன ஆனான் என்பது தெரியவில்லை. பத்து வருடங்களுக்குப் பின்னர் காட்டில் ஒருவன் துறவியைப் போல் வசிப்பதாகக் கேள்விப்பட்டேன். ஒரு சமயம் அவன் என்னுடைய அண்ணனாக இருக்குமோ என்று சந்தேகப்பட்டுக் காட்டுக்குச் சென்று தேடினேன்.

''இரண்டு நாட்கள் அலைந்து திரிந்த பிறகு மூன்றாவது நாள் அவனைச் சந்தித்தேன். மற்றவர்களைக் கண்டு ஓடுவதைப் போல என்னைக்கண்டு அவன் ஓடவில்லை. இதற்கு மாறாக என்னைப் பார்த்தவுடன் அவன் மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தான். அவன் யார் என்பது உடனே எனக்குப் புரிந்து விட்டது. அவனிடம் நான் என்னென்னவோ கேட்டேன். ஒரு கேள்விக்காவது அவன் பதில் சொல்லவில்லை. வாய் திறந்து ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. மனிதர்களுடன் எவ்விதமான தொடர்பும் வைத்துக் கொள்ள விரும்பாமல் வன விலங்குகளுடன் வாழ்க்கையைக் கழிக்க அவன் தீர்மானித்திருப்பதாக மட்டும் நான் அறிந்துகொள்ள முடிந்தது. அவன் மௌன விரதத்தைக் கைக்கொண்டிருக்கிறானா அல்லது பேசும் சக்தியையே இழந்துவிட்டானா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. எவ்வளவு வற்புறுத்தியும் அவன் கிராமத்துக்குத் திரும்ப மறுத்து விட்டதால் வேறு வழியின்றி நான் திரும்பினேன்.

''இதன் பிறகு இரு முறைகள் அவனை நான் காட்டில் சந்தித்திருக்கிறேன். அப்பொழுதும் அவன் பேசியதில்லை. விலங்குகளோடு விலங்கு போல் பல்லாண்டுகளாக வாழ்வதினால் பேசும் சக்தியை அவன் இழந்திருக்க வேண்டும். காட்டில் சுரங்கம் வெட்டப்படுவதாகவும் அதில் என் அண்ணனுக்கு ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டுமென்றும் சந்தேகப்படுகிறீர்கள்; காட்டுக்குள் ஆட்களை அனுப்பி உண்மையைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்தால் என் அண்ணன் நிரபராதி என்பது ருசுவாகி விடும்!''

ஜோதிபாலன் இவ்விதம் கூறியதைப் பொறுமையுடன் கேட்ட தாதுசேனன், ''காட்டில் தேடிப் பார்த்தாகிவிட்டது. உன் அண்ணன் வாய் திறந்து பேசினாலொழிய உண்மை வெளியாகப் போவதில்லை'' என்றான்.

''அப்படியானால் என் அண்ணனை நான் பேச வைக்கிறேன். அவனுடன் சில தினங்களுக்கு என்னையும் சேர்ந்திருக்க அனுமதியுங்கள்'' என்றான் ஜோதிபாலன்.

அந்த யோசனைக்கு மன்னன் தாதுசேனன் உடனே இணங்கினான்.

சில தினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் ஜோதிபாலன் அரசனை அணுகி, ''காட்டுக்குள் புதைந்து கிடக்கும் ஐசுவரியத்தைக் காண்பிக்க என் அண்ணன் சம்மதித்து விட்டான், மகாராஜா! அவனைக் காட்டுக்கு அழைத்துச் செல்லத் தயவுசெய்து ஏற்பாடுசெய்யுங்கள்'' என்று வேண்டினான்.

மித்திரசேனன் கொள்ளையிட்டுப் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறப்படும் ஏராளமான ஐசுவரியங்கள் சுலபமாகத் தன்னை வந்தடையப் போவதாக எண்ணிய தாதுசேனன் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தான். மந்திரி, பிரதானிகள் சகிதம் இரண்டு கிழவர்களையும் ரதத்தில் ஏற்றிக் கொண்டு அவன் கானகத்துக்கு விரைந்தான்.

காட்டுக்குள் கொஞ்ச தூரம் சென்றதும் ரதத்திலிருந்து எல்லோரும் இறங்க வேண்டியதாயிற்று. அதற்குமேல் ஒரு ஒற்றையடிப் பாதையின் வழியாக மன்னனையும் மற்றவர்களையும் காட்டு வீரன் அழைத்துக் கொண்டு சென்றான். இது வரையில் மனிதர்கள் யாரும் அடி எடுத்து வைத்திராத ஒரு புதிய காட்டுப் பிரதேசத்துக்குப் போகிறோம் என்பதை மன்னனும் அவனது பரிவாரங்களும் உணர்ந்து சற்று உஷாராகவே சென்றார்கள். காட்டு வீரன் அவர்களிடமிருந்து பிரிந்து ஏழெட்டு கஜதூரம் முன்னால் அவர்களுக்கு வழிகாட்டிக் கொண்டு நடந்தான்.

ஒரு திருப்பத்தை யடைந்ததும் சட்டென்று நின்ற காட்டு வீரன் பின்னால் வந்தவர்களை நோக்கி, ''வாருங்கள், 'மன்னவா! காட்டில் புதைந்து கிடக்கும் விலை மதிக்க முடியாத பொக்கிஷம் இதோ கண்ணெதிரில் இருப்பதை வந்து பாருங்கள்!'' என்று கத்தினான். அவ்வளவு நாட்களும் ஊமையைப் போல நடித்துக் கொண்டிருந்த காட்டு வீரன் திடீரென்று பேசியதே அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது.



காட்டு வீரன் நின்ற இடத்துக்குத் தாதுசேனனும் மற்றவர்களும் வந்தார்கள். அது ஒரு மேட்டுப்பாங்கான சிறு குன்று போலிருந்தது.

''அதோ, கீழே பாருங்கள்! நான் வெட்டியெடுத்த புதையலைக் கண்குளிரப் பாருங்கள், மகாராஜா!'' என்றான் காட்டு வீரன்.

அவன் சுட்டிக் காட்டிய இடத்தைப் பார்த்தான் தாதுசேனன். பார்த்தவன் பார்த்துக் கொண்டேயிருந்தான். கீழே ஒரு பிரும்மாண்டமான சமவெளிப் பிரதேசம். மரங்கள் அடர்ந்த அக்காட்டின் மத்தியிலே செடி கொடிகள் கூட இல்லாது சமதரையாக இருந்த அந்த விசாலமான இடத்தில் ஆங்காங்கே சிறுசிறு குளங்கள். அக் குளங்களிலிருந்து கண்ணாடி போன்ற தெள்ளிய நீர் 'குபுகுபு'வென்று குமிழியிட்டுக் கிளம்பிச் சிறுசிறு ஓடைகளாக ஓடிக் கொண்டிருந்தது. அவற்றில் புள்ளிமான்களும் வேறு பல வன விலங்குகளும் பயமின்றித் தண்ணீர் பருகிக் கொண்டிருக்கும் மனோகரமான காட்சியை மன்னன் குன்றின் மீதிருந்து கவனித்து மலைத்துப் போய் நின்றான்.

''வாயில்லா ஜந்துக்களான வன விலங்குகளின் தாகத்தைத் தணிக்க இயற்கையின் மடியிலிருந்து நான் தோண்டி எடுத்த பொக்கிஷம் இது தான், மகாராஜா! தண்ணீருக்குத் தவிக்கும் ஜந்துக்களுக்குச் சுனையிருக்கும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்து வெட்டிக் கொடுத்தது ராஜத்துரோகமானால் நான் குற்றவாளிதான். அதற்குக் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக் கொள்ள நான் சித்தமா யிருக்கிறேன்'' என்றான் காட்டு வீரன். தாதுசேனன் இதற்குப் பதில் சொல்ல வில்லை. இயற்கையே கரை கட்டிக் கொடுத்ததைப் போல் சுற்றிலும் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் ஒரு பிரும்மாண்டமான தடாகத்தை அவன் மனம் கற்பனை செய்து பார்த்துக் கொண்டிருந்தது. தேவனும்பியதிசன் என்ற மாமன்னன் வெட்டியதைப் போல் ஒரு மாபெரும் ஏரியை இங்கு அமைத்தால் எத்தனை லட்சம் ஏக்கரா பூமியைப் பொன் விளையும் பிரதேசமாக்கலாமென்று அவன் எண்ண மிட்டான். ''என் ஆட்சிக்கு ஒரு அழியாத ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்த வழி வகுத்துக் காட்டி விட்டாய், காட்டு வீரா! நீ கண்டெடுத்த பொக்கிஷத்தைப் பல்கிப் பெருகச் செய்து பல நூற்றாண்டுகளுக்கு மக்கள் பயனடையச் செய்வேன். இது சத்தியம்'' என்று உணர்ச்சி பரவசத்துடன் சொல்லியவாறு காட்டு வீரனைத் தாதுசேனன் மார்புறத் தழுவிக் கொண்டு வாயார வாழ்த்தினான்.

மறுநாள் மனித நடமாட்டமற்றிருந்த அந்தக் காட்டுக்குப் பல ஆயிரம் தொழிலாளர்கள் மண்வெட்டி சகிதம் விரைந்தார்கள். இரவு பகலாக வேலை செய்து, காட்டு வீரன் காட்டிய இடத்திலே சரித்திரப் பிரசித்தி பெற்ற 'கலுவேவ' என்ற தடாகத்தை வெட்டி முடித்தார்கள். அதிலிருந்து பல லட்சம் ஏக்கரா தரிசு நிலங்களுக்குப் பாசன

வசதிகளைச் செய்தார்கள். அன்று முதல் காட்டுவீரனுக்கு அரண்மனையிலும் நாட்டிலும் ஒரு அலாதியான மதிப்பு ஏற்பட்டது.

பயிரின் தாகத்தைத் தீர்க்க, வழி செய்தவன் காட்டு வீரன்தானே? எல்லோருமே அவனை நாட்டிலே இருக்கச்செய்து, வழிபடும் தெய்வமாக வணங்கத் திட்டமிட்டனர். தண்ணீர் நிலையை நிர்மாணிக்க உழைத்தவனைப் போற்றிப் பாராட்டிப் பாதுகாக்க விரும்பினர். ஆயினும் காட்டு வீரன் மன்னனிடம் மன்றாடி அனுமதி பெற்று முன்போலக் காட்டில் வசிக்கப் போய் விட்டான்.

நாடாளும் மன்னன் குறிப்பிட்ட ஒருவரிடம் அளவு மீறிய அன்பும் ஆதரவும் காட்டுவதென்றால் அரண்மனையில் பொறாமையும் அசூயையும் தலையெடுப்பது இயற்கைதானே! காட்டுவீரனைப் பற்றித் தாதுசேனன் அடிக்கடி சிலாகித்துப் பேசுவது மந்திரிகளில் ஒருவருக்கும் பிடிக்கவில்லை. ஆகவே காட்டு வீரனைத் தீர்த்துக் கட்டிவிட அவர்கள் தீர்மானித்தனர். பல தினங்கள் வரையில் யோசித்து இதற்கு அவர்கள் ஒரு திட்டமும் தீட்டினார்கள். காட்டு வீரன் குடியிருந்த குடிசையின் அருகில் தடாகத்தை உடைத்து விட்டு, காட்டுவீரன் தடாகத்தை உடைத்து விட்டதாக மன்னனிடம் புகார் செய்ய அரண்மனைக்கு விரைந்தார் மந்திரி.

இதற்கிடையில் வாவி உடைப்பெடுத்துக் 'குபுகுபு' வென்று தண்ணீர் பாய்வதைக் காட்டு வீரன் கண்டான். உடைப்பு சிறியதாயிருந்தாலும் தண்ணீரின் வேகம் சமாளிக்க முடியாததாயிருந்தது. உடைப்பை உடனே அடைக்காவிட்டால் ஆயிரக்கணக்கான ஏக்கரா நிலங்கள் சர்வநாசமடைந்து விடும் என்பதையும் அவன் தெரிந்து கொண்டான். ஆனால் பிரளய வேகத்துடன் பாய்ந்து வரும் வெள்ளத்தை எப்படி அடைப்பது? அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. யோசிக்க அவகாசமும் இல்லை. உடைப்பில் தொப்பென்று குதித்து அணை போல் துவாரத்தை அடைத்துக் கொண்டு அவன் நின்றான். உடைப்பு சற்றே அடைபட்டது. ஆனால் அவன் உடலில் அடைபட்டிருந்த உயிர் மாத்திரம் அவனிடமிருந்து விடை பெற்றுச் சென்றுவிட்டது.

மன்னன் தாதுசேனன் அந்தச் சோகக் காட்சியைப் பார்த்து விட்டுக் கதறி அழுதான். உயிரைக் கொடுத்து, உடைப்பை அடைத்துப் பல கிராமங்களைக் காப்பாற்றிய காட்டு வீரனின் மகத்தான தியாகம் வெளிப்பட்டது. காட்டு வீரனின் பெயர் காத்த வீரன் என்று மாறியது. அன்று முதல் காத்த வீரன் கலுவாவியைக் காக்கும் தெய்வமாக மதிக்கப்பட்டு, காலக்கிரமத்தில் அவனுக்கு ஒரு கோயிலும் ஏற்பட்டது.

ஜூன் மாதச் சிறுகதைப் போட்டி

1. மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். கதைகள் கல்கியில் ஆறு பக்கத்திலிருந்து பத்து பக்கம் வரையில் வெளியிடக் கூடியதாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

4. ஜூன் மாதப் போட்டிக்கு ஜூன் 1-ந் தேதியிலிருந்து 30-ந்தேதி வரை கதைகள் எழுதி யனுப்பலாம். ஜூன் மாதப் போட்டிக்கு வந்த கதைகள் ஜூலை மாதம் முழுதும் பரிசீலனை செய்யப்படும். பரிசு பெற்ற கதை ஆகஸ்டு மாதத்தில் பிரசுரமாகும். அதேபோல் அந்தந்த மாதக் கதைகள் அடுத்த மாதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கடுத்த மாதத்தில் பிரசுரமாகும்.

5. கதைகளை நல்ல காகிதத்தில் இடைவிடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.


6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பிப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் பில்லைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பி யனுப்புவதற்கில்லை.

7. போட்டிக் கதை சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும் குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

— ஆசிரியர், கல்கி


வசீகரிக்கும்
மென்மை!
அதனுடைய மென்மையான நறு
மணம் நீங்கள் இருப்பதை ரக
சியமாகத் தெரிவிக்கிறது.
வெல்வெட் போன்ற அதனு
டைய வழுவழுப்பு உங்கள்
சருமத்தோடு கொஞ்சி விளை
யாடுகிறது. உங்களை மயக்கி
வெறியூட்டும் பிரஞ்சு வாசனைக்
கலவை சேர்ந்த உயர்ந்த
டால்கம்!
லேக்மி
டால்கம் பவுடர்
லேக்மி பிரைவேட் லிட்.
ஒரு டாடா தயாரிப்பு
பாம்பே ஹவுஸ், ப்ரூஸ் தெரு, பம்பாய்-1.
LKM 51 TM.
EVEREST



விமர்சனம்

க. பாலசுப்பிரமணியன்

சென்னை மாகாணக் கல்லூரிக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த அந்தக் 'காரை'க் கண்டதும், உற்சாகத்தினால் "சபாஷ்!" என்ற வார்த்தை என் வாயினின்று வெளி வந்தது! தோளில் தொங்கிக் கொண்டிருந்த 'காமிரா'வைக் கைகள் தாமாகவே பற்றின! 'கிளிக், கிளிக்' என்ற ஒலிகள் எழுந்தன.

"மிஸ்டர்! யாரைப் 'போட்டோ' எடுக்கிறீர்கள்?" என்ற அதிகாரமான குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு நிமிர்ந்தேன்!

எனது இமைகள் படபடத்தன. உள்ளம் 'ஜில்'லென்று உயர எழும்பி வானில் பறந்தது! தென்றல் எனது உடலை எங்கிருந்தோ வந்து மருவிக் கொண்டு இனம் புரியாத இன்ப வெள்ளத்தைப் பாய்ச்சியது! கொளுத்தும் செங்கதிரோனிடத்தில் சந்திரனைக் கண்டது என் உள்ளம்! இவ்வளவுக்கும் காரணம் என் எதிரில் நின்று கொண்டிருந்த ஏந்திழையாள்தான்!

"மிஸ்டர்! ஏன் இப்படி ஆடு திருடிய கள்ளனைப்போல் விழிக்கிறீர்கள்? கேட்டதற்கு இதுவரையில் பதில் சொல்லவில்லையே?" என்று தன் கேள்வியை நினைவுறுத்தினாள் அப் பூங்கொடியாள்.

"...ஸி...ஸீ...! துரதிருஷ்டவசமாக — என்னுடைய போதாத காலம்—உங்களுடைய வாகனத்தை—இந்த நாலு சக்கரத்தின் மேலிருக்கும் 'கார்' என்று பெயர் கொண்ட பொருளைப் போட்டோ பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது! அவ்வளவுதான்!" என்று இழுத்தேன்.

"அது என்ன, அந்த அவசியம்? என் காரைப் பார்த்துக் கேலியா செய்கிறீர்கள்!"

"அப்படி யெல்லாம் நினைத்து விடாதீர்கள்! எங்கள் பத்திரிகையின் சிறுவர் பகுதியில் ஒரு வாண்டுப் பயல் முதன் முதலில் உற்பத்தியான காரின் படம் பிரசுரிக்கப்பட வேண்டுமென்று கேட்டிருந்தான்! அந்தக் காரைத் தேடித் தேடி அலுத்துப் போகும் வேளையில் தான் தங்கள் காரைக் கண்டேன்! தங்களுடைய காரைப் போட்டோ பிடித்ததற்குப் பிராயச்சித்தமாக உங்களையும்.....அப்படியே அப்படியே இருங்கள்!...கொஞ்சம் புன்னகையுடன்!...ஸி...ஸி...ஒரு நிமிஷம்!...ஒரு புன்முறுவல்!... என்னைப் பார்த்து!......இல்லை, இல்லை!... இந்தக் 'காமிரா'வைப் பார்த்து!"

"மிஸ்டர்! என்ன அதிகமாகப் போகிறீர்கள்! ஒரு பெண்ணிடம் நடுத்தெருவில் இப்படியா நடந்து கொள்ளுவது? பத்திரிகாசிரியர் என்பதனால் உம்மை மன்னித்து விடுகிறேன்! இல்லையென்றால் போலீஸில் 'ரிப்போர்ட்' செய்திருப்பேன்!"—ஆத்திரத்தினால் படபடவென்று பொரிந்து தள்ளிய அவள் காரில் ஏறி அமர்ந்து 'படார்' என்று காரின் கதவைச் சாத்தினாள்! புயலில் சிக்கிய படகு போல் கார் ஆடியது! ஆனால் அவள் என்ன முயன்றும் கார் மட்டும் நகரவில்லை!

முணு முணுத்தபடியே கீழே இறங்கிய அவள் 'பானெட்டை'த் திறந்தாள். உடனே மூடினாள்! வலது புறமாகவும் இடது புறமாகவும் காரை மூன்று முறை வலம் வந்தாள்! ஊஹூம்! என்ன செய்தும் கார் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை!

கைகளைப் பிசைந்தபடி பரிதாபமாக என்னை நோக்கியதைக் கண்டதும் என் உள்ளம் நெகிழ்ந்தது!

"என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்! ஒரு விநாடியில் நிறைவேற்றி வைக்கிறேன்! காரைக் 'காயலான்' கடைக்கு அனுப்பவேணுமா? அல்லது கடலில் தள்ளி..."

"என்னுடைய நிலைமையைப் பார்த்தால் தங்களுக்குப் பரிகாசமாக அல்லவா இருக்கிறது! நானும் அப்போதே அப்பாவிடம் முட்டிக் கொண்டேன். இந்தக் கார் வேண்டாமென்று! அவர் கேட்கவில்லை. இப்பொழுது நடுத் தெருவில் நாலு பேர்கள் என்னைப் பரிகாசம் செய்யும் நிலைமையில்...!"—மேலே தொடர முடியாதபடி தடித்த இரு கண்ணீர் முத்துக்கள் அவள் விழிக் கடையில் உருவாகியிருப்பதைக் கண்டதும் என் உள்ளம் பாகாய் உருக ஆரம்பித்தது

"ஏன் கலங்குகிறீர்கள்? நான் சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன்! எனது ஹாஸ்யத்தைக் கேட்டு மக்கள் அழுவார்கள் என்று இப்போதுதான் புரிந்துகொண்டேன்!...என்ன செய்ய வேண்டும், சொல்லுங்கள்! கவலைப் படாதீர்கள்! கடந்த ஐந்தாண்டுகளாகச் சர்க்கார் 'பஸ்'ஸில் பிரயாணம் செய்துவரும் எனக்கு இந்தக் காரைத் தள்ளுவது ஒரு பிரமாதமா, என்ன? நீங்கள் ஏறி 'ஸ்டார்ட்' செய்யுங்கள்!" — அவளைத் தேற்றியவனாக காரைத்





தள்ளுவதற்கு வேண்டிய முஸ்தீபுகளைச் செய்து கொண்டேன். காமிராவை எடுத்துக் காரில் வைத்து விட்டு வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டேன்.

"ஒரு சந்தேகம்! காரை வீடு வரையில் தானே தள்ளிக் கொண்டு வரவேண்டும்?" என்று கேட்டேன்.

"குறும்புத்தனம் உங்களை விட்டுப் போகாது போலிருக்கிறதே!" என்று புன்முறுவலுடன் கூறியவளாய்க் காரில் ஏறினாள் அவள்.

என்னுடைய 'ஸ்பரிசம்' படவேண்டுமென்று அந்தக் கார் ரொம்ப நாட்களாகத் தவம் கிடந்தது போலும். நான் காரைத் தொட்டவுடனே நகர்ந்து உடனே ஓடவும் ஆரம்பித்து விட்டது!

'நன்றி' என்ற வார்த்தையைக் காற்றிலே மிதக்க விட்டுச் சென்ற அவள் உருவம் மறையும் வரையில் விழி வாங்காது ரசித்துக் கொண்டிருந்தேன். அதன் பிறகுதான் எனது காமிரா அவள் காரில் தங்கிவிட்ட நினைவு வந்தது. 'அடடா! இதுவும் நல்லதுக்குத்தான்! காமிராவைத் திருப்பிக் கொடுக்கும் சாக்கில் அவள் என்னைத் தேடி வருவாள். பிறகு, நட்பு...காதல்... கல்யாணம்!' இன்பக் கனவுகளில் ஆழ்ந்தவனாக, இருபது பஸ்கள், முப்பத்தியாறு டாக்ஸிகள், நாற்பத்து மூன்று ஆட்டோ ரிக்ஷாக்கள் இவ்வளவுக்கும் என் உயிரை இரையாக்காமல் 'டிமிக்கி' கொடுத்து விட்டு, பத்திரமாக வீடு திரும்பினேன்.



என் எண்ணம் போலவே காமிராவைத் திருப்பிக் கொடுக்கும் சாக்கில் ஆரம்பித்த மறுநாள் சந்திப்பு, தினசரி சந்திப்பாக வளர்ந்து, எங்களிடையே ஒரு நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்தி, காதலாக உருவெடுக்க ஆரம்பித்தது.

நான் தவறாமல் நளினியை—அதுதான் அவள் பெயர்—கடற்கரையில் சந்தித்து இன்பகரமாகப் பொழுதைப் போக்கினேன். அவளைப் பற்றிய முழு விவரங்களையும் அறிய என் உள்ளம் துடித்தது! ஆனால் நான் அதைப் பற்றிப் பேச்சை ஆரம்பித்தாலோ, சிரித்து மழுப்பி என் கவனத்தை வேறு திசையில் அவள் திருப்பி விடுவாள்!

மறு நாள் மாலை கடற்கரையில் சந்தித்து அங்கிருந்து ராயலில் ஓடிக் கொண்டிருந்த தமிழ்ப் படம் ஒன்றுக்குச் செல்லுவது என்ற முடிவுடன் அன்று நாங்கள் பிரிந்தோம்.

மறு நாள் மாலை 'விரைவாக வீடு செல்ல வேண்டுமென்ற எண்ணத்துடன் அவசரம் அவசரமாக எனது வேலைகளை முடித்து விட்டுக் கிளம்பிக் கொண்டிருந்த என்னை அப்படியே தடுத்து நிறுத்தியது ஆபீஸ் பையன் ஆறுமுகத்தின் குரல்.

"ஆசிரியர் உங்களைக் கூப்பிடுகிறார்!" என்றான் பையன்.

'எங்கள் திட்டத்துக்கு இடையூறு ஏற்பட்டு விடப் போகிறதே!' என்று தவித்தவனாக ஆசிரியரின் அறையில் நுழைந்த என்னிடம், "மிஸ்டர் பாலு! இன்று மாலை ஆறரை மணிக்குக் கலை மன்றத்தில் குமாரி குந்தளாவின் நடனக் கச்சேரியாம்! அதற்கு நமக்கு அழைப்பு வந்திருக்கிறது. தவிரவும் நேரில் வேறு வந்து சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். நீர் போய்ப் பார்த்துவிட்டு விமர்சனம் எழுதிக் கொண்டு வாரும்" என்றார்.

எனக்கு மூச்சே நின்று விடும் போல் ஆகிவிட்டது! "ஸார்! இன்று மாலை ஆறரை மணிக்குக் கடற்கரையில்..."—என் உள்ளத்தில் குதி போட்டுக் கொண்டிருந்த அந்த இன்ப நிகழ்ச்சி வெளிவரவிருந்தது. நல்ல வேளையாகக் குறுக்கிட்ட ஆசிரியர் கிருஷ்ணன், "பொதுக்கூட்டத்தைத்தானே சொல்கிறீர்கள்? அதற்கு ராமனை அனுப்பி வைத்திருக்கிறேன். நீங்கள் கலை மன்றத்துக்குப் போய் வாருங்கள்! இந்தாரும், இலவச நுழைவுச் சீட்டு'!" என்று துரிதப்படுத்தவே 'சரி' என்பதற்கு அறிகுறியாக ஒருதடவை தலையை அசைத்து விடைபெற்றுக் கொள்ளுவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை. ஆசிரியர் கிருஷ்ணன்தான் என்னை எழுத்தாளர் உலகில் அறிமுகப்படுத்தி முன்னுக்குக் கொண்டு வந்தவர். அவர் பேச்சை எப்படித் தட்ட முடியும்? எனது ஆத்திரமெல்லாம் குமாரி குந்தளாவின் மீதும், அவளுக்கு நடனம் கற்றுக் கொடுத்தவர்களின் மீதும் திரும்பியது.

கடற்கரையில் என்னை ஆவலுடன் எதிர்பார்த்தவளாக நிற்கும் நளினியின் வசீகர முகத்தையும், அபூர்வ அலங்காரத்தையும் கண்டு மயங்கியவனாக நின்றேன். ஆசிரியர் எனக்கிட்டிருக்கும் கட்டளையைக் கூறி அவள் முகத்தில் ஏமாற்றத்தை வருவிக்க விரும்பாதவனாகத் தயங்கினேன்.

"நேரமாகவில்லையா? கிளம்புங்கள்!" என்று சொல்லி உள்ளத்தைக் கிளுகிளுக்க வைக்கும் ஒரு கடைக்கண் வீச்சை நளினி அள்ளி வீசவே, நான் இந்த உலகத்தையே மறந்து போனேன்! நளினியின் அன்புருவமும் பாரதியாரின் கவிதையும்தான் என் நெஞ்சில் அப்பொழுது நிறைந்து நின்றன.

'காற்றிலேறியவ்விண்ணையும் சாடுவோம், காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' என்று பாரதியார் சொல்லியிருக்கும்போது நளினிக்காக நாம் ஏன் இந்த ஒரு தியாகத்தைச் செய்யக் கூடாது என்ற முடிவுடன் அவளைப் பின்தொடர்ந்தேன்.

படத்தின் கதையமைப்பைப் பற்றியும் நடிப்பைப் பற்றியும் விமர்சித்தபடி கொட்டகையை விட்டு வெளியே வந்தோம். வாசலில் தான் எத்தனை கூட்டம்? முண்டியடித்துக் கொண்டு முன்னேறிய ஒரு கூட்டம் எங்களைப் பிரித்து விட்டது.

இமைக்கும் நேரம்தான்! அதற்குள்! என்னைத் தேடி விழிகளை அலைய விட்டவளாய் நிற்கும் அவள் பின்னால் பாய்ந்து வரும் காரைக் கண்டதும் நான 'குபீ'ரெனப் புகுந்தேன். மயிரிழையில் அவள் பிழைத்தாள்.

''கொஞ்சம் தாமதித்திருந்தால் உங்கள் மனைவியின் கதி என்ன ஆகியிருக்கும்? கூட்டத்திலே வரும்போது மனைவி, குழந்தைகளையெல்லாம் விட்டுப் பிரியக் கூடாது!''

எங்களைச் சுற்றி நின்ற கூட்டத்திலிருந்து ஒரு வயோதிகர் கூறிய இந்த அறிவுரைகளைக் கேட்டதும், என் அணைப்பில் சிக்கியிருந்த நளினி நாணத்துடன் தன்னைஎன் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டாள்.

அந்தப் பெரியவரின் வார்த்தை பலிக்க வேண்டும் என்று எல்லா இஷ்ட தெய்வங்களையும் வேண்டிக் கொண்டே வீடு சேர்ந்தேன்!

மறுநாள் காலையில் எழுந்ததும்தான் ஆசிரியர் கிருஷ்ணன் எனக்கு இட்ட கட்டளையை நிறைவேற்றுமல் தவறி விட்டதை உணர்ந்தேன். அவர் முகத்தில் எப்படி விழிப்பது? கடமையில் கருத்தாக இருக்க வேண்டும் என்ற கொள்கையுடையவராயிற்றே, அவர்! என்ன செய்வது என்று புரியாமல் யோசனையில் ஆழ்ந்தேன்!

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவனாய்ப் பேனாவைக் கையில் எடுத்தேன். 'குந்தளாவைப் போன்று இரட்டை நாடி சரீரம் உள்ளவர்கள் நாட்டியக் கலை இருக்கும் திக்கிலே காலடி எடுத்து வைக்கக் கூடாது!' என்று யாரோ எப்போதோ அவள் நடனத்தைப் பற்றிக் கூறிய விமர்சனம் என் நினைவுக்கு வரவே, ஒரு கட்டுரையும் தயாராகி விட்டது!

விமர்சனக் கட்டுரையுடன் ஆசிரியரின் அறையில் நுழைந்தேன்.


''மிஸ்டர் பாலு! நேற்று கச்சேரிக்குப் போயிருந்தீர்களா? நடனம் எப்படி இருந்தது?'' என்று அவர் கேட்டவுடன் எனக்குத் துணுக்கென்றது. பொல்லாத மனிதர்! ஒரு சமயம் தெரிந்து வைத்துக் கொண்டுதான் கேட்கிருரோ என்று பயந்தேன்! என்றாலும் செய்த முடிவைக் கடைசி வரையில் ஒப்பேற்றி விடுவது என்ற எண்ணத்துடன், ''விமர்சனம் கூட எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன்!'' என்று சொல்லி அவரிடம் நீட்டினேன்.

''படியுங்கள், பார்க்கலாம்!'' என்று அவர் சொல்லவே படிக்க ஆரம்பித்தேன்!

''சென்ற சனிக்கிழமை அன்று குமாரி குந்தளாவின் நடனக் கச்சேரி கலை மன்றத்தில் யாதொரு விக்கினமுமின்றிப் பத்திரமாய் நடந்தேறியது. முன் காலத்தில் நடனங்கள் கோயில்களிலும், அரச அவைகளிலும் மட்டும் நடைபெறுவானேன் என்ற கேள்விக்கு விடையைத் தந்தது குமாரி குந்தளாவின் நடனக் கச்சேரி. குமாரி குந்தளாவைப் போன்ற சரீரம் படைத்தவர்கள் அந்தக் காலத்தில் இருந்து வந்திருக்கிருர்கள் என்பதும், அவர்களுடைய நடனத்தைத் தாங்கும் உறுதி கோயில், அரச மண்டபக் கட்டடங்களுக்கு மட்டும்தான் இருந்தன என்பதும்தான் விடை! குமாரி குந்தளாவின் நாட்டியத்துக்குப் பிறகு கலைமன்றம் பழுது பார்க்கப் பட்டதாக எனது ஆபீஸ் பையன் கூறுவது இங்கு குறிப்பிடத் தக்கது!...

மேலே படிக்க முடியாமல் தடுத்தது பழக்கப்பட்ட குரல்!

''அப்பா!'' என்று அழைத்தபடி உள்ளே நுழைந்த நளினியைக் கண்டதும் என் கண்கள் ஆச்சரியத்தாலும் மகிழ்ச்சியாலும் மலர்ந்தன! ஆனால் என்னை அங்கு சந்தித்ததில் சிறிதும் வியப்படையாதவளாக, உரிமையுடன் ஆசிரியரின் அருகில்போய் அமர்ந்து கொண்டாள் நளினி.



''அப்பா! நேற்று இரவு தியேட்டரிலிருந்து திரும்பும்போது எனக்கு ஏற்பட இருந்த கார் விபத்திலிருந்து ஒருவர் காப்பாற்றினர் என்று நான் சொன்னேனே, அந்த அவர் 'இவர்'தானப்பா!'' என்று என்னைச் சுட்டிக்காட்டி நளினி ஆசிரியரிடம் சொல்லியபோது எனக்குத் தலையில் 'ஐஸ்' கட்டியை வைத்தது போல் ஆயிற்று!

''சேச்சே! இருக்காது நளினி!'' என்று ஆசிரியர் மறுத்ததைக் கண்டதும் எனக்குக் கோபம் வரவே குறுக்கிட்டு, ''கிடையாது சார்! நான்தான் நேற்று...!'' என்று மெதுவாக ஆரம்பித்தேன்.

நான் முடிப்பதற்குள் புன்சிரிப்புடன், ''நீங்கள்தான் நேற்று குமாரி குந்தளாவின் நடனத்துக்குப் போயிருந்தீர்களே?'' என்று ஆசிரியர் சொன்னவுடன்தான் எனக்கு ஏற்பட்ட 'எக்கச்சக்கமான' நிலைமையை உணர்ந்து கொண்டேன்!

''இல்லை, அப்பா! இவர்தான் அவர்!'' என்ருள் நளினி அழுத்தம்திருத்தமாக.

''நீ சொல்வது தவறு, அம்மா! அது வேறு யாராவதாக இருக்கலாம்!'' என்று எதிர்வாதம் புரிந்தார் ஆசிரியர்.

''நிச்சயமாக அவரும் இவரும் ஒருவர்தான், அப்பா!''—பிடிவாதமாகக் கூறினாள் நளினி.

''சொன்னால் நம்பமாட்டேன் என்கிருயே, அம்மா! இவர் நேற்று நடனக் கச்சேரிக்கல்லவா போயிருந்தார்!—எதற்கு வீண் தகராறு? அவரையே கேட்டு விடலாம்!'' என்று சொல்லியவராக என் பக்கம் திரும்பி, ''மிஸ்டர், பாலு! இவளைக் காப்பாற்றியது நீங்கள்தானு? நேற்று மாலை நீங்கள் எங்கிருந்தீர்கள்? நடனக் கச்சேரி பத்து மணிக்குத்தானே முடிந்தது?'' என்று என்னை மடக்கிக் கேட்டார் ஆசிரியர்.



என்னுடைய நிலைமையை அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். நளினியின் கூற்றை ஆதரித்தால் ஆசிரியரின் கோபத்துக்கு ஆளாக வேண்டும். ஆசிரியருடைய விருப்பத்தின்படி கூறினாலோ நளினியின் காதலை இழக்க வேண்டும். என்ன செய்வது? அவர்கள் இருவருக்கும் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தேன். நடுக் கடலில் தத்தளிக்கும் ஒருவன் திமிங்கிலம்-முதலை இவற்றின் நடுவில் சிக்கிக் கொண்டால் எப்படித் தவிப்பான்? அந்த நிலையில் இருந்தேன் நான்.

கெஞ்சியோ, கொஞ்சியோ நளினியை எப்படியாவது பிறகு சமாதானப் படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் "இல்லை ... ஆமாம் ... ஸார் !... ஹி ..ஹி... ! நேற்று இரவு நான் கலை மன்றத்தில்தான்... இருந்தேன்...!" என்று சொல்லி முடிப்பதற்குள் உடல் வியர்த்து விட்டது. வார்த்தைகள் பயத்தினால் தயங்கித் தயங்கி வெளி வந்தன.

'ஹ...ஹ...ஹா!' என்று சிரித்தபடியே மகளிடம் "நீ சொன்னது தவறுதானே!" என்றார் ஆசிரியர். அதில் விஷமம் கலந்திருப்பதாகத் தோன்றியது.

ஆத்திரமும் ஏமாற்றமும் பொங்கி எழ, "ஏன் பொய் சொல்கிறீர்கள்?...அப்பா! இவர் என்னை மோசம் செய்து விட்டார்!" என்றாள் நளினி. அவள் கண்களில் நீர் துளிக்க ஆரம்பித்தது!

நான் பதில் கூற முடியாமல் திகைத்தேன். ஒரு பக்கம் என் மனத்தைக் கொள்ளை கொண்ட காதலி; மற்றொரு பக்கம் என் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவரான ஆசிரியர் கிருஷ்ணன்!

"உன்னை மாத்திரமில்லை, நளினி! என்னையும் கூட இவர் ஏமாற்றி விட்டார்!" என்ற கடுமையான குரலில் கூறிய ஆசிரியர் அருகிலிருந்த பத்திரிகையில் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சுட்டிக்காட்டி வாசிக்கச் சொன்னார். அதைப் படித்ததும் என் தலை சுழன்றது! உடல் வியர்த்தது! கைகள் மேஜையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டன!

"நேற்று கலை மன்றத்தில் நடைபெற இருந்த குமாரி குந்தளாவின் நடனம் அவருக்குத் திடீரென ஏற்பட்ட உடல்நலக் குறைவினால் நடைபெறவில்லை! அதற்குப் பதிலாக மாயூரம் சகோதரர்களின் நாதஸ்வர இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது!" என்று அப்பத்திரிகையில் இருந்தது.

'அட பாவமே! பொய் சொன்னாலும் இருந்தச் சொல்ல வேண்டும். இந்தப் பத்திரிகையில் வந்த செய்தியைப் படித்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? விவரம் தெரியாமல் இப்படிப் பொய் சொல்லி மாட்டிக் கொண்டு விட்டோமே?' என்று மனத்துக்குள் எண்ணித் தனியாய்த் தவித்தேன்.

"மிஸ்டர் பாலு! நீங்கள் இவ்வளவு மோசமாக நடந்து கொள்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை! கடமையிலிருந்து தவறியது மட்டுமல்லாமல் ஹாஸ்யம் என்ற பெயரில் ஒரு மோசமான விமர்சனம் எழுதி என்னை ஏமாற்றப் பார்த்தீர்கள்! இதைப் போன்றவர்கள் இங்கிருக்க வேண்டியதில்லை. இப்பத்திரிகையின் உதவி ஆசிரியர் என்ற பதவியிலிருந்தும் இப்போதே உங்களை நீக்கி விட்டேன்!" என்றார் கடுமையாக.


அவர் மேலே கூறியது என் காதுகளில் விழவில்லை. கண்கள் இருண்டன! தலை சுற்றியது! மேஜையைப் பற்றியிருந்த கைகள் பிடியைத் தளர்த்தின! எங்கோ அதள பாதாளத்தில் என்னைப் பிடித்துத் தள்ளுவது போல் இருந்தது. அடுத்த கணம் நினைவிழந்தவனாகக் கீழே சாய்ந்தேன்.


சிறிது நேரம் கழித்துக் கண் விழித்துப் பார்த்தபோது நான் ஆசிரியரின் வீட்டுக் கட்டிலில் படுத்திருப்பதையும் என் அருகில் ஆசிரியரும் நளினியும் நிற்பதையும் கண்டேன். மீண்டும் எனக்கு மயக்கம் வரும் போல் இருந்தது!

"அப்பா! நீங்கள் உண்மையைச் சொல்லி விடுங்கள்! இல்லாவிட்டால் இவர் மீண்டும் நினைவிழந்து விடப் போகிறார்!" என்று நளினி பதற்றத்துடன் கூறியதைக் கேட்டதும் நான் சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தேன்.

"மிஸ்டர் பாலு! நான் முழு விஷயத்தையும் சொல்லுவதற்குள் நீங்கள் மயக்கமுற்று விட்டீர்கள். உங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் அன்றே என்னிடம் நளினி சொன்னாள். அதிலிருந்து அவள் மனத்தையும் புரிந்துகொண்ட நான், அவள்மீது உங்களுக்கு இருக்கும் பிரியத்தைப் பரிசோதிக்க எண்ணினேன். அதில் நீங்கள் வெற்றிபெற்று விட்டீர்கள்! அதனால் உங்களை உதவி ஆசிரியர் என்ற பதவியிலிருந்து நீக்கிவிட்டு நாம் புதிதாக ஆரம்பிக்க இருக்கும் பாலர் பத்திரிகையின் ஆசிரியராக நியமித்து விட்டு, அப்படியே இந்தப் பொல்லாத பெண்ணையும் உங்கள் காலில் கட்டி விடுவதென்று..."

அவர் சொல்லி முடிப்பதற்குள் நான் மீண்டும் மயக்கமுற்றேன். ஆனால் 'இரண்டுக்குமுள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரியாதா, என்ன?





63. நேயர்கள் கடிதம்

நேயர்களின் கடிதங்கள் வழக்கம் போலவே பஞ்சாமிர்தமும் 'ப்ரூட் ஸலா'துமாக இருக்கின்றன.

புதிய தொடர் என் கொடுக்கத் தொடங்கிய பிறகு 200 கடிதங்களுக்கும் மேலாக வந்துள்ளன. பதில் தபாலுக்குக் கூலியனுப்பியவருக்கெல்லாம் பதில் உடன் எழுதப்பட்டது. நோயின் கடுமை, நோயாளியின் நிலைமை இவைகளை எண்ணி அவசியம் பதில் எழுதவேண்டியவர்களுக்குப் பதில் தபால் கூலி அனுப்பாதவரா யிருப்பினும்...[முக்கியமாக இலங்கை நேயரில் சிலர்] பதில் எழுதப்பட்டது.

கடிதம் 84/2ல் பெங்களூர் சகோதரி எழுதுவதைக் கேளுங்கள். "...கட்டுரையில் வரும் லேகியம், தைலம் இவற்றில் சிலவற்றுக்குப் பெயர் (செய்யும் முறையின் கீழேயோ அல்லது மேலேயோ) இருக்கிறது. சிலவற்றுக்குப் பெயர்களே இருப்பதில்லை. வேறு ஒரு கட்டுரையில், இன்ன கட்டுரையில் எழுதியிருக்கும் இன்ன லேகியம் அல்லது தைலம் உபயோகிக்கவும் என்றால், என்னைப் போலுள்ள மந்த புத்தியுள்ளவர்கள் எல்லாவற்றையும் தேடிக் கண்டுபிடித்தாலும் அதுவோ அல்லவோ என்ற சந்தேகம் உண்டாகிறது. ஆகையால் தயவு செய்து எல்லாவற்றுக்கும் பெயர்களைத் தெரிவிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்..."

இச்சகோதரி எவ்வளவு ஜாக்ரதையுடன் நாட்டு வைத்தியக் கட்டுரைகளைச் சேர்த்து வைத்துப் பயன்படுத்திக் கொள்கிறார், பாருங்கள். இப்படி ஊக்கமுள்ள நேயர் ஊருக்கு ஒன்று இரண்டு பேர் இருந்தால் போதுமே! நம் நாட்டு வைத்தியம் புத்துயிர் பெற்று ஒவ்வொரு வீட்டிலும் நிலைபெறுமே!

சுற்றுப் பிரயாணத் திட்டத்தைப் பற்றி எழுதியிருந்ததை வரவேற்ற வகையில் இதே சகோதரி எழுதுகிறாள்...

"...ஆகையால் தாங்கள் எப்பொழுதாவது இந்த மகள் வீட்டுக்கு வரச் சௌகரியப்படுமா? தாங்கள் எப்பொழுது வர வசதியாகும் என்பதை எழுதினால் உங்களுக்கு டிக்கட்டுக்குப் பணம் அனுப்புகிறேன்..."

என்ன அன்பு! என்ன அன்பு! மகளே! மகளுக்கும் சகோதரிக்கும் வண்மை வரிசை செய்வதும் அங்கமணி எடுப்பதும்தான் எமது மரபு—பண்புங்கூட. உன்னிடமிருந்து ரயில் கூலி ஏற்காமலேயே வரத்தான் போகிறேன். பிரயாணத் திட்டத்தைப் பற்றி விரைவில் தெரிவிக்கிறேன்.

மேலும் இச் சகோதரி எழுதுகிறாள்: "...திரிபலாதி லேஹியம் செய்வதற்கு, அது நாட்டு வைத்தியத்தில் இன்னும் பிரசுரமாகவில்லை என்று தோன்றுகிறது. அது வெளிவந்த பிறகு அதைச் செய்ய வேணும்..."

நல்லது அம்மா. "இத்திரிபலேமாஜனே" என்று ஒரு யூனானி முறை இருக்கிறது. மிகவும் சிறந்த முறை. அதை விரைவில் எழுதுகிறேன். அச் சமயம் அதே குணமுள்ள வேறு முறைகளையும் எழுதுகிறேன்.

கடிதம் 87/2ல் ஒம்பத்துவேலி—திருக்கருகாவூர் நண்பர் தமது தலை சுற்றல்-மயக்கம்—ரத்த அழுத்தம்—சிறுநீரில் இனிப்பு ஆகியவற்றுக்குச் சிகிச்சை கேட்டிருக்கிறார்.

விஷயம் பெரியது. விளக்கமான கட்டுரை எழுத வேணும். தலை சுற்றல், மயக்கம் என்பது பல காரணங்களால் ஏற்படலாம். நண்பருக்குள்ளது அவற்றுள் ஒன்று. இவ்விஷயமான விளக்கத்தைக் கட்டுரையாக எழுதும் போது, எல்லாக் காரணங்களையும் தெளிவு படுத்தவும் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி சிகிச்சை முறைகளை விளக்கவும் வேண்டும். இவ்வித விளக்கம் 10 கட்டுரைகள் வரையில் ஆகும். நேயர்களுக்கு அலுப்புத் தட்டி விடுமோ என்ற பயம் ஒரு புறம் எழுகிறது. கட்டாயம் இவ்விஷயமாக எழுதித்தானாகவேண்டும் என்றால் எழுதுகிறேன். ஆனால் ஒன்று, இடையில் 'இதென்னையா? முடியாத தலை சுற்றலாய்ப் போச்சு!' என்று குறை சொல்லக்கூடாது. இவ்விஷயமாக நேயர்களின் மனத்தை அறிய விரும்புகிறேன். பிறகுதான் கட்டுரைகளை எழுதுவேன்.

கடிதம் 94/2ல் இலங்கை நண்பர் எழுதுகிறார்.

"சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்று ஒரு பழஞ்சொல் உண்டல்லவா?

நேயரும் வேறொருவரைப் பார்த்துத் தானும் எண்ணெய்க் குளி நேரத்தில் மூக்கில் (நஸ்யமாக) எண்ணெயை உறிஞ்சினார். எண்ணெய்க் குளியான

தும் வெய்யிலில் சுற்றித் திரிந்தார். மழையிலும் மாலையில் நனைந்தார். இரவு கண் விழித்தார்.

இதைத் தொடர்ந்து கடுமன், ஜுரம் என்று ஆரம்பமான வியாதி ஏழு வருஷ காலமாக, 'உயிரை வாங்கும்' தொடர்த் தும்மல், மூக்கு அடைப்பு, சுவாஸம் தடைபடுதல், ஜீரணக் குறைவு, பசி இல்லாமை, இருமல், சளித் துப்பல் என்று இப்படி ஒரு தீராத் தொல்லையாகி விட்டது.

ஐயா! தொடர்த் தும்மல், ஈஸினொபைல் விஷயமாகத் தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் விஷயங்கள் மூலம் உமது உபாதைகளுக்கு நிவர்த்தி காணலாம். ஏழு வருஷ காலம் கஷ்டத்தை அனுபவித்துள்ளீர். மேற்சொன்ன கட்டுரைகளில் விளக்கியுள்ள உபாயங்கள் மூலம் விரைவில் சுகம் பெறுவீர்.

கடிதம் 97/2ல் மதுரை நண்பர் தமது பத்தொன்பது வருஷத்திய 'காதில் சீழை'ப் பற்றி எழுதுகிறார்.

ஸுரஸாதி தைலத்தைத் தலைக்குத் தேய்க்க வேண்டும். ஆனால் தலைக்கு ஜலம் விட்டுக் குளிக்கக் கூடாது.

காதில் விட க்ஷார தைலம் ஒவ்வொரு சொட்டு. உள்ளுக்குத் தஞ்சை அரண்மனை முறைப்படி தயாரித்த அச்வகந்தா லேகியம் கூஷ்மாண்ட ரஸாயனம் ஆகியவை உபயோகிக்கலாம். கட்டாயமாகக் குணமாகும்.

கடிதம் 116/2ல் திருத்துரைப்பூண்டி நண்பர் 'ஆல்புமின் யூரியா' என்னும் பிஷ்ட மேகத்தைப் பற்றி எழுதியுள்ளார்.

விஸ்தாரமாக எழுத வேண்டிய விஷயம். உரிய காலத்தில் எழுதப்படும். இதனிடையில் நண்பர் ஒன்று செய்வது நலம். பிஞ்சு முள்ளங்கியாகப் பொறுக்கி எடுத்துச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி, வெய்யிலில் காயவைத்து எடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

பிரதி தினமும் காலையில் எழுந்ததும் மேற்சொன்ன முள்ளங்கி வற்றலில் கொஞ்சம் எடுத்து ஒரு சட்டி ஜலத்தில் இட்டுக் கொதிக்க வைத்துக் கஷாயம் போட்டுக் கொள்ளவும். சமையலில் ஜலம் விடவேண்டிய இடத்திலெல்லாம் இந்த முள்ளங்கிக் கஷாயத்தையே உபயோகித்து வரவும். சோறு சமைக்கவும், குழம்பு ரஸம் வைக்கவும், காய்கறி கூட்டுவகைகள் செய்யவும், ஜலத்துக்குப் பதில் மேற்சொன்ன முள்ளங்கிக் கஷாயத்தை உபயோகிக்க வேண்டும். ஒன்று இரண்டு வாரம் இதைச் செய்த பின் குறைகுணத்தைத் தெரிவிக்கவும்.

கடிதம் 131/2ல் கல்கத்தா நண்பர் தமது ஐந்து வயதுப் பெண்ணின் இரண்டு வருஷத்திய எக்ஸிமாவைப் பற்றி எழுதுகிறார். "......பல இங்கிலீஷ் டாக்டர்களிடம் காண்பித்து, கல்கத்தாவில் Specialist என்று சொல்பவர்களிடம் காண்பித்து......" ஆயிற்று. பிறகு ஹோமியோபதி வைத்தியம்.

இப்படியாக நடந்து வரும்பொழுது சமீபத்தில் ஒரு டாக்டர் இம் மகளின் மலத்தைப் பரிசோதித்து அதில் ஏதோ ஒரு வகைக் கிருமி இருப்பதாகத் தெளிந்து சொன்னாராம். இவர் இதற்காக மருந்துகள் கொடுத்தார். ஊசிகள் போட்டார். ஏதோ சிறிது குணமாவதாகத் தெரிந்தது. மருந்தை நிறுத்தியதும் பழைய குருடி என்ற கதைதான்..... 'இதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டிருக்கிறார்.

நேயர்கள் கடிதம் என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீநிவாசபுரம் சகோதரியொருவர் தாம் செய்து கொண்ட சிகிச்சையைத் தெரிவித்தார். நானும் அதை ஏனைய நேயர்களின் சௌகர்யத்துக்காகப் பிரசுரித்திருந்தேன். அந்த மருந்துகளைக் குழந்தைகளுக்கு மேலுக்கு உபயோகிப்பதுடன் உள்ளுக்குச் சிறிது மாணிபத்ர குடம் கொடுத்து வந்தால், மலத்தில் கண்ட கிருமிகளும் குணமாகும்; எக்ஸிமாவும் குணமாகும்.

கடிதம் 135/2ல், தஞ்சை நண்பர் எழுதுகிறார். அவருக்கு-தலைவலி மயக்கம், வாந்தி, நெஞ்சு வலி, அஜீர்ணம், புளித்த ஏப்பம், இரைப்பை விரணம், வயிற்றுவலி, முதுகுவலி, இடுப்பு வலி, மூல நோய், கிருமிகளின் உபாதை, நாட்பட்ட மலச்சிக்கல் ஆகியவை தீர ஒரு மருந்து வேணும். அது ஒரு லேஹியமாகவும் இருத்தல் அவசியம். இந்த லேஹியத்தைச் செய்யும் முறையையும் எழுதியனுப்ப வேணுமென்று விரும்புகிறார். மேலும்,—

தாம் ஒரு லேஹியத்தைத் தயாரித்து உபயோகித்ததாகவும் அதனால் யாதொரு குணமும் ஏற்படவில்லை என்றும் எழுதுகிறார்.

நண்பர் செய்து உபயோகித்த லேஹியத்தைப் பற்றி எனக்கு ஒருவித அனுபவமும் இல்லை. மற்றும், இவருக்கு உள்ள நோய்க்குச் சிகிச்சை செய்யும் முன், மூலம் இருக்குமானால் அதை ஆபரேஷன் செய்து களைவது மேல். பிறகு மருந்துகளைப் பற்றி யோசிக்கலாம்.

மருந்துகளைச் சாப்பிடுவதாயின் ஆம்ர பல்லவாதி லேஹியத்தில் கால், அரை தோலா வீதம் தினம் 2 தரம் ஆகாரத்துக்கு முன் சாப்பிடுவதும், மாணிபத்ர குடம் என்ற லேஹியத்தில் அரைத் தோலா இரவு படுப்பதற்கு முன்பு சாப்பிடுவதும் நலம்.



சமீபத்தில் இங்கிலாந்துக்குச் சென்றிருந்த இந்திய மல்யுத்த வீரர் திரு தாராசிங் சுமார் நூறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். கடைசியில் அமெரிக்க மல்யுத்த வீரர் லோ தெஸ்ஸை-யுடன் நடத்திய யுத்தத்தில் யாருக்கும் வெற்றி தோல்வியில்லை 'ட்ரா'வில் முடிந்தது. இப்படிப் புகழ் பெற்ற தாராசிங் இங்கிலாந்தைவிட்டு அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன் பி. பி. ஸி ரேடியோவின் இந்தியப் பகுதி திருமதி சத்துணவ பாரதிய அவர்களுக்கு ஒரு பேட்டியளித்தார். அந்தக் காட்சியை மேலே படத்தில் காணலாம்!

கடிதம் 141/2ல் சிங்கப்பூர் வாழும் நேயர் ஒருவர் எழுதுவதைக் கண்டு உள்ளம் குளிருகிறது, உடல் பூரிக்கிறது.

இவ்வன்பர் 'கல்கி'யில் வெளியான நாட்டு வைத்தியக் கட்டுரையைப்படித்து அதிலிருந்து தெளிந்த உபாயத்தால் அவ்வூரின் பெரிய டாக்டர்களுக் கெல்லாம் கண்ணாமூச்சி காட்டி வந்தநோயைக் குணப்படுத்தியுள்ளார். இனி அவர் கடிதத்திலிருந்தே சம்பந்தப்பட்ட பகுதியைத் தெரிவிக்கிறேன்.

"கனம் ஸ்ரீ ஹரி அண்ணா அவர்களுக்கு,

தாங்கள் 10-11-57 'கல்கி'யில் (திர் 37) 'சேற்றுப் புண்' என்ற தலைப்பில் 'புழு வெட்டு' என்ற நோயைப் பற்றி எழுதி, அது வகைக்காக 1. குங்கிலியக்களிம்பு 2. விந்தூராதிலேபம் ஆகிய இருவகை மருந்துகளையும் எழுதியிருந்ததைப்படித்தேன்.

எனது மனைவிக்குச் சென்ற ஒன்றரை வருட காலமாக, புழுவெட்டு என்னும் நோய் வந்து மிகவும் அவஸ்தைப்பட்டாள். அவளுக்கு வயது 26. மூன்று குழந்தைகளுக்குத் தாய். கடைசிக் குழந்தைக்கு வயது நான்கு ஆகிறது. இவ்வுபாதைக்காகப் பெரும் பெரும் டாக்டர்களைப் பார்த்து, சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட வைடமின், பி. பென்ஸிலின், 'செப்டோமைஸின்', 'இன்ப்ரான்' ஆகிய ஊசிகள் போட்டதுடன் வைட்டமின் மாத்திரைகள் சாப்பிட்டதும் கணக்கில் அடங்காது. கையில் சாதம் எடுத்துச் சாப்பிட முடியாது. கையில் பத்து விரல்களையும் பீடித்திருந்தது. டாக்டர் மூலம் ஒரு விரல் நகத்தையும் பிடுங்கியாயிற்று. எல்லா விரல் நகங்களையும் எடுக்க வேண்டுமென்று டாக்டர் அபிப்பிராயப்பட்டார். ஆனால் பயந்து போய் அதற்குச் சம்மதிக்கவில்லை.

மேற்கண்ட நேரத்தில்தான் தங்களுடைய 10-11-57 கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. எனக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. சீக்கும் குணமாகிவிடும் என்று நம்பிக்கை ஏற்பட்டது. உடனே 'குங்குலியக் களிம்பு' செய்து ஒரு மாதம் விரல்களுக்குக் கட்டி வந்தேன். இடது கைவிரல்களில் குணமாகி விட்டது. உடனே விந்தூராதி லேபம் செய்து இரண்டு வாரங்கள் கட்டி வந்தேன். வலி இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. விரல்களை அழுக்கினால் சீழ் வருவதும் நின்று விட்டது. முற்றிலும் குணமாகிவிட்டது."

அன்பர்களே! இத்தனை காலமாக எந்த லட்சியத்துக்காக என்னாலான முயற்சிகளைச் செய்து வந்தேனோ, அந்த லட்சியம் பூர்த்தியாகிறது.

தடுக்கி விழுந்தால் ஒரு டாக்டர், அல்லது ஒரு ஹோட்டல். இப்படி மலிந்து கிடக்கும் நாளில் நாட்டு வைத்தியத்தையும், வீட்டு வைத்தியத்தையும் யார் சட்டை செய்வார்கள்? என்றைக்கோ யாரோ சொன்ன வைத்திய முறையில் இந்த ஸ்புட்னிக் யுகத்தில் யாருக்குத்தான் நம்பிக்கை இருக்கும்? ஆனால் டாக்டரெல்லாம், அல்லது டாக்டரை யெல்லாம் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன நிலையில் அல்லவா இந் நாட்டு வைத்திய முறையையாவது செய்து பார்க்கலாம் என்ற எண்ணம் தோன்றுகிறது?

அந்நிலையில் வியாதியை இன்னதென்று நிச்சயிப்பது; வியாதிக்கு மருந்தை நிச்சயிப்பது; அம்மருந்தைச் செய்வது; அதை ஏற்பது யாவுமே ஒரு நோயாளியேயல்லவா? பயனை அடைபவனும் அவனே! இதற்கெல்லாம் உதவி? இக்கட்டுரைகள்தான். ஆகவே, இக்கட்டுரைகள் விளக்கமாகவும், எளிதில் புரியும் வகையிலும் அமைந்துள்ளன என்பதும், இவை உண்மையிலே உபயோகமாக உள்ளன என்பதும் இவற்றைக் கையாண்டு பலன் பெறுவோரும் உண்டு என்பதும் தெளிவாகின்றன அல்லவா? நண்பர் மேலும் எழுதுகிறார்.

"ஆனால் விரல் நகங்கள் கறுத்து, வளர்ச்சியடையாமல் இருக்கின்றன. கொஞ்சம்

வளர்ந்ததும், நகம் ஒடிந்து விடுகிறது. வளைவாகவும் வளர்கிறது......

"தங்கள் நாட்டு வைத்திய முறையால் பெரும் பெரும் டாக்டர்களால் குணமாக்க முடியாத வியாதி குணமாகி விட்டது. ஆகையால் நகங்கள் கறுத்து வளர்ந்து ஒடிவதையும் குணப்படுத்தவே தங்களின் அன்பான ஆலோசனையைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஸ்டாம்பு வகைக்கு இதுடன் கூப்பன் அனுப்பியிருக்கிறேன்......."

மருந்து எழுதியனுப்பினேன். என்ன மருந்து என்கிறீர்களா? தூர்வா தைலம்—அருகம்புல் எண்ணெய். அவ்வளவுதான்.

அட! இது நமக்குத் தெரிவித்த மருந்துதானே என்கிறீர்களா? ஆமாம், தெரிவித்ததுதான். ஆனால் சிறிது வித்தியாசப்பட்டது.

அருகம் புல்லை இடித்துப் பிழிந்த ரஸம் இரண்டு பாகம், தேங்காய்ப் பால் ஒரு பாகம். இதில் அருகம்புல்லின் வேர், அதிமதுரம் ஆகியவற்றின் அரைப்புத்தான் கல்கம். மெழுகு பாகத்தில் வடிக்கும்போது பாத்திரபாகமாக வெள்ளைக் குங்கிலியம் நிரம்பக் கூட்டிக் குழப்பிவிடவும். மோபிலாயில் கணக்கில் 'திக்'காக முடியும் எண்ணெய். இதைத் தாரை விடவும் பிசுவாக இடவும் உபயோகிக்கும்படியும் எழுதினேன். நகங்களெல்லாம் நிமிர்ந்து நன்றாக வளரும்.

'ஆமாம். இதில் வைட்டமின் 'ஸி' கொடுப்பது நலம் என்பார்களே!' என்கிறீர்களா? வேணுமானால் கொஞ்சம் ச்யவனப்ராச ரஸாயனம் சாப்பிடட்டுமே! இமயமளவில் வைட்டமின் 'ஸி' உண்டாகும்.

'அப்படியா?' என்று ஆச்சரியப்படுகிறீர்களா? நெல்லிக்காய்தான் ச்யவனப்ராசத்தில் முக்கியமான சரக்கு. நெல்லிக்காயில்—ஏனைய புளிப்பு ரஸமுள்ள பொருள்களில் போல்-வைட்டமின் 'ஸி' வேண்டிய மட்டும் இருக்கிறது. ஆனால் ஒரு வித்தியாசம். மற்றுள்ள பொருள்களை நெருப்பில் வேகவிட்டாலும் வெய்யிலில் உலர்த்தினாலும் அவற்றிலுள்ள வைட்டமின் 'ஸி' ஓடிப் போகும். ஆனால் இந்த நெல்லிக்காயிலுள்ள வைட்டமின் 'ஸி' என்னசெய்தாலும் போகாது. இதை மேனாட்டு விஞ்ஞானப்படி ஆராய்ச்சி செய்தவர்களே தெளிந்துள்ளனர். ஆனால் இவர்கள் தெரிந்து கொள்ளத் தக்க வேறு ஒரு பொருளும் இருக்கிறது. நம் நாட்டு வைத்திய சாஸ்திரப்படி நெல்லிக்காயைப் போன்றதுதான் துரிஞ்சிக் காயும் விஞ்ஞானம், ஆராய்ச்சி என்று சொல்லிக் கொண்டிருப்பவர் வேணுமானால் பரீட்சித்து இதையும் தெரிந்து கொள்ளட்டும். நம்மைப் பற்றிய வரையில் இது ஐயந்திரிபறத் தேர்ந்த விஷயம்.

மற்றொரு பெங்களூர் சகோதரி கடிதம் 147|2-ல் எழுதுகிறார்.

இவர் தம் மகனுடைய, 'ஈஸினோபீலியா' 'அடுக்குத் தும்மல்' 'ஆஸ்த்மா' இவைகளைக் கூஷ்மாண்ட ரஸாயனம், அச்வகந்தா லேஹியம், தாளீசாதி சூர்ணம், தலைக்குத் தேய்க்கத் துளசி—வில்வாதி தைலங்கள், நகம் போட்டுக் காய்ச்சிய பீனஸாந்தக தைலம் இவற்றைத் தாமே செய்து உபயோகித்துக் குணப்படுத்தி விட்டார். "....அவன் கடவுள் கிருபையால் சௌக்கியமாய் இருக்கிறான்....இனி வரும் மழை காலத்திலும் குளிர் காலத்திலும் ஏதும் உபத்ரவம் ஏற்படாமல் இருந்தால் வியாதி நிவர்த்தியாயிற்று என்றே சொல்லலாமென்று நினைக்கிறேன். தங்கள் வைத்தியக் கட்டுரைகளுக்கு மிக நன்றி."

கடவுளருளால் நல்ல நிலையிலுள்ள இச் சகோதரிக்கு, வேணுமானால் சீமைப் படிப்பெல்லாம் படித்த டாக்டரைக் கொண்டு தம் வீட்டு வேலைக்காரனுக்கும் வைத்திய வசதியைச் செய்விக்கும் அந்தஸ்தும் செல்வமும் உண்டு. தம் சொந்த மகனுக்கு ஏன் நாட்டு வைத்திய முறைகளைத் தாமே கையாள முன் வந்தார்? ஏற்கெனவே சொன்ன காரணம் தான். வேறு என்ன இருக்க முடியும்?

மேலும், நரையைப் போக்கவல்லது என்று எழுதிய ஆம்ராஸ்தி தைலத்தையும் இச்சகோதரி செய்துள்ளாராம். முன்னொருகால் தெரிவித்த செய் முறைக்கும் இப்போது 'கல்கி'யில் தெரிவித்துள்ளதற்கும் சிறிது வித்தியாசமிருக்கிறதே என்று சுட்டிக்காட்டி இதில் எது சரி என்று விளக்கம் கேட்டிருக்கிறார்.

"தவிர நீலி பிருங்காதியும் தாங்கள் எழுதிய முறைப்படி தயார் செய்து உபயோகித்து வருகிறேன்..." என்றெல்லாம் எழுதிக் கடைசியில் இவருடைய நண்பர் குழுவில் ஒருவருக்கு முகத்திலெல்லாம் திட்டுத் திட்டாய் ஏற்பட்டுள்ள நிற பேதத்தை "ஆங்கிலத்தில் 'லூகோடர்மா' என்கிறார்களே, அதுவாக இருக்குமோ என்று எண்ணுகிறோம்" என்று எழுதி அதற்கும் சிகிச்சை கேட்டிருக்கிறார்.

இதற்குத் தற்போதைக்கு மாங்கொட்டையின் பருப்பைச் சந்தனக் கல்லில் ஜலம் விட்டு உரசி எடுத்த விழுதை நிற பேதமுள்ள இடங்களில் இரவில் பூசும்படியும் பகலில் நிற பேதமுள்ள இடங்களைக் கொத்துக் கொத்தாய் ஒடித்தெடுத்த மாவிலையால் மூடி மாலை வெய்யிலில் கொள்ளும்படியும் இரவில் படுக்கும் முன் மாணிபத்ரகுடத்தில் ஒரு நெல்லிக்காயளவு சாப்பிட்டுப் படுக்கும்படியும் ஒன்றிரண்டு மாசங்களுக்குப் பின் குணாகுணத்தைத் தெரிவிக்கும்படியும் எழுதினேன். (தொடரும்)



எக்லா
தென் இந்தியா விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப் போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம்... மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால். குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ECLAT
TALC POWDER
COLGATE

பொற்கிழி

தம்பி சீனிவாசன்



கண்ணீர்த் திரையினூடே கணவனை நிமிர்ந்து நோக்கினாள் பொன்னாச்சி. ஆழ்ந்த காதலும் அளவற்ற ஆசார்ய பக்தியும் நிரம்பிய இதயத்துக்கு ஏற்ற அகன்ற மார்பு. அரச சேவையிலும் ஆசார்ய சேவையிலும் அழகிய மணவாளப் பெருமானின் சேவையிலும் காய்த்துப் பூரித்த தோள்கள்; திருமாலின் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லித் தழும்பேறின நா; அந்தத் திருநாம வடிவத்தை இட்டு இட்டுத் தழும்பேறிய திருநுதல் — இவற்றையே உற்றுப் பார்க்கமுயன்றாள் பொன்னாச்சி. தன் கணவரின் திருமேனி, அவரது உள்ளத்தைப் போலவே பழுத்து, கனிந்து, இன்று எம்பெருமான் திருவடியில் உதிரத் தயாராயிருப்பதை உணர்ந்தாள்.

"அழாதே, பொன்னாச்சி! இது அழும் வேளையல்ல. நமக்குள் ஏது பிரிவு? உன்னைப் பிரிந்திருக்க என்னால் முடியுமா? என்னைப் பிரிந்திருக்கத்தான் உன்னால் இயலுமா?" என்றுபுன்னகையுடன் கூறிப் பொன்னாச்சியைத் தேற்றினார் வியாதிப் படுக்கையிலிருந்த அவள் கணவர். கட்டிலருகே தரையில் அமர்ந்திருந்த பொன்னாச்சியின் தலையை வருடி, "கண்ணே! நான் இன்று ஆசாரியன் திருவடியை அடைந்தாலும் நீ வருத்தம் காட்டாதே" என்று அவளுக்கு ஓர் அன்புக் கட்டளை இட்டார்.

சடக்கென்று தன் தலையை நிமிர்த்தி இந்த விசித்திரப் பணிக்கு என்ன

பொருள் என்பது போல், தன் கணவரை நோக்கினாள் அவள். பதிலுக்கு அவர் பார்த்த பார்வையில் ஏதோ புரிந்துகொண்ட பொன்னாச்சி, ''அப்படியே, சுவாமி!'' என்றாள்.

கணவர் கண் அயர்ந்தார்.

''உன்னைப் பிரிந்து என்னால் இருக்க முடியுமா?'' என்ற கணவரின் சொற்கள் பொன்னாச்சிக்குப் பழைய நினைவைக் கிளறிவிட்டன.

* * *

உறையூர் மன்னன் அகளங்கன் தனக்கு மெய்காப்பாளராக இருக்கச் சிறந்த ஆட்களைத் தேடிக் கொண்டிருந்தான். தோற்றத்திலும் நெஞ்சுறுதியிலும் வாயுபுத்திரனை ஒத்த உறங்காவில்லி அவன் விரும்பிய குணங்களனைத்தும் பெற்றிருந்தான். அதனால் அரசன் அவனையே தன் மெய்காப்பாளர்களில் ஒருவனாகத் தேர்ந்தெடுத்தான்.

வாழ்க்கையில் எத்தனை எத்தனையோ அதிசயங்கள் நேருவதுண்டல்லவா? அழகே உருவான பொன்னாச்சி எத்தனையோ வாலிபர்களின் இதயங்களைக் கவர்ந்தாள். ஆனால் அவள் அன்பை அடையும் பாக்கியம் பேரழகு படைத்த உறங்காவில்லிக்கே கிடைத்தது. முக்கியமாக, அவளது கண் அழகில் ஈடுபட்டே உறங்காவில்லி அவள் கைப்பிடித்தான்.

காதலர்களின் பிரிவின் துயரை விவரித்துச் சொல்ல முடியுமா? ஒரு கணமும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்க முடியாது என்ற அளவில் இருவர் உள்ளமும் இணைந்திருந்தபோது, தினந்தோறும் மனைவியைத் திருவெள்ளறையில் விட்டு விட்டு, உத்தியோகத்துக்காக உறையூருக்குப் போய் வருவதுகூடக் கஷ்டமாயிருந்தது உறங்காவில்லிக்கு. ஆகவே நாள்தோறும் மனைவியையும் உறையூருக்கு அழைத்துப் போகத் தொடங்கினான் அவன்! போகும்போதும் வரும்போதும் அவளுடன் பேசுவதிலும் அவளது கடைக்கண் வீச்சிலே மனத்தைப் பறி கொடுப்பதிலும் பேரின்பம் கண்டான். உறையூரில் இராஜ சேவகத்தில் ஈடுபட்டுள்ள போதில் பொன்னாச்சியை ஓர் உறவினர்வீட்டில் விட்டு வைப்பது வழக்கம்.

''போகும்போது உன்னோடு பேசிச் செல்வது என்னிடம் ஓர் உற்சாகத்தை ஏற்படுத்துகிறது. அதனால் அரசரிடம் சுறுசுறுப்பாக வேலை பார்க்கிறேன். திரும்பும்போது உன்னுடன் வருவது என் களைப்பை யெல்லாம் நீக்கும் மருந்தாக இருக்கிறது'' என்று பொன்னாச்சியிடம் உறங்காவில்லி அடிக்கடி கூறுவான்.

* * *

பொன்னாச்சி எழுந்தாள். தன்னைவிட்டு அரை நாளும் பிரிய மனமில்லாத கணவர் இதோ நிரந்தரமாகத் தன்னை விட்டுப் பிரியப் போகிறாரே என்று நினைத்தபோது மனத்திலே வேதனை பெருக்கெடுத்தது. கணவர் முகத்தைப் பார்த்தாள். அது அமைதியே உருவாக விளங்கியது. அவர் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன:

'எதிகட்கு இறைவன், யமுனைத்துறைவன்
இணையடியாம்
கதிபெற்றுடைய இராமானுசன்
என்னைக் காத்தனனே!'


பொன்னாச்சி தன் இரு கரங்களையும் எடுத்துக் கூப்பினாள். தேசமெல்லாம் புகழும் பெரியவர் இராமானுஜர் இந்த எளிய இராச சேவகக் குடும்பத்தினரையும் அல்லவா காத்தருளியுள்ளார்! வெறும் உறங்காவில்லியைப் பிள்ளையுறங்காவில்லி தாசர் என்ற வைஷ்ணவப் பிரமுகராக்கி விட்டாரே! வெறும் இராஜ சேவகரை இராஜராஜனான திருவரங்க அண்ணலின் சேவகராக்கினாரே! வெறும் பெண் அழகில் ஈடுபட்டிருந்தவரைப் பேரழகின் எல்லையான பெருமானிடம் ஈடுபட வைத்தாரே...

நேற்றுத்தான் நடந்தது போல் இருக்கிறது, இராமானுஜரை அவர்கள் சந்தித்த நிகழ்ச்சி.

அன்று உறையூர் அரண்மனையில் ஏதோ விசேஷம். மன்னன் அகளங்கன் தன் அருமைப் பணியாள் உறங்காவில்லிக்கு விலையுயர்ந்த பட்டுத் துணிகள் சிலவற்றைப் பரிசளித்திருந்தான். வழக்கத்தை விடச் சீக்கிரமாக அன்றைய அலுவல்கள் முடிந்து விடவே, பொன்னாச்சியோடு உறங்காவில்லி சீக்கிரமே திருவெள்ளறைக்குக் கிளம்பினான்.

வெகு விரைவிலே ஊருக்குப் போக வேண்டுமென்ற ஆசையால் இருவரும் சுற்றுப் பாதையில் செல்லாமல் குறுக்குப் பாதையாக ஆற்றிலே இறங்கி மணலிலே நடக்கலானார்கள்.

சித்திரை வெய்யில் தாங்காமல், சிறிது தூரம் நடந்ததுமே பொன்னாச்சி கால் தளர்ந்து மேனி வாடித் துவண்டுவிட்டாள்.



அவள் நிலையைக் கண்டதும் உறங்காவில்லியின் மனம் அவள் உடல் நிலையைப் போல் ஆயிரம் மடங்கு துடித்தது. சட்டென்று அரசன் அளித்த பட்டு ஆடைகளைக் காவிரி மணலிலே விரித்தான். பொன்னாச்சி தன் பூப் போன்ற பாதங்களால் நடக்க. தன் தாழங் குடையால் அவள் மேனியில் சற்றும் படாமல் பாதுகாத்தான்.

நிழலை அடையும்வரை இவ்வாறே பட்டுத் துணியை எடுத்து எடுத்துப் பிரித்து நடை பாவாடை இட்டு, பொன்னாச்சியை அழைத்துச் சென்றான் உறங்காவில்லி. நிழலை அடைந்ததும் இருவரும் சற்றே களைப்பாறுவதற்கு ஒதுங்கினார்கள்.

கல கல வென்ற ஒரு கம்பீரமான சிரிப்பொலி அவர்களைத் துணுக்குறச் செய்தது.

திரும்பிப் பார்த்தால் அருளைப் பொழியும் இரு கண்கள் அவர்களை நோக்கக் கண்டனர். அக் கண்களுக்கு உரியவரிடம் ஏதோ காந்த சக்திதான் இருக்க வேண்டும். இருவரும் தரையில் விழுந்து அந்தப் பெரியவரை வணங்கி யெழுந்தனர்.

" அப்பனே! எழுந்திரு. உன் பத்தினியிடம் காட்டிய பரிவு என்னைக் கவர்ந்தது. இவ்வளவு அழகிய பெண்ணை ஏன் அப்பா வெய்யிலில் அழைத்துச் செல்கிறாய்?" என்று பரிவோடு அவர் கேட்டார்.

" பெரியவரே! அதிசுந்தர கோமளாங்கியான இந்தப் பெண்ணை விட்டு அரைக்கணமும் என்னால் பிரிந்திருக்க முடிவதில்லை" என்று தொடங்கித் தன்னைப் பற்றிக் கூறினான் உறங்காவில்லி.

" அப்படியா? அழகில் அவ்வளவு ஈடுபட்டவனா நீ! அழகுக்கெல்லாம் அழகு தரும் அழகிய உருவம் ஒன்றை உனக்குக் காட்டுகிறேன்" என்று புன்னகையுடன் கூறிப் பொன்னாச்சியை ஒரு பார்வை பார்த்தார். " ஒரு வேளை உன் மனைவியைக்கூட மறக்கச் செய்துவிடும் அந்த அழகு" என்றார் சிரித்துக் கொண்டே.

பொன்னாச்சிக்குத் துணுக்கென்றது. அடுத்த கணம் அவள் செவியையும் மனத்தையும் குளிரவைத்தன, அவள் கணவனின் இனிய வார்த்தைகள்.

" ஐயா! தாங்கள் காட்டும் அழகைக் காணத் தயாராயிருக்கிறேன். ஆனால் என் பொன்னாச்சியை மறந்துவிடுவேன் என்று மட்டும் நினைக்காதீர்கள்" என்றான்.

* * *

என்னதான் நடந்ததோ, அந்தப் பெரியவர் எதைத்தான் காட்டினாரோ, எப்படித்தான் உபதேசித்தாரோ, அன்று மாலை உறங்காவில்லி வீடு திரும்பியபோது தீவிர வைஷ்ணவனாகக் காட்சியளித்தான். 'நான் உடையவருக்குத் தொண்டனாகி விட்டேன். அழகிய மணவாளப் பெருமானின் அடியார்க்கு அடியானாகி விட்டேன். இனி நான் ஸ்ரீரங்கத்தில் வசிக்கப் போகிறேன்" என்று பொன்னாச்சியிடம் கூறினான்.


" தேவரீருக்குத் தொண்டு செய்வதை விட வேறு கடமை எனக்கு இல்லை. என்னையும் சேர்த்து அழைத்துப் போங்கள்" என்று கெஞ்சினாள் பொன்னாச்சி.


உடையவரின் சீடர்களில் இந்தத் தம்பதிகளின் பக்தி சிரத்தை தனித்து விளங்கியது. கற்றுணர்ந்த மேலோர் தம்மோடு இருக்கையில் உறங்காவில்லியையும் அருகே இருக்கச் செய்வார் உடையவர். மற்றச் சீடர்கள் பொறாமை கொள்ளும் அளவுக்கு உடையவர் உறங்காவில்லியின் மீது அன்பு செலுத்தினார்.

* * *

பொன்னாச்சியின் மனம் பழம் நினைவுகளில் லயித்துவிட்டது. ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் எண்ணி எண்ணிப் பார்த்தபோது, ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே தோன்றக் கூடிய மகான் எவ்வளவு மேலான கருத்துக்களை நமக்கு உபதேசித்துள்ளார் என்று நினைத்து நினைத்து வியந்தாள். நேரிடையாக உபதேசித்த உபதேசங்களை விட, தமது செய்கைகளாலும் வாழ்க்கை நிகழ்ச்சிகளாலும் தெளிவாக்கிய கருத்துக்கள் மனத்திலே இன்னும் ஆழப் பதிந்து கிடக்கின்றன. உறங்காவில்லி அகளங்கனிடத்திலே விடுதலை பெற்ற போது நேர்ந்த ஒரு சம்பவம்......

உறங்காவில்லி உடையவரால் ஆட்கொள்ளப்பட்டுத் திருவரங்கத்துக்கு வந்ததும் தனது சொந்தக் குடும்ப வாழ்க்கை என்று ஒன்றும் வைத்துக் கொள்ளவில்லை. உடையவருடைய மடத்திலே ஓர் ஒதுங்கிய பகுதியிலே வாழ்ந்து வந்தார். மடத்திலே அளிக்கும்





ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, திருவல்லிக்கேணி தர்ம சேவா சங்கத்தின் ஆதரவில் ஜூன் மாதம் 8ந் தேதி இருபத்தொரு பையன்களுக்கு உபநயனம் நடந்தது. ஆயிரம் பேர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. தர்ம சேவா சங்கம் ஆறு வருடங்களாக இந்த நல்ல காரியத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

பிரசாதத்தைப் பொன்னாச்சியுடன் உட்கொண்டு, அகளங்கனிடம் வேலைக்குப் போவார். அரண்மனை ஊழியத்தில் மாதந்தோறும் கிடைக்கும் ஊதியத்தை நேரே உடையவரின் பாதத்தில் சேர்ப்பது வழக்கம்.

உறங்காவில்லியின் பக்திப் பெருக்கை உணர்ந்த மன்னன் இனிமேல் அவரை அரண்மனைச் சேவகத்தில் அமர்த்தி வைப்பது அபசாரம் என்று உணர்ந்தான். ஆகவே அந்தப் பக்தரிடம், "இனித் தாங்கள் பகவத் கைங்கரியத்திலேயே ஈடுபட்டிருங்கள். நான் மாதா மாதம் வழக்கம் போல அனுப்பும் காணிக்கையைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று விடுதலை கொடுத்தான்.

அதற்கு அடுத்த மாதம் அகளங்கனிடமிருந்து கிடைத்த பொற்கிழியை உடையவர் பாதத்தில் சமர்ப்பிக்கப் போனபோது, "பிள்ளாய்! நீதான் அரசசேவையில் இல்லையே! உனக்கு ஏது இந்த தனம்?" என்று கேட்டார் இராமானுஜ முனி.

உறங்காவில்லி நிலைமையை விளக்கினார்.

அதற்கு உடையவர் அளித்த பதில் சொற்களால் அல்ல. சைகையால். தமது புறங்கையால் பொற்கிழியைத் தள்ளினார். உறங்காவில்லியைப் பார்த்துப் புன்னகை பூத்தார். பின்னர், "நீ உழைத்துக் கொண்டு வந்த தனம் பாகவத கைங்கர்யத்துக்கு உவப்பாய் இருந்தது. உழைக்காமல் பெற்ற இந்தப் பணம் நமக்குவேண்டாம்" என்றுவிளக்கினார்.

அன்று கற்றுக் கொண்ட அந்தப் புதிய உபதேசத்தை உறங்காவில்லிதாசர் என்றுமே மறக்கவில்லை. தமது உடைமையும் உழைப்பும் பாகவத கைங்கரியத்துக்கே என்று அர்ப்பணம் செய்தார்.

• • •

பொன்னாச்சியால் இந்த நினைவு அலைகளிலிருந்து மீளவே முடியவில்லை. வீட்டு வேலைகள் ஒன்றையும் கவனிக்கவே மனம் எழவில்லை. வீட்டு வேலை என்றே ஒன்றும்தான் இல்லையே! கடந்த சில வாரங்களாக அவர்களது வீடு வீடாகவா இருக்கிறது!

"பொன்னரங்கம்தான் ஊராக இருக்கிறதா? என்றைக்கு உடையவர் திருநாட்டுக்கு எழுந்தருளினாரோ, அன்றே ஊரில் முக்கியமாக உறங்காவில்லிதாசரின் இல்லத்தில் களையே போய்விட்டதே! 'என் ஆசார்யன் இல்லாதபோது எனக்கு இந்த உலகில் என்ன வேலை? எதற்காக நான் உணவு கொள்ள வேண்டும்?' என்ற பிடிவாதத்தோடல்லவா உறங்காவில்லி தாசர்மெலிந்து வருகிறார். உணவின்றி உடல்வாட, வாழ்வில் ஊக்கமில்லாததால் உயிர்விட, துவண்டு வருகிறாரே பொன்னாச்சியின் கண்முன்னே! அவருக்கு எப்படி எந்த வேலையிலாவது நாட்டம் செல்லும்?


அரண்மனை ஊட்டத்திலும் சரி, ஆசார்ய மறைவுக்குப் பின் ஏற்பட்ட இந்த வாட்டத்திலும் சரி, தன்னைத் தன் கணவர் கைவிடாது கூட வைத்திருப்பதே தான் செய்த பெரும் பாக்கியம் என்று கருதினாள் அந்த மாதரசி. இந்தப் பெரும் பேற்றுக்குக்கூட அல்லவா ஒரு சமயம் ஆபத்து வந்து விட்டது! அந்தச் சம்பவத்தைப் பற்றி நினைக்கும்போதே பொன்னாச்சிக்குப் புல்லரித்தது.

நகைகள் என்றாலே பொன்னாச்சிக்கு மிக்க ஆசை. நகைகளுக்கு அழகு செய்யும் வனப்பு அவள் மேனிக்கு இருந்தது. உறங்காவில்லியும் அவளை ஏராளமான பொன் அணிகளால் அலங்கரித்து மகிழ்விப்பதுண்டு.

ஒரு நாள் உறங்காவில்லி மடத்துக் காரியமாகச் சில கிராமங்களுக்குச் சென்று வர வேண்டியிருந்தது. பொன்னாச்சியைத் தனியே விட்டு விட்டு ஓர் இரவு செல்லும் அளவு அவசர வேலை. வீட்டு வேலைகளை விரைவில் முடித்து விட்டு, மங்கலான முந் நிலவில் வெளி முற்றத்தில் வந்து படுத்தாள் பொன்னாச்சி. உடலில் ஏராளமாகக் கிடந்த நகைகளைக் கூடக் கழற்றவில்லை. இலேசாகக் கண் அயர்ந்தாள்.

சற்று நேரத்தில் ஏதோவொரு உணர்ச்சியால் அவள் தூக்கம் கலைந்தது. மெல்லக் கண் திறந்தாள். கண்களை அவளால் நம்ப முடியவில்லை. உடையவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான இரு ஸ்ரீவைஷ்ணவர்கள் அவளது பொன்னணிகளை வெகு நாசூக்காகக் கழற்றிக் கொண்டிருந்தனர்.

'ஐயோ, திருடன்!' என்று கூவத்தான் முதலில் தோன்றியது. ஆனால் கட்டுப்படுத்திக் கொண்டாள். அவள் அப்போது வாழ்ந்த புது வாழ்வின் பழக்கம் அவளைக் கூவச் செய்ய விடவில்லை. 'ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்த நகைகள்மேல் நாட்டம் வைத்தால் அதற்கு ஏதோ கருத்து இருக்கவேண்டும். பேசாமல் இருப்போம்' என்று மௌனமாயிருந்தாள் அவள். அசையாது தூங்குவது போல் அவள் பாவனை செய்தாள்.



அயல்நாட்டுப் பிரயாணம்

கல்விக்கோட்டை, சார்ட்டர்டு பாங்கியின் அக்கௌண்டெண்டாயிருக்கும் ஸ்ரீ ஏ. எஸ். வைத்திய நாதன், இங்கிலாந்திலிருக்கும் மேற்படி பாங்கியின் தலைமைக் காரியாலயத்தில் பயிற்சி பெறுவதற்குத் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார். மேற்படி பாங்கியின் புது விதிப் படி இந்த ஏற்பாடு நடந்திருக்கிறது. 1958, மே மாதக் கடைசியில் அவர் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்.

நகைக்காக வந்தவர்கள் மெதுவாக வலது காதின் தோட்டை எடுத்துக் கொண்டார்கள். வலது கைவிரல் மோதிரங்களையும், வளையல்களையும் வங்கியையும் ஒவ்வொன்றாக அவர்கள் கவர்ந்தார்கள்.

இடதுபுற நகைகளை எடுக்க அவர்கள் தயங்கினார்கள். பொன்னாச்சி இடப்புறம் ஒருக்களித்துப் படுத்திருந்தாள்!

அவர்கள் தயக்கத்தை உணர்ந்ததும் அவள் மெதுவாகப் புரண்டு கொடுத்தாள். 'இடது புற நகைகளையும் எடுத்துக் கொள்ளட்டுமே' என்னும் பாவனையில்.

ஆனால் அவள் நினைத்தபடி நடக்கவில்லை. அவள் விழித்துக்கொண்டு விட்டாள் என்று வந்தவர்கள் ஒரு பக்க நகைகளோடு பதற்றத்துடன் ஓடியே போய் விட்டார்கள். அதனால் ஏற்பட்ட விபரீதமும் முடிவும்தான் எவ்வளவு விசித்திரமானவை!

பொலபொலவென்று பொழுது புலரும் வேளையில் உள்ளே நுழைந்த உறங்காவில்லி பொன்னாச்சியிடம் ஏதோ மாறுதலைக் கண்டார். அவளிடமிருந்து விஷயத்தையும் கேட்டறிந்தார். பொன்னாச்சி சற்றும் எதிர்பாராத விதமாக அவர் வெகுண்டார். "என்னோடு பேசாதே, நீ!" என்றார்.

பொன்னாச்சிக்கு ஒன்றும் புரியவில்லை. அன்பொழுக எப்போதும் கொஞ்சும் தன் கணவர்தானா இவர்!

"ஐயோ! நான் என்ன தவறு செய்தேன்? ஸ்ரீ வைஷ்ணவர்கள் வந்து நகை பறிக்கும் போது சத்தினால் அவர்கள் நகைகளை எடுக்காமல் ஓடிவிடுவார்கள்; அப்படி நடந்தால் அவர்கள் மனம் நோகும். அது தங்களுக்குப் பிடிக்காது. அதை உணர்ந்து பேசாமல் இருந்தேனே! நான் என்ன தவறு செய்தேன்? புரியவில்லையே!" என்று புலம்பினாள் அவள்.

"புரியவில்லையா? இரண்டு பரம வைஷ்ணவர்கள் வந்து உன் நகைகளைக் கழற்றிக்கொள்ளும்வரை படுத்திருந்தாயே, அதை வெளியே சொல்ல வெட்கமாயில்லை? என் மனைவியா நீ?" என்று கோபத்துடன் வார்த்தைகளைக் கொட்டினார் உறங்காவில்லி.

"பரம வைஷ்ணவர்கள் வந்தார்கள். இவள் படுத்திருந்தாளாம். அவர்களாக ஒரு பக்க நகைகளை எடுத்துக் கொள்ளும்வரையா காத்திருப்பது? உடனே எழுந்து எல்லா நகைகளையும் கழற்றிக் கொடுக்காதவளா என் மனைவி? என்ன பாகவத அபசாரம்!"

பொன்னாச்சிக்குத் துணுக்கென்றது. கணவரின் கோபத்தின் காரணமும் புரிந்தது. மன்னிப்பு கேட்டாள்.

ஆனால் உறங்காவில்லியின் கோபம் தணிவதாயில்லை. பொன்னாச்சியோடு பேசவும் இல்லை. அவள் இட்ட உணவைக்கூட உட்கொள்ளவும் இல்லை.

அன்று பகலுக்குள் மடம் முழுவதும் இந்தத் தம்பதியின் அதிசய ஊடல் செய்தி பரவிவிட்டது. உடையவரின் திருச் செவிகளிலும் இது எட்டியது. அவர் உடனே தமது சீடர்கள் அனைவரையும் அருகே அழைத்தார். உறங்காவில்லியையும் பொன்னாச்சி



"மனுஷன். ஒருவரும் இல்லாமல் தனக்குத்தானே பேசிண்டு இருக்காரே!"
"அவர் கட்சிக் கூட்டங்களில் பேசிப் பழக்கம், அதனால் தான்!"

யையும் வரவழைத்தார். அனைவர் முன்னிலையிலும் அவர்கள் ஊடலின் காரணத்தை விவரிக்கச் செய்தார்.

உறங்காவில்லி அந்தச் சம்பவத்தை வர்ணித்து விட்டு வெறுப்புடன், "பாகவத அபசாரம் செய்து விட்டாள் இந்தப் பெண். இவள் இனிமேல் என் மனைவி அல்ல. இவளுடன் எனக்கு ஒரு தொடர்பும் இடையாது" என்றார்.

பொன்னாச்சியின் உடலும் உள்ளமும் குன்றிக் குறுகிப் போய் விட்டன.

உடையவர் புன்னகை பூத்தார். "அப்படியானால் இவளை என் இஷ்டம்போல் நடத்தலாமா?" என்று கேட்டார்.

"தாங்கள் எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்" என்று விரைப்புடனே பேசினார் உறங்காவில்லி.

மாறாத புன்னகையுடன் உடையவர், "சரி! என் அன்பர்களில் சிறந்தவருக்கு நான் பொன்னாச்சியை அன்புடன் அளிக்கிறேன்" என்று சொல்லி ஒரு கணம் நிறுத்தினார். தம் அருகில் இருந்த ஒரு சிறு பெட்டியை எடுத்துப் பொன்னாச்சியிடம் கொடுத்தார். "அம்மா! உன்னை இதோ நிற்கும் இந்த பரம பாகவதரான உறங்காவில்லிக்குக் கொடுக்கிறேன்... உறங்காவில்லிதாசரே! இவளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்!" என்று கூறினார்.

பெட்டியைத் திறந்தால் அதற்குள் முதல் நாள் எடுத்துச் செல்லப்பட்ட பொன்னாச்சியின் ஒரு பக்க நகைகள் முழுதும் இருந்தன.

உறங்காவில்லிக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் உடையவரோ மாறாத புன்னகையுடன், "உம் மனைவி பாகவத கைங்கரியத்தில் உமக்குக் குறைந்தவளில்லை. அவளை மனைவியாகப் பெற்ற நீர் பாக்கியசாலி" என்று வாழ்த்தி அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

போன உயிர் வந்தது போல் இருந்தது பொன்னாச்சிக்கு. அதைப் பற்றிப் பல வருஷங்களுக்குப் பிறகு நினைத்துப் பார்த்த போதும் அவளுக்கு உடலில் நடுக்கம் ஏற்பட்டது. எத்தகைய கணவரை இழந்து விடுவதற்கு இருந்தாள் அவள்!

அந்தப் பயங்கரப் பரீட்சைக்கு உடையவர் அவர்களை உள்ளாக்கியது ஏன் என்பதைப் பின்னர் உடையவரின் சீடர் மூலம் உணர்ந்தனர். உடையவர் அவர்கள்மேல் வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு உறுதியானது என்பதையும் புரிந்து கொண்டனர்.

அந்தச் சம்பவம் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்தான் உடையவர் காது

கேட்க அவரது சீடரில் சிலர் உறங்காவில்லியின் மேல் உடையவர் அதிகம் பரிவு காட்டுகிறாரே என்று அசூயையுடன் பேசிக் கொண்டிருந்தனர். அன்று பகலில் அச் சீடர்கள் தமது ஈரத் துணிகளை மடத்து வாசலில் உலர வைத்து விட்டு உள்ளே உணவு அருந்திக் கொண்டிருந்தபோது யாரோ அவர்கள் துணிகளிலிருந்து ஓரோர் சாணைக் கிழித்து விட்டிருந்தனர். உணவுக்குப் பின் வெளியே வந்த சீடர்கள் தம் துணிகளுக்கு நேர்ந்த நிலையைப் பார்த்ததும் பெருங்கூச்சல் போட்டனர். "இந்த மடத்தில் ஒரு திருடன் இருக்கிறான்" என்றெல்லாம் கூவினர். உடையவர் அவர்களைச் சமாதானப்படுத்தினார். "இந்த மடத்தில் இருப்பவர்கள் எல்லாரும் வைஷ்ணவ பாகவதர்கள் தாமே. அவர்களில் ஒருவர் ஒரு சாண் துணியை எடுத்துக் கொண்டால் இப்படி நிந்திக்கலாமா? இப்படி நிந்திப்பது பாகவத அபசாரமில்லையா?" என்று கண்டித்த பிறகே சீடர்களின் கூச்சல் நின்றது. ஆனாலும் அவர்களது முணுமுணுப்பு சிறிதும் அடங்கவில்லை.

ஆகவே, பொன்னாச்சியின் நகை விஷயத்தை அந்தச் சீடர்களின் எதிரில் விவரிக்க வைத்து, "பார்த்தீர்களா! உங்களுக்கும் உறங்காவில்லி தம்பதிக்கும் உள்ள வித்தியாசத்தை? ஈரத் துணியின் ஒரு சாணுக்காக நீங்கள் மன நிம்மதியை இழந்தீர்கள். மனைவி ஒரு பாதி நகைகளை வைஷ்ணவ பாகவதருக்குக் கேளாமலே தரவில்லையே என்பதற்கு மன அமைதியை இழந்தார் அவர். உங்களில் யார் உண்மை பாகவத அபிமானி? அவர் மேல் நான் அதிக அபிமானம் வைத்திருப்பதற்கு வருத்தப்படுவது ஏன்?" என்று உடையவர் கேட்கவும் சீடர்கள் அவமானத்தால் தலை கவிழ்ந்தனர்.

கணவரின் படுக்கையருகே கவலையுடன் காத்திருந்த பொன்னாச்சியின் மனத்திலே இதைப்போன்ற பழம் நினைவுகள் எல்லாம் ஒவ்வொன்றாக வந்து மோதின. அவள் நெஞ்சு வெடிக்கும் போலிருந்தது.

படுக்கையிலிருந்த உறங்காவில்லி கடைசியாகக் கண் விழித்தார். "பொன்னாச்சி!" என்று அழைத்தார் ஒரு முறை.

"பொன்னரங்கா!" என்றார் உறங்காவில்லி கரங்களை உயரத் தூக்கியபடி.

எதற்காக அத்தனை நாள் தவம் கிடந்தாரோ, அந்தத் தவம் பலித்து விட்டது. அவரது ஆசாரியன் திருவடி நிழலை அவர் அடைந்து விட்டார்.

என்ன நேர்ந்தது என்பதைப் பொன்னாச்சி உணர்ந்தாள். ஆனால் அவள் அழவில்லை; ஏனோ கண்ணீர் வரவில்லை; குரலும் எழவில்லை. கணவரின் பாதங்களைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு எழுந்தாள்.

பரம வைஷ்ணவப் பெரியாருக்கு உரிய சகல மரியாதைகளுடன் உறங்காவில்லியின் சரம கைங்கரியங்கள் தொடங்கின. திருவரங்கத்திலிருந்த அத்தனை பிரபலஸ்தர்களும் வந்து அவருக்குக் கடைசி மரியாதை செய்தனர். அழகிய மணவாளன் கோயிலிலிருந்து துளசி மாலை மரியாதை அனுப்பப் பட்டது.


வைஷ்ணவ சிரேஷ்டர்கள் உறங்காவில்லியின் திருமேனியைத் தாங்கிச் செல்லத் தொடங்கினர்.

அந்தக் கணம் வரை, மௌனமாக, சரம கைங்கர்யத்துக்கு வேண்டிய பணிவிடைகளைச் சுறுசுறுப்பாகச் செய்தாள் பொன்னாச்சி. கணவனுக்குச் செய்ய வேண்டிய கடைசிப் பணியையும் குறைவறப் புரிந்த திருப்தி உள்ளத்திலே. ஆனால் நெஞ்சு வெடித்துப் போகும் நிலையும், பேச்சு வராத நிலையும் கண்ணீர் வராத நிலையும் அப்படியே இருந்தன.

கணவனின் உடல் வீட்டு வாசற்படியைத் தாண்டியதும் பொன்னாச்சியின் நெஞ்சு விம்மியது. அழுகை வரும்போல் இருந்தது. ஒரு சொட்டுக் கண்ணீர் கண்ணிலிருந்து புறப்பட்டும் விட்டது.

ஆனால் அக் கண்ணீர்த் துளி கன்னத்தின் வழியே ஓடிய போது அது ஜீவனற்ற சடலத்தின் மீதுதான் வழிந்தது!

ஆம்! வாழ்க்கை முழுதும்—கணமும் பிரிந்திராத காதலை நுகர்ந்த அவளுக்கு அதற்கு மேல் தாங்க முடியவில்லை. அடியற்ற மரம் போல் தெரு வாசலில் விழுந்தாள். கணவருடன் கைகோத்துக் கொண்டு ஆசார்ய திருவடியை அடைய ஓடியது அவள் ஆவி.



முன்னறிவிப்பு...
புதிய மர்பி ரேடியோ மாடல் 0724 மற்ற இதர ரேடியோக்களைவிட மிகவும் போற்றப்படும். ஏனெனில்
மிக அழகிய பெட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.
பல்லாண்டுகளுக்கு மிகச் சிறந்த முறையில் சேவை அளிக்கும்.
0724
மாடல் 0724
6 - வால்வ்
ஆல் - வேவ்
8 பாண்ட்," முழுதும் பாண்ட்ஸ்பிரெட்
ஏஸி அல்லது ஏஸி/டிஸி (இரு மாடல்கள்)
விலை ரூ. 495/-: உள்ளூர் வரிகள் தனி
murphy radio
பல ஆண்டுகளுக்கு உங்களை மகிழ்விக்கும்!
தென் இந்தியாவுக்கு சோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
முகமது இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., பெங்களூர்-ஹைதராபாத்-சென்னை

தமிழ் கூறும் நல்லுலகம்

தமிழ் நாட்டின் எல்லைக்கு மிக அருகி லுள்ள கேரள நாட்டின் ரயில்வே தலைநகர மாக விளங்கும் ஓலவக்கோடில் வாழும் தமி ழர்கள் ஒன்று கூடித் தமிழையும், தமிழர் பண்பையும் மேம்பாட்டையும் காப்பாற்றி, மேன்மேலும் மெருகேற்ற, தமிழ்த்தாயின் சேவைக்காகப் பாடுபடத் '' தமிழ்ச் சங்கம் '' ஒன்றைத் துவக்கியுள்ளார்கள்.

கடந்த 7-6-58 சனிக்கிழமை அன்று தென் பிராந்திய ரயில்வே டிவிஷனல் பர்சனல் அதிகாரி திரு ஏ. வி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் இந்தத் துவக்க விழா வெகு சிறப்பாக நடந்தது.

சங்க கால இலக்கியங்களின் மேன்மையைப் பற்றித் தலைவரும், தமிழரின் பண்பைப் பற்றிப் பாலக்காடு ஜனப் சன்னு சாகிப் பி. ஏ. பி. எல். அவர்களும் பேசினார்கள். தமிழுக்கும் தமிழருக்கும் சேவை செய்ய இச் சங்கம் பாடுபடும் என்பது போன்ற பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேறின. சங்கத்தின் தலைவராகத் திரு ஏ. வி. சுப்பிரமணியமும், உப தலைவராக திரு வி. எஸ். ராமநாதன் அவர்களும் தேர்ந் தெடுக்கப்பட் டார்கள்.

★

பம்பாய் நகர் சுற் றுப்புறப் பகுதியில் உள்ள அந்தேரி என்னுமிடத்தில் தமிழர் பலர் ஒன்றுகூடிக் கூட்டுறவு முறை அடிப் படையில் வீடுகள் கட்டிக் கொண்டு, 'ஸ்ரீராம் நகர்' என்ற காலனியை உரு வாக்கி யிருக்கிறார்கள். அங்குள்ள குழந்தைகளுக் கும் மற்றும் சுற்றுப்புறம் உள்ள குழந்தைகளுக்கும் கல்வி அளிக்க ஒரு சிறந்த பள்ளிக்கூடமும் நிறுவி இருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளியாக ஆரம்பிக்கப் பட்ட இக் கல்விச்சாலை, மக்களின் ஒத்துழைப்பா லும் ஆர்வத்தாலும் மிகச் சிறந்த முறையில் உயர் நிலைப் பள்ளியாக வளர்ந்து வருகிறது. இதன் வளரும் தேவை களைச் சமாளிக்க நான்கு லட்சம் ரூபாயில் பள்ளிக் கூடம், விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடம், நூல் நிலையம் முதலியவற்றை நிறுவ எண்ணி யுள் ளார்கள்.

ஸ்ரீமதி கமலா லக்ஷ்ம ணன் உதவிக் கச்சேரி மூலம் வசூலான தொகை யிலிருந்து புதிதாகக் கட்டிய கட்டடத்தை பம்பாய் நகர ஷெரிப் திரு ஜே. சி. ஜெயின் அவர்கள் ஜூன் மாதம் 8ந் தேதியன்று திறந்து வைத்தார்கள். இந்த விழாவை யொட்டி ஒரு மணி மலரையும் பள்ளிக்கூட நிர்வாகக் குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

★

கோரேகான் தமிழ்ச் சங்கத்தின் ஆதர வில் வான்புகழும் ''வள்ளுவர் தினம்'' தமிழ்ப் பண்டிதர் திரு கே. அப்பாராவ் அவர்கள் தலைமையில் ஜூன் மாதம் 1ந் தேதி நடை பெற்றது. அப்போது குமாரி வே. விசாலம், திரு ஆ. முழுமதி, திரு எஸ். ஆராவமுதன் முதலியோர் திருக்குறளின் பல்வேறு பகுதி களைப் பாங்குற ஆராய்ந்தனர்.

தலைவர் முடிவுரையில், 'தினசரி பத்து குறள்களாவது சங்க அன்பர்கள் ஆர்வ முடன் பயில்வதுதான் வள்ளுவர் தினம் கொண்டாடுவதற்கு அழகு' எனக் கூறினார்.

செயலாளர் நன்றி கூற, குமாரி வே. கல்யாணியின் தமிழ் வாழ்த்துடன் விழா இனிதே முடிவுற்றது.



பம்பாய் நகர் [illegible] பம்பாய்ப் பிரமுகர் திரு பி. ஆர். [illegible] அவர்களின் புதல்வி குமாரி [illegible] அரங்கேற்றம் ஜூன் 7ந் தேதி [illegible] நடந்தேறியது.

★

டில்லித் தமிழ்ச் சங் கம் 1-6-58 ஞாயிறு மாலை திருவள்ளுவர் விழாவை மிகச் சிறந்த முறையில் கொண்டாடி யது. சங்கத் தலைவர் டாக்டர் கிருஷ்ணன் இவ் விழாவுக்குத் தலைமைவகித் துச் சிறப்பித்தார்கள்.

'வள்ளுவன் தன்னை உல கினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று போற்றினார் பாரதியார். அந்த மகா னின் பெருமையைப் பற் றித் திருமதி கனகசவுந் தரி, பி. ஏ. (ஆனர்ஸ்), திரு சாலை. இளந்திரை யன், திரு மு. ராமநாதன் முதலியவர்கள் சொற் பொழிவாற்றினார்கள்.

பல அன்பர்கள் இந்த விழாவில் திருக்குறளில் தங்களுக் கேற்பட்ட ஐயங்களைத் தீர்த்துக் கொண்டார்கள்.

மொத்தத்தில் டில்லித் தமிழ்ச்சங்கத்தார் டில்லித் தமிழர்களுக்குத் தமிழ் மணம் கமழ்ந்த ஒரு இலக் கிய விருந்தைத் திருவள் ளுவர் விழா வாயிலாக அளித்தார்கள்.

இன்றே பாருங்கள்!



சென்னை மற்றும் தென்னாடெங்கும்
வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது

தியாகஜீவனும்



அத்தியாயம் 23

உடலின் வெப்பமும் நிலவின் தண்மையும்

தன் தகப்பனார் ராமலிங்கத்தைப் பார்த்ததுமே நடராஜனுக்கு அவருடைய இருதயத்தில் கோளாறு என்று புரிந்து விட்டது. பதற்றப்படாமல் உடனே அவருக்குத் தேவையான சிகிச்சைகளைச் செய்தான். 'அமைல் நைட்ரைட்' என்ற மருந்தை அவர் மூக்குக்கு அருகே காட்டினான். 'கொராமின்' என்ற மற்றொரு மருந்தை ஊசி மூலம் உடலுள் செலுத்தினான். சிறிது நேரத்தில் ராமலிங்கத்தின் வலி குறைந்து அவர் முகம் தெளிவடைந்தது.

அரும்பிய புன்னகையுடன், "நடராஜா! இன்னும் ஒரேஒரு முறைதான் எனக்குப் பாக்கியிருக்கிறது. நான் விடை பெற்றுக் கொள்ள" என்றார்.

"அப்பா! அனுபவம் நிறைந்த நீங்களே இப்படிப் பேசலாமா? உங்கள் உடம்புக்கு ஒன்றுமேயில்லை. சற்று அமைதியாகப் படுத்திருங்கள். நீங்கள் வீணாக உடலை அலட்டிக்கொள்ளாதீர்கள்."

"அனுபவம் நிறைந்தவனாக இருப்பதால்தான் இப்படிப் பேசுகிறேன். நானும் ஒரு டாக்டர் என்பதை மறந்து போய் விடாதே! இன்னொரு முறை இந்த மார்பு வலி உண்டானால் நான் பிழைப்பது துர்லபம்" என்றார்.

"முதல் முறை இந்த மார்பு வலி எப்போது கண்டது, அப்பா? ஏன் என்னிடம் நீங்கள் சொல்லவில்லை?"

"நீ லண்டனில் இருக்கும் போது இந்த வலி ஏற்பட்டது. நான் சொல்லாமல் நீயாகவே இப்போது தெரிந்து கொண்டு விட்டாயே!"

"சில மாதங்கள் நீங்கள் அவசியம் பூரண ஓய்வு எடுத்

பெருநிலவு



கி. ராஜேந்திரன்

துக் கொள்ள வேண்டும். உடம்பு சற்றுத் தேறியதும் இதற்குச் சிகிச்சை ஆரம்பித்து விடலாம், அப்பா! இருதய நிபுணரான டாக்டர் கிளாடுபெக் என்ற அமெரிக்க நிபுணர் இந்த நோய்க்கு ஒரு புதிய சஸ்திர சிகிச்சையைக் கையாண்டுவெற்றிகண்டிருக்கிறார்.'

தந்தையும் மகனும் மிகுந்த ஆர்வத்துடன் அந்தப் புதிய சஸ்திர சிகிச்சையைப் பற்றிச் சர்ச்சை செய்வதற்குத் தொடங்கினார்கள்.

* * *

வீட்டையும் நர்ஸிங்ஹோமையும் சுற்றியிருந்த விசாலமான தோட்டத்தின் ஒரு மூலையில், மலர்க் கொடிகளுக்கு அருகே புல் தரையில் போடப்பட்டிருந்த ஒரு ஆசனத்தில் அமர்ந்து அத்தானுடைய வருகைக்காகக் காத்திருந்தாள் விமலா. வழக்கமாக அவர்கள் தனிமையில் சந்திக்கும் இடம் அது. அவர் ஏன் இன்னும் வரவில்லை? ஒரு வேளை வராமலே இருந்து விடுவாரோ? நேற்று கோபித்துக் கொண்டு போன பிறகு என்னிடம் ஒருவார்த்தைகூடப் பேசவில்லையே?

அவளுக்குத் தெரியாமல் பின்புறமாக வந்து நின்று அவள் கண்களை மெதுவாகப் பொத்தினான் நடராஜன். தன் விரல்கள் கண்ணீரால் நனைந்ததை உணர்ந்து துணுக்குற்றான். விமலாவின் அருகே உட்கார்ந்து கொண்டு, ''ஏன் கண்ணீர் வடிக்கிறாய், விமலா?'' என்று மிகுந்த பரிவுடன் கேட்டான்.

''ஒன்றுமில்லை, அத்தான்!'' என்றாள் புன்னகையை வரவழைத்துக் கொண்டு.

''நேற்று உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டேன். அதற்காகத்தானே அழுகிறாய்?''

''அந்தச் சம்பவத்தினால் எனக்கு வருத்தமே கிடையாது. என் மனத்திலிருந்து ஒரு பெரிய சுமையை இறக்கி வைத்தது போல் இருக்கிறது. சில மணி நேரங்கள் என் மனம் தடுமாறிப் போனது உண்மை தானே, அத்தான்? அதை உங்களிடம் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லி விட்டதில் எனக்கு நிம்மதியாக இருக்கிறது. இப்பொழுது நீங்கள் என்னை மன்னித்து விட்டீர்கள் அல்லவா?''

''உன்னிடம் அப்படி முரட்டுத்தனமாக நடந்துகொண்டதற்குக் காரணம் என்ன, தெரியுமா? உன் மீது, எனக்கு இருக்கும் அளவு கடந்த காதல்தான்!

நம்முடைய காதலுக்கிடையே மூன்றாவது மனிதனுடைய நிழல்கூட விழுவதை நான் விரும்ப முடியாது.''

''உண்மையில் மணி ரொம்ப நல்லவர் தான், அத்தான்! 'நண்ணாத பொருள் நான்' என்று தெரிந்தும் மனம் கலங்காமல் என் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதாக வாக்களித்தவர் நல்லவராகத் தானே இருக்க வேண்டும்?''

''எனக்கு அப்படித் தோன்றவில்லை. அவன் உன்னிடம் நெருங்கிப் பேசுவதும் உறவாடுவதும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவன் காலில் விழுந்து நீ கெஞ்சியதை வெறுக்கிறேன்.''

''நீங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருந்தீர்களா, அத்தான்?''

''ஆமாம்! கோபத்தில் முதலில் இங்கிருந்து வேகமாக நடந்தேன். வீட்டை நெருங்கும்போது, உன்னை இங்கே புல்வெளியில் கிடந்து கதறவிட்டுச் சென்ற



என்னை 'இரக்கமற்றவன்' என்று இடித்துக் காட்டியது உள் மனம். திரும்பி வந்தேன். பேச்சுக்குரல் கேட்கவே அதோ தெரிகிறதே, அந்த மரத்துக்குப் பின்னாலிருந்து நடந்ததையெல்லாம் கவனித்தேன். நீங்கள் பேசியதையெல்லாம் காது கொடுத்துக் கேட்டேன். மணி உன்னைக் காதலிக்கிறான் என்பதையும் என்னை வெறுக்கிறான் என்பதையும் புரிந்து கொண்டேன்.''

''தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், அத்தான்! அவர் என்னைக் காதலித்தார் என்பது உண்மை. என்னுடைய எண்ணத்தைப் புரிந்து கொண்டவுடன் அவர் தம் காதலை மறந்து அதைத் தூய நட்பாக மாற்றிக்கொள்ள முயன்று வருகிறார். நான் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து உள்ள நிறைவு பெறுவதற்குப் பிரயாசைப்படுகிறார்.''

''என்னால் அதை நம்ப முடியவில்லை. மேனாட்டு மனோதத்துவ நிபுணர் ஒருவர் என்ன சொல்கிறார், தெரியுமா? காதல் கலப்பில்லாத தூய்மையான நட்பு மட்டும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே இருக்காது.. இருக்கவே முடியாது என்கிறார்.''

''மனோதத்துவத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் மணியைப் பற்றி நன்றாகத் தெரியும். என்னுடைய நல்வாழ்வே அவருடைய லட்சியம். நான் எப்போதாவது கண்ணீர் விட்டுத் துக்கப்பட்டால் அந்த லட்சியம் தவிடுபொடியாகி விட்டதாகக் கருதுகிறார்.''

''அவனுடைய லட்சியங்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. அவனுடன் நீ நெருங்கிப் பழகுவதை நான் விரும்பவில்லை'' என்றான் நடராஜன்.

விமலா சற்று நேரம் மௌனமாக இருந்தாள். மணியின் சார்பில் மேலும் மேலும் வாதாடி, அத்தானுடைய கோபத்தை வளர்ப்பதற்கு அவள் விரும்பவில்லை. ''நேற்றையச் சம்பவங்கள் நேற்றோடு போகட்டும், அத்தான்! வேறு ஏதாவது பேசுங்கள்'' என்றாள்.

இரவாகிய மங்கை தன் நாயகனான பூரண சந்திரனை மகிழ்ச்சியுடன் சிரித்தபடியே வரவேற்றாள். ஆயிரமாயிரம் நட்சத்திரங்களாக அவளுடைய பற்கள் பிரகாசித்தன. இரவின் மோகனச் சிரிப்பில், நிலவின் தண்மையில் அந்தக் காதலர்கள் சொக்கிப் போனார்கள்.

அவர்களுடைய தனிமையில் தலையிட விரும்பாததால்தானோ என்னவோ, முழுமதி கருமேகம் ஒன்றினுள் மறைய ஆரம்பித்தது. அதைக் கவனித்துக்கொண்டே இருந்த நடராஜன் மகாகவி பாரதியாரின் பாடல் ஒன்றை வாய்க்குள்ளாகவே முணுமுணுக்க ஆரம்பித்தான்.

''உரக்கப் பாடுங்கள், அத்தான்! நானும் கேட்கிறேன்'' என்றாள் விமலா.

வெண்ணிலாவைப் பார்த்துக் கொண்டே நடராஜன் பாடினான்:

மெல்லிய மேகத்திரைக்குள் மறைந்திடும்
வெண்ணிலாவே!—உன்றன்
மேனி யழகு மிகைபடக் காணுது
வெண்ணிலாவே!

நடராஜன் பாடுவதை நிறுத்திச் சந்திரனைப் பார்த்தவாறே யோசனையில் ஆழ்ந்தான். ''ஏன் நிறுத்தி விட்டீர்கள்? மேலே பாடுங்கள்'' என்று தூண்டினாள் விமலா. நிலவொளியில் தந்தப் பதுமை போல் விளங்கிய அவளைப் பார்த்துப் பாடினான் நடராஜன்.

நல்லியலார் யவனத்தியர் மேனியை
வெண்ணிலாவே!—மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும்
வெண்ணிலாவே!

''போங்கள் அத்தான்!'' என்று சொல்லிக் கொண்டே வெட்கத்தினால்

தன்னுடைய முகத்தை இரு கரங்களா லும் மூடிக் கொண்டாள் விமலா.

மதி முகத்தை மூடியிருக்கும் மலர்க் கரங்களைப் பார்த்துக் கொண்டே தொடர்ந்து பாடினான் நடராஜன்.

சொல்லிய வார்த்தையில் நாணுற்றனை
போலும் வெண்ணிலாவே!—நின்
சோதி வதன முழுது மறைத்தனை
வெண்ணிலாவே!

புல்லியன் செய்த பிழை பொறுத்தே
யருள் வெண்ணிலாவே!—இருள்
போகிடச் செய்து நினதெழில்
காட்டுதி, வெண்ணிலாவே!

விமலாவின் முகத்தை மூடி மறைத் திருந்த விரல்கள் மெல்ல மெல்ல அகன் றன. மேகத்திரையும் மெதுவாக விலகிக் கொள்ளப் பூரண சந்திரனும் நீல வானில் வெளிப்பட்டது.

நிலவொளியில் ஒருவரை யொருவர் எத்தனை நேரம் பார்த்துக் கொண்டிருந் தார்களோ? அவர்களுக்கே தெரியாது. உருவமில்லாத, விவரம் புரியாத ஒரு இன்ப நிலையில் காற்றிலே மிதந்து மிதந்து, எங்கேயோ போய்க் கொண்டேயிருந்தார்கள். எத்தனை எத்தனையோ எண்ணக் குவியல்கள் அப்போது அவர்கள் உள்ளங்களில் பொங்கி எழுந்தன.

திடீரென்று அவர்களுடைய முகங்களிலே பயத்தின் சாயல் படர்ந்தது. தங்களுடைய எண்ணங்களை எண்ணியே அவர்கள் பயந்து போனார்கள்.



வானத்திலே கருமேகங்கள் வந்து சூழ்ந்து கொண்டன. ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு ஆகாயத்தையே கிழித்து விடுவதுபோல், கண்களைக் குருடாக்கும் பிரகாசத்துடன் ஒரு கொடி மின்னல் பாய்ந்து சென்றது. அதை அடுத்து அண்ட சராசரங்களுக்கெல்லாம் எட்டி எதிரொலிக்கும்படியான ஒரு பேரிடி இடித்தது. நடுங்கிப் போன விமலாவை ஆதரவாக அணைத்துக் கொள்ள முற்பட்டான் நடராஜன். அதற்கு முன்னால் அவள் தன் காதுகளைப் பொத்திக் கொண்டே ஓடிச் சென்று விட்டாள். வீட்டை அடைவதற்குள் தெப்பமாக நனைந்து விட்டார்கள். அப்படி நனைந்ததில் அவர்களுடைய எண்ணங்கள் தெளிவுபெற்றன.

அன்று இரவு நடராஜன் படுத்துக் கொண்டு தூங்குவதற்கு உண்மையாகவே பிரயத்தனப்பட்டான். ஆனால் அந்தப் பாழாய்ப் போன தூக்கம் வந்தால்தானே? நித்திராதேவி அவனை அடியோடு புறக்கணித்து விட்டாள்.

அவன் கண் எதிரே மென்மையான நீண்ட விரல்களால் மூடி மறைக்கப் பட்ட விமலாவின் நிலவு முகம் தோன்றியது. முகச் சோதியை மூடி மறைத் திருந்த அந்த விரல்களைச் சிறிது சிறிதாக விலக்கி விட்டான் அவன்.

'போங்கள், அத்தான்!' என்று அமுது பொங்கும் கொஞ்சும் மொழியில் சொல்லி முகத்தைத் தோளில் இடித்துக் கொண்டாள் விமலா.

'இப்படிப் போங்கள் போங்கள் என்று சொல்லிக்கொண்டே இருந்தால் நிஜமாகவே ஒரு நாள் போயே விடுவேன்!'

'போங்களேன், பார்க்கலாம்! எங்கே போய்விடப் போகிறீர்கள்? எப்படியும் திரும்ப என்னிடம்வந்துதானே ஆகவேண்டும்?' என்றாள் உருவெளித் தோற்ற விமலா நம்பிக்கையோடு.

'அப்படி நினைத்து நினைத்து நீ இறுமாந்து கொண்டிருக்க வேண்டியதுதான். திரும்பி வரமுடியாத இடத்துக்கு, என் இதயத்தில் என்னை அறியாமலே புகுந்து விட்ட நிர்மலாவிடம் போயே விடுவேன்.'

திடுக்கிட்டுப் போய்ப் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தான் நடராஜன்.

'இது என்ன பைத்தியக்கார எண்ணம்? விமலாவை விட்டு விட்டு நிர்மலாவிடம் போவதாவது?'

அவன் படுக்கைக்கு அருகே ஒரு அகன்ற கண்ணாடிப் பாத்திரத்தில் இரண்டு தங்க மீன்கள் தண்ணீரில் சுற்றிச் சுற்றி வந்தன. மேலேயிருந்து தொங்கிய மின்சார இரவு விளக்கு மங்கலான ஒளி பரப்பியது. மங்கிய ஒளியிலும் அந்தத் தங்க மீன்கள் தக தக வென்று பளபளத்தன.

நடராஜன் பார்த்துக் கொண்டேயிருக்கையில் அவை நிர்மலாவின் அகன்ற மயக்கும் விழிகளாக மாறின. அந்தக் கண்கள் ஒரு வித ஏக்கத்தோடு தன்னைப் பார்ப்பதாக அவனுக்குத் தோன்றியது. 'என்னை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா?' என்று பரிதாபமாகக்

கெஞ்சுவது போலிருந்தன. அடுத்த கணம் நடராஜனுக்கு உடல் முழுவதும் குப்பென்று வியர்த்து விட்டது.

அவன் மனத்தைப் பேதலிக்கச் செய்த அந்தக் கண்களை மறக்க விரும்பிக் குப்புறப் படுத்துத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். கண்களை மூடினாலும் திறந்தாலும், எந்தப் பக்கம் திரும்பினாலும் அந்த இரு கண்கள், மயக்கும் விழிகள், கரிய பெரிய நயனங்கள் தோன்றிக் கொண்டே இருந்தன. ஒரு கணம் அவை சிரிக்கும். ஒருசமயம் அவனுக்காக ஏங்கும். அடுத்த கணம் அவற்றின் ஓரங்களில் இரு கண்ணீர்த் துளிகள் முத்துப்போல் தேங்கி நின்று அவனை நிலைகுலையச்செய்யும். வேறு ஒரு சமயம் அந்தப் பொல்லாத கண்கள் அவனை அன்புடன் வரவேற்கும்.

பித்துப் பிடித்தவனைப் போல் தடுமாறினான் நடராஜன். பைத்தியமா? பிரமையா? காதலா? அவனுக்கே புரியவில்லை. 'காதலாக எப்படி இருக்க முடியும்? ஒரே சமயத்தில் இரு பெண்களை ஒருவன் காதலிக்க முடியுமா? இளம் பிராயத்திலிருந்து என்னுடன் நெருங்கிப் பழகி வந்திருக்கிறாளே விமலா. அவளை நான் காதலிக்க வில்லையா?' உறக்கமற்ற இரவுகள் பலவற்றை அனுபவித்தான் நடராஜன். இரவையே வெறுக்க ஆரம்பித்தான். இரவின் தனிமையில் அவன் மனம் திக்கு திசை புரியாமல் தத்தளித்தது. அப்பொழுதெல்லாம் அவன் உடலில் வெப்பம் அதிகமாயிற்று. அறையில் குறுக்கேயும் நெடுக்கேயும் நடந்துகொண்டிருப்பான்.

உடல் வெப்பத்தைத் தாளமுடியாமல் குளிக்கும் அறைக்குச் சென்று இரண்டு செம்பு தண்ணீரைத் தலையில் ஊற்றிக் கொண்டு திரும்புவான். அப்படியும் வெப்பம் தணியாது. உறக்கமின்மையால் அவன் உடல் சோர்ந்து போகும். கண்கள் எரிச்சலைக் கொடுக்கும். இரண்டு தூக்க மாத்திரைகளை விழுங்கி விட்டு உணர்ச்சியற்ற மரக் கட்டையாகப் படுக்கையில் படுத்துக் கிடப்பான்.

வழக்கம் போல் ஒரு நாள் நடராஜன் தூங்குவதற்குப் பெருமுயற்சி செய்து கொண்டிருந்தான். "டாக்டர்! டாக்டர்!" என்று நிர்மலா அழைக்கும் குரல் நடு நிசிக்கு மேல் கேட்டது. நிர்மலாவின் இனிய குரல் மின்னலைப் போல் அவன் காதுக்குள் பாய்ந்தது.

அத்தியாயம் 24

ரத்தச் சிவப்பும் குங்குமச் சிவப்பும்

வைத்தியநாதன் சொன்னதைக் கேட்டதும், மல்லிகா அடைந்த அளவு கடந்த ஏமாற்றம் வெகு சீக்கிரத்தில் சேகர் மீது கோபமாக மாறியது. சீறிப் பாய முனைந்தது, அந்தப் பெண் புலி.

மல்லிகா அறையை விட்டு வெளியே செல்வதைக் கவனித்த நாதன் சட்டென்று எழுந்திருந்து அவளுக்கு முன்னால் போய் நின்று கொண்டார். நிலைப் படியில் நின்று தமது கரங்களால் வழியை மறித்தவாறே, "எங்கே போகிறாய், மல்லிகா?" என்று கேட்டார்.

"அவரைப் பார்க்கத்தான்!"

"இந்த இருளிலா?"

"ஆம்."

"தன்னந்தனியாகவா?"

"இருளைக் கண்டு எனக்குப் பயமில்லை. தனிமையைக் கண்டும் எனக்குப் பயமில்லை. அர்த்த ராத்திரியில், அனைவரும் தூங்கிய பிறகு மன அமைதியை நாடி ஆற்றங்கரையில் பேய் பிசாசைப்போல நடந்து சென்று எனக்குப் பழக்கமாகி விட்டது. சென்னைக்கு வந்த புதிதில் முதன் முதலாகத் தனிமையை எண்ணிப் பயந்தேன். இப்போது அந்தப் பயமும் போய் விட்டது. சிறிது யோசித்துப் பார்த்தால் உண்மையிலேயே நான் அநாதைதானே? தங்கை சரஸ்வதியை விட்டால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? சேகர் ஒருவர்தான் எனக்குத் துணை என்று இருந்தேன். இப்போது அவரும் எனக்கு இல்லை என்றாகிவிட்டது. இனி என் வாழ்நாள் முழுவதும் நான் தன்னந் தனியாக, அநாதையாகக் கிடந்து உழல வேண்டியதுதான்."

"நீ நினைப்பது தவறு, மல்லிகா! உன் வாழ்நாள் முழுவதும் உனக்கு உறுதுணையாக நான் இருக்கத் தயார்."

அதற்குப் பதில் சொல்லாமல், "வழியை விடுங்கள். இப்போது உங்களுடன் பேசிக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை" என்றாள் மல்லிகா.

"அவசரம் அவசரமாகச் சேகர் வீட்டை அடைந்து விடுகிறாய் என்றே வைத்துக் கொள்வோம். அங்கு போன பிறகு என்ன செய்யப் போகிறாய்?"

"அவர் செய்துவிட்ட அநியாயத்தைச் சுட்டிக் காட்டுவேன். எனக்கு அவர் இழைத்து விட்ட அநீதியை, கொடுமையை எடுத்துச் சொல்வேன்."

"இதையெல்லாம் யாரிடம் சொல்லப் போகிறாய், மல்லிகா?" என்றார் நாதன்.

"அவரிடம், அவர் பெற்றோர்களிடம், அவர் மனைவியிடம், இன்னும் யாரெல்லாம் அங்கு இருக்கிறார்களோ, அவர்களிடமெல்லாம் சொல்வேன். இப்படிப்பட்ட மகனைப் பெற்றெடுத்த வயிறு பற்றி எரியும். இத்தகைய மனிதனை வளர்த்த தகப்பன் உள்ளம் நோகும். அவனைக் கணவனாக அடைந்த மனைவி துக்கப்பட்டுக் கண்ணீர் வடிப்பாள்."

"அதையெல்லாம் பார்த்து நீ சந்தோஷப்படுவாயாக்கும்! அந்தக் குடும்பத்தில் மனக்கசப்பு வளருவதைக்கண்டு உன் மனம் குதூகலப்படும்! கணவன் கட்டிய தாலியைப் பார்த்துப் பார்த்து அதைக் கண்ணீரால் நனைக்கும் மனைவியின் துயரத்தைக்கண்டு நீ வாய்விட்டுச் சிரிப்பாய்! அப்படித்தானே?"

மல்லிகாவின் கோபம் எங்கேயோ போய் விட்டது. மௌனமாகத் திரும்பினாள். அருகே இருந்த நாற்காலியில் பொத்தென்று விழுந்தாள். இதுவரையில் எட்டிக் கூடப் பார்க்காத கண்ணீர் இப்போது அருவியாகப் பெருகியது. கேவிக் கேவி அழுதாள்.

"மல்லிகா! சேகருடைய வீட்டுக்குப் போய் அவனைப் பற்றிப் புகார் செய்து அவனைப்பழிவாங்கும் எண்ணத்தை மட்டும் விட்டுவிடு. அவன் மனைவியும் உன்னைப் போலவே ஒரு பெண்தான் என்பதை மறந்து விடாதே. அவனுடைய இன்ப வாழ்வை, அமைதியான இல்லற சுகத்தை நாசமாக்கி விடாதே. ஞாபகம் இருக்கட்டும்!" என்று சொல்லிக் கொண்டே அந்த அறையை விட்டு வேகமாக வெளியே நடந்தார் நாதன்.

* * *

நிலைக்கண்ணாடியின் முன்னால் உட்கார்ந்து கொண்டு தன் முகத்தை அதில் பார்த்துக் கொண்டிருந்தாள் மல்லிகா. அவள் சென்னைக்கு வந்தது முதல் நேற்று வரையில் அந்த முகத்தில் தவழ்ந்த பெருமிதம்; துள்ளிவிளையாடிய குறுநகை இப்போது அங்கு இல்லை. அழுது அழுது கண்கள் சிவந்து போயிருந்தன. முகமோ களையிழந்து வீங்கிப் போய் இருந்தது. தன்னுடைய பயங்கர முகத்தைப் பார்க்கச் சகியாமல் அவள் வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

நிலைக் கண்ணாடிக்கு அருகே ஒரு சிறிய மேசையின் மீது சில அலங்காரப் பொருள்கள் இருந்தன. அவற்றுடன் ஒரு வெள்ளிக் குங்குமச் சிமிழும் இருந்தது. 'சட்'டென்று அந்தக் குங்குமச் சிமிழைக் கையில் எடுத்தாள் மல்லிகா. அவளுடைய சொத்து என்று சொல்லக் கூடியது அந்தச் சிமிழ் ஒன்றுதான்! அவளுக்குரிய விலையுயர்ந்த பொருள் ஐந்து ரூபாய் பெறுமானமுள்ள அந்தக் குங்குமச் சிமிழ்தான்! அவளுடைய தகப்பனார் கண்ணப்பன் தாயார் கமலத்தைத் திருமணம் செய்து கொண்ட புதிதில் தன் அருமை மனைவிக்கு அன்புப் பரிசாக அளித்த இன்பப் பொருள் அது. கண்ணப்பன் திடீரென்று ஒரு நாள் வீட்டை விட்டுப் போன பிறகும், சில காலம் கமலம் அந்தக் குங்குமச் சிமிழை உபயோகித்தாள். அதன் பிறகு ஊராருடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் இணங்க அதை உபயோகிப்பதை நிறுத்தி விட்டாள். அதன் பிறகு மல்லிகாவின் ஏகபோக உரிமையாயிற்று அந்தக் குங்குமச் சிமிழ். தங்கை சரஸ்வதியைக்கூட அதை எடுக்க அனுமதிக்க மாட்டாள். தானே அவளுக்குத் திலகமிடுவாள்.

இப்போது அந்தக் குங்குமச் சிமிழைப் பார்த்ததும் மல்லிகாவுக்குப் பழைய



நினைவுகள் தோன்ற ஆரம்பித்தன! மறுபடியும் விம்மலும் குழறலும் தோன்றி, ரத்தமெனவே சிவந்து போயிருந்த கண்களை மேலும் சிவக்கச் செய்தது.

இந்த விம்மலையும் குழறலையும் கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் சேகர். அவன் வருவதைத் தனக்கு முன்னால் இருந்த நிலைக் கண்ணாடியில் கவனித்தாள் மல்லிகா. சடாரென்று திரும்பினாள். அவள் வலது கையிலிருந்த குங்குமச் சிமிழ் 'விர்' என்று பறந்தது. அறையின் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்குப் பாய்ந்து அங்கே நின்ற சேகரின் நெற்றியைத் தாக்கியது.



தாக்கிய இடத்திலிருந்து குங்கும வெள்ளம் போல் ரத்தம் 'குபுகுபு' வென்று பொங்கியது. சேகருடைய முகம் முழுவதும் ரத்தம்! அவனுடைய கழுத்தில் உதிரம் வழிந்தோடியது! அவன் அணிந்திருந்த மடிப்பு கலையாத சட்டை முழுவதும் ரத்தத்தால் நனைக்கப்பட்டுச் சிவப்பு நிறமாக மாறியது. பெருக்கெடுத்து ஓடும் ரத்த ஆற்றில் மூழ்கி எழுந்தவனைப் போல் பயங்கரமாகக் காட்சியளித்தான் சேகர். அந்தக் கோரக் காட்சியைப் பார்க்கச் சகியாமல் அருவருப்பினால் கண்களை இறுக மூடிக்கொண்டாள் மல்லிகா.

"ஏன் கண்களை மூடிக் கொள்கிறாய் மல்லிகா? பயமாயிருக்கிறதா? தாக்குவதற்கு இருக்கும் தைரியம் தாக்கப் பட்டவனைப் பார்ப்பதற்கு இல்லையா?" என்று ஏளனமாகக் கேட்டான் சேகர்.

மல்லிகா கண்களைத் திறக்கவில்லை. மேலும் இறுக மூடிக்கொண்டாள்.

"நான் என்ன பேயா? பிசாசா? எதற்குப் பயப்படுகிறாய்? எங்கே, சிறிது கண்ணைத் திறந்து பார்."


கொஞ்சம் கொஞ்சமாகக் கண்களைத் திறந்தாள் அவள். "ஐயோ, ரத்தம்!" என்று அலறிக் கொண்டே இரு கரங்களாலும் தன் முகத்தை மூடி மறைத்துக் கொண்டாள்.

வாய்விட்டுப் பெரிதாகச் சிரித்தான் சேகர். அந்தச் சிரிப்பு மல்லிகாவின் பயங்கரத்தை அதிகரிக்கச் செய்து அவள் உடலை நடுநடுங்க வைத்தது.

"இது அவ்வளவும் ரத்தம் இல்லை, மல்லிகா! குங்குமம்! நெற்றியில் மட்டும் தான் சிறிது காயம்பட்டு ரத்தம் வழிந்து செல்கிறது. மற்றவையெல்லாம் வெறும்குங்குமம்தான். பயப்படாதே!"

தைரியமடைந்தாள் மல்லிகா. கண்களைத் திறந்து பார்த்தாள். குங்குமச்

TIC 54 a




1938 கல்யாணமானவுடன் தனராஜ், தனது புதிய ஹெர்குலிஸ் சைக்கிளுக்கு தன் மைத்துனன் இவ்வளவு பலமாக போட்டியிடுவான் என்று சிறிதும் எதிர்பார்க்கவில்லை.

இன்று அதே சைக்கிளை தனது மாப்பிள்ளை எடுத்து உபயோகிப்பதை அவரால் தடுக்க முடியவில்லை ; ஹெர்குலிஸ் அனைவருக்கும் மிக உபயோகமாகவிருப்பதே இதன் ரகசியம்.

ஹெர்குலிஸ் ஓர் சைக்கிள் மட்டும் அல்ல,

வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் சுற்றுணை



சுமார் 50 வருஷங்களாக உயர்தர சைக்கிள்களைத் தயாரித்துவரும் அனுபவ மிகுந்தவர்களால் இப்பொழுது, இந்த நுட்பவேலைப்பாடமைந்த ஹெர்குலிஸ் சைக்கிள் டி. ஐ. சைக்கிள்ஸாரின் நவீன தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகிறது. அதன் உயர்தர அமைப்பையும், அதிகப் பிரயாசையில்லாமல் ஓடும் தன்மையையும் கண்டு நீங்கள் ஆச்சரியமடைவீர்கள். சைக்கிள்களில் மிகச்சிறந்தது ஹெர்குலிஸ். ஆயினும் மிதமான விலையில் கிடைக்கிறது.

உங்கள் சைக்கிள் ஒரு சிறந்த மூலதனம். **ஹெர்குலிஸ்** உங்கள் பணத்திற்கு சிறந்த பெறுமானம்.

இந்தியாவில் தயாரிப்பவர்கள்.

டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்

சிமிழின் கூரிய மூடி தாக்கியதால் நெற்றியில் ஏற்பட்டிருந்த சிறிய காயத்தை ஒரு கைக்குட்டையால் இறுகக் கட்டிக் கொண்டான் சேகர். கைக்குட்டையில் ரத்தம் தோய்ந்து நெற்றியின் நடுவே பெரிய ரத்தப் பொட்டு தோன்றியது.

''தண்டிக்கப்பட்டவனுக்கு எதற்காகத் தண்டனை அடைந்தான் என்று தெரிந்து கொள்ள உரிமை உண்டு, மல்லிகா! ஏன் எனக்கு இந்தத் தண்டனை? நேற்று வரை என்னைக் கோபப்பட வேண்டாம் என்று உபதேசம் செய்த நீயே இப்போது எதற்காக இத்தனை கோபம் கொண்டிருக்கிறாய்? நான் செய்த குற்றம்தான் என்ன?''

''நான் சொல்லித்தான் தெரிய வேண்டுமா? அப்படியானால் கேளுங்கள், சொல்கிறேன். கள்ளங் கபடமற்ற ஒரு பெண்ணின் மனத்தைக் கெடுத்தது குற்றம். ஒரு பேதையின் தூயவாழ்வைக் களங்கப்படுத்தியது குற்றம். அவளுக்கு உங்களிடம் காதலை வளரச் செய்தது குற்றம். உங்களையே நம்பியிருந்த ஒருத்தியைக் கைவிட்டு மோசம் செய்ய முனைந்தது குற்றம். உங்களுக்குத் திருமணமாகி விட்டது என்பதை மறைத்து விட்டு இன்று வரையில் ஏமாற்றி வந்தது மிகப் பெரிய குற்றம்!''



''ஏன் நிறுத்தி விட்டாய், மல்லிகா? பாக்கி இருக்கும் குற்றச்சாட்டுகளையும் சொல்லி விடுவதுதானே? நீ சொல்ல மாட்டாய்? உனக்கு அந்தக் குற்றங்களை நினைத்துப் பார்க்க நேரம் இருக்காது. நானே சொல்கிறேன். கேள்: தந்தையற்ற ஒரு பெண்ணின் மீது பரிவு காட்டியது குற்றம். அவளுடைய தந்தை என்ன ஆனார் என்பதைக் கண்டுபிடிக்க முயன்று வருவது குற்றம். அந்தப் பெண்ணை ஊரார் தூற்றி ஏசியபோது அவளுக்காகப் போராடியது குற்றம். அந்தப் போராட்டத்தில் அவளுக்காக அடிபட்டது குற்றம். அவமானப்பட்டது குற்றம். அவள் தாயாரும் இறந்து போய் யாரும் அற்ற அனாதையாக இருக்கும் போது அவளுக்கு ஆதரவு காட்டியது குற்றம். அவளுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் அளித்தது குற்றம். அவளது எண்ணங்களைப் பூர்த்தி செய்ய இரவும் பகலும் பாடுபடுவது குற்றம். அவளைச் சிறந்த சினிமா நட்சத்திரமாக்கிவிட உழைப்பது குற்றம். இவற்றையெல்லாம் ஏன் விட்டு விட்டாய், மல்லிகா?''

''அந்த உதவிகளை நான் மறக்கவில்லை. அதற்காக நன்றி செலுத்துகிறேன். ஆனால்... ஆனால்...இந்தப் பேதையின் வாழ்வை ஏன் கெடுத்தீர்கள்? உங்களுக்கு நான் என்ன கெடுதல் இழைத்தேன்? மனத்தால்கூட உங்களுக்கு எவ்விதமான தீங்கையும் நினைத்துப் பார்க்காத என்னை எதற்காக மோசம் செய்தீர்கள்? ஏன், பதில் பேச மாட்டேன் என்கிறீர்கள்? ஏன் வாய் திறக்க மறுக்கிறீர்கள்?'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள் மல்லிகா.

சேகருடைய உள்ளம் நெகிழ்ந்து விட்டது. ''உன்னை முதன் முதலாகப் பார்த்தபோது உன்னுடைய கள்ளமற்ற சிரிப்புத்தான் என்னைக் கவர்ந்தது. உன் பவழ வாயைத் திறந்து முத்துப்பல் வரிசை தெரிய நீ 'களுக்'கென்று சிரித்த போது என் உடலில் ஒரு கிளுகிளுப்பு உண்டாயிற்று. அந்த மோகனச் சிரிப்பிலே மயங்கிப் போனேன். அதன்பிறகு, உன்னுடைய கலகலப்பான பேச்சினால் என்னைக் கவர்ந்தாய். உன் முக காந்தியால் என் மனத்தைப் பேதலிக்கச் செய்தாய். உன்னை அடைந்தால்தான் என் ஜன்மம் சாபல்யம் அடையும் என்று நினைத்தேன். என்னை மறந்தேன். என் வாழ்வை மறந்தேன். உன் காதலைப் பெறப் பெரு முயற்சி செய்தேன். அதில் வெற்றி கண்ட பிறகுதான் விரகதாபத்திலே பரிதவித்துக்கொண்டிருந்த என் மனம் நிம்மதி அடைந்தது. தலையாரி வீரப்பவிடம் அடி வாங்கிய பிறகுதான் என்னை ஆட்கொண்டிருந்த மோக மயக்கம் தெளிந்தது. அதன் பிறகாவது உண்மையை உன்னிடம் சொல்லியிருக்கலாம். அதற்குத் தைரியம் வரவில்லை. சென்னைக்கு வந்து விட்டேன். சென்னை நகரச் சூழ்நிலையில் உன்னை மறக்க முயன்றேன். முடியவில்லை. நாட்கள் செல்லச் செல்ல என்னை நீ மறந்து விடுவாய் என்று நினைத்தேன். ஆனால் விடாமல் கடிதங்கள் எழுத ஆரம்பித்தாய். மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு உனக்குப் பதில் எழுதாமல் இருந்தேன். என்னிடமிருந்து பதில் வராததைப் பார்த்தாவது நீ என் மீது வெறுப்படைந்துவிட மாட்டாயா என்று எண்ணினேன். ஆனால் நீ என் மீது கொண்டிருந்த காதல் அசைக்க முடியாததாக இருந்தது. என்னைத் தேடிக் கொண்டு சென்னைக்கே வந்து விட்டாய். உன்னைப் பார்த்தவுடன் என் உள்ளம்

ஆனந்தத்தால் துள்ளியது. என் வீட்டில் இறங்கினால் நீ என்னைப் பற்றித் தெரிந்து கொண்டு விடுவாயோ என்று பயந்து உன்னை இங்கு அழைத்து வந்தேன். உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நான் ஒரு கோழை, மல்லிகா! கோழை! உத்தமப் பெண்ணிடம் உண்மையைச் சொல்வதற்குப் பயந்த கோழை. அவளுடைய சீற்றத்துக்கும் துக்கத்துக்கும் அஞ்சிய கோழை. மனம் என்னுடையது. தயவு செய்து என்னை மன்னித்து விடு, மல்லிகா !''

கேலியும், அருவருப்பும், வேதனையும் கோபமும் நிரம்பிய ஒரு சிரிப்பு சிரித்தாள் மல்லிகா. ''மன்னிப்பா? உனக்கா? பெற்று வளர்த்த தாயையும் தந்தையையும் கடைசிக் காலத்தில் ஆதரிக்காமல் விரட்டுபவனுக்கு மன்னிப்பு உண்டானால் உனக்கும் மன்னிப்பு உண்டு! கருணையே உருவமான கடவுளை நிந்திப்பவனுக்கு மன்னிப்பு கிடைக்குமேயானால் உனக்கும் கிடைக்கலாம்! செய்த நன்றியை மறந்துவிட்ட பாவிக்கு மன்னிப்பு உண்டானால் உனக்கும் மன்னிப்பு உண்டு. போ! போய் விடு!''

'' நிஜமாகத்தான் சொல்கிறாயா, மல்லிகா? உண்மையாகவே உன்னை விட்டு நான் போய்விட வேண்டியது தானா? உன்னுடைய வாழ்க்கையிலிருந்தே என்னை விலகிக் கொள்ளச் சொல்கிறாயா?''

'' இன்னுமா உனக்குச் சந்தேகம் ?''

''ஆத்திரத்தில் இப்படிப் பேசுகிறாய். சற்றுச் சிந்தித்துப் பார் மல்லிகா !''

'' இனிமேல் சிந்திப்பதற்கு ஒன்றுமில்லை, நீ இங்கிருந்து போய்விடு !''

''போய்விடுகிறேன், மல்லிகா! ஆனால் என்றாவது ஒரு நாள் உன் லட்சியங்கள் பூர்த்தியாகாமல் போகாது. அதற்கான சின்னங்களை நான் நாடக ஒத்திகைகளிலேயே பார்த்தேன். அப்படி நீ பெரிய சினிமா நட்சத்திரமாகும்போது என்னை மறந்து விடாதே ! அந்தப் பதவிக்கு நீ உயர நான்தான் மூல காரணம் என்பதை அப்போது மறந்து விடாதே.''

பின்னர், தான் அணிந்திருந்த சட்டையைக் கழற்றி ஒரு முறை உதறினான் சேகர். பொலபொல வென்று குங்குமம் உதிர்ந்தது ! மீண்டும் அதைத் தரித்துக் கொண்டே, '' என்னைப் பற்றி அவதூறு கூறிய உன் புதுக் காதலன் நாதனுடன் இன்பமாக வாழ்க்கை நடத்து. நான் போய் வருகிறேன் '' என்றான்.

குங்குமச் சிமிழைத் தவிர மேசையின் மீது இருந்த மற்ற அலங்காரப் பொருள்களும் ஒன்றன்பின் ஒன்றாகப் பறந்து சென்று சேகரைத் தாக்கின. சீறி நிற்கும் பெண் புலியின் சீற்றத்துக்கு முன்னால் நிற்க முடியாமல் சேகர் திகைத்தான். வேறு வழியின்றி வேகமாகத் திரும்பி நடந்தான்.

அவனுடைய சட்டையிலிருந்து தரையில் உதிர்ந்திருந்த குங்குமச் சிவப்பும் அதன் நடுவே சேகரின் நெற்றியிலிருந்து சொட்டியிருந்த ரத்தச் சிவப்பும் மல்லிகாவைப் பார்த்துச் சிரித்தன. 'இனி உன் நிலை என்ன? 'உனக்கு யார் ஆதரவு?' என்று அவை கேட்பதாகவே அவளுக்குத் தோன்றியது. **(தொடரும்)**



இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத்தின் தலைவராகப் பிரபல ஆடிட்டரும் சமூக ஊழியருமான திரு கே. எஸ். வைத்தியநாத அய்யர் இவ்வாரம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். திரு வைத்தியநாத அய்யர் ஏற்கனவே ஸ்ரீ ராமகான சபையின் தலைவராயிருந்து சமயப் பணியும் பொதுப்பணியும் ஆற்றி வருகிறார். இந்தியர், பாகிஸ்தானியர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொண்டவர்கள் முதலிய பலரும் இந்திய வர்த்தகச் சங்கத்தில் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்தியர்களுக்குக் கடுமையான சோதனைகள் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான இத்தருணத்தில் இந்தியப் பிரஜையாக இருக்கும் திரு வைத்தியநாதய்யர் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதை இந்திய வட்டாரங்கள் திருப்தியுடன் வரவேற்கின்றன.

புதிய இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத் தலைவர் திரு வைத்தியநாத அய்யருக்கு நமது மனமுவந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தந்தி விலாசம் : "ஜீவன்" மெட்ராஸ், மதுரை, காக்கிநாடா
விஜயநகரம் ஸிடி, ராய்பூர் (மத்திய பிரதேஷ்)
கட்டக் (ஒரிஸா ஸ்டேட்)

கே. எம். எஸ். எல்.
சுந்தரராமன் & ஸன்

நூல் வியாபாரம்

31, தங்கசாலைத் தெரு - - மதராஸ்-3

கிளைகள் :

மதுரை	(மதராஸ் ஸ்டேட்)	ராய்பூர்	(மத்திய பிரதேஷ்)
காக்கிநாடா & விஜயநகரம் ஸிடி	(ஆந்திர பிரதேஷ்)	கட்டக்	(ஒரிஸா ஸ்டேட்)

விநியோகஸ்தர்கள் :

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மதுரை - அம்பாசமுத்திரம் - தூத்துக்குடி

மதராஸ் & கிளை ஆபீஸ்களில் 1958 ஜூலை மாதம் 1-ந் தேதி பகல் 12 மணிக்கு புது கணக்கு போடுகிறோமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்

சென்னை கெயிட்டி, பாரத்

இரு தியேட்டர்களிலும்

வெற்றிகரமான 2-வது வாரம்!

★

B. R. பிலிம்ஸ்

பாட்டாளியின் சபதம்



வைஜயந்திமாலா & திலீப் குமார்

டைரக்ஷன் : B. R. சோப்ரா ... இசை : O. P. நய்யார்

தமிழாக்கம் : S. D. சுந்தரம் ... பாடல்கள் : கம்பதாசன்

ஆல் இந்தியா பிலிம் கார்ப்பொரேஷன் வெளியீடு



12. அதள பாதாளம்

வரவர 'ஜல ஜலங்' என்ற ஓசை பலமாகக் கேட்கத் தொடங்கியது. அதோடு ஒரு வித 'கமகம' என்ற மணமும் உண்டாயிற்று. அது என்ன வாசனை என்று அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால் அந்த வாசனை அவனைக் கிறுகிறுக்க வைப்பதை அவன் உணர்ந்தான்.

ஒருவாறாகச் சுரங்க வழி முடிந்தது. ஒரு மண்டபமும் வந்து சேர்ந்தது. ஆனால் முதல் இரண்டு மண்டபங்களுக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்!

மற்ற மண்டபங்களைவிட இது அளவில் சிறியதாக இருந்தது. மண்டபத்துக்குள் கன்னங் கரேல் என்ற மை இருள் கப்பிக் கிடந்தது. நன்றாகக் கூர்ந்து நோக்கித் தான் மண்டபத்தைப் பார்க்க முடிந்தது. அப்படிப் பார்க்கா விட்டாலும் அதனால் மோசம் ஒன்றுமில்லை என்றும் தோன்றியது. ஏனென்றால் வீராங்கன் கடந்து வந்த மற்ற இரண்டு மண்டபங்களைக் காட்டிலும் இது மோசத்திலும் படு மோசமாக இருந்தது. ஒரு வேலைப்பாடா, அலங்காரமா ஒன்றுமில்லை. 'இப்படிப்பட்ட இடத்திலா கீர்த்தி பெற்ற குமரி முத்து இருக்கப் போகிறது?'

வீராங்கனுக்கு இந்த மண்டபத்தில் குமரி முத்து இருக்கும் என்கிற நம்பிக்கையே சிறிதும் இல்லை. ஒருவேளை இதற்குக் கீழே ஒரு நாலாவது மண்டபம் இருந்து அதில் வைத்திருந்தாலும் வைத்திருக்கலாம் என்று ஒரு எண்ணம் உண்டாயிற்று.

உடனே கீழே செல்வதற்கு ஏதாவது ஒரு வழி புலப்படுகிறதா என்று கவனித்தான். தூண்களை அசைத்துப் பார்த்தான். தரையை உதைத்துப் பார்த்தான். சுவர்களைத் தள்ளிப் பார்த்தான். ஒன்றிலாவது பலன் கிடைக்கவில்லை.

இதற்குள் 'ஜல ஜலங்' என்ற ஓசையும் கிறுகிறுக்க வைக்கும் வாசனையும் மிகவும் அதிகரித்தன. அவனுடைய உடல் இலேசாக நடுங்கியது. அது பயத்தாலா அல்லது அந்த வாசனையை நுகர்ந்ததாலா என்று விளங்கவில்லை. அவனுடைய நினைவு சிறிது சிறிதாகக் குறைந்தது. கடைசியில் சுத்தமாக நினைவு குன்றி அடியற்ற மரம்போல் கீழே விழுந்தான்.

அவன் விழுந்ததுதான் தாமதம். அந்த இடத்திலிருந்த தரையில் ஒரு பிளவு உண்டாயிற்று. அதில் அவனுடைய உடல் 'சர சர'வென்று கீழ் நோக்கிச் சென்று அதளபாதாளத்தை அடைந்து வெகு நேரத்துக்குப் பிறகு 'பொதீர்' என்று விழுந்தது.


பல நாட்களுக்குப் பிறகு வீராங்கன் கண்ணைத் திறந்தான். எதிரே இருளைத் தவிர வேறொன்றையும் காண முடிய

வில்லை. இதுவரையில் நடந்த நிகழ்ச்சி முழுவதும் கனவு போல் அவனுக்கு நினைவுவந்தது. தான் இருக்கும் இடம் எது என்று அவனுக்குப் புரியவில்லை. அந்த இடத்துக்கு எப்படி வந்தோம் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை.

அந்தப் பாதாளச் சிறை 'கதகத' வென்று இருந்தது. வீராங்கனுக்கு நெருப்பின் மேல் அமர்ந்திருப்பதுபோல் தோன்றியது. உண்மையிலேயே இன்னும் கொஞ்சம் கீழே நெருப்புக் குழம்பு இருக்கத்தான் செய்தது. கிட்டத்தட்ட பூமியின் நடுப்பாகத்துக்குச் சிறிது மேலே, ஆழ்கடலின் அடியிலே அதளபாதாளத்தில் அவன் இருந்தான். இதி லிருந்து தப்புவதென்பது எமலோகம் போனவன் மீண்டும் பூவுலகம் மீளுவதுபோல்தான்.

வீராங்கன் அங்கிருந்து எப்படித் தப்புவது என்பதைக் குறித்து மண்டையை உடைத் துக் கொண்டான். வீராங்கனுக்கு எந்த வழியும் புலப்படவில்லை. தலையைத்தூக்கி நிமிர்ந்து பார்த்தான். எட்டிய தூரம் வரைக்கும் ஒரே இருளாகவே இருந்தது. நான்கு பக்கங்களிலும் செங்குத்தான சுவர் இருந்தது. அந்தச் சுவர் முழுதும் பாறை யால் செய்யப்பட்டிருந்தது. இந்தச் சுவரில் ஏறி எப்படியாவது பாதாளச் சிறையி லிருந்து தப்பிக்க முடிவு செய்தான். உடனே அதைக் காரியத்திலும் காட்டத் துவங்கினான். இவ்வளவுக்கும் அவன் இடையில் கட்டியிருந்த பவளக் கொடியைப் பற்றி அறவே நினைவுக்கு வரவில்லை.

பாதாளச் சிறையின் அகலம் குறுகலாக இருந்ததால் எதிர் எதிராகக் காலை உதைத்துக் கொண்டு மேல் நோக்கி ஏற ஆரம்பித்தான். அப்படி ஏறுவது அவ்வளவு சுலபமாக இல்லை. மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியது.



முழங்காலும் முழங்கையும் பாறைச் சுவரில் உராய்ந்து இரத்தப் பெருக்கு கண்டது.

மூக்கி முனகி முக்கால்வாசி தூரம் ஏறி விட்டான். இன்னும் கால்வாசித் தூரம் ஏறுவதற்குள் உள்ள சக்தி அடியோடு அழிந்து பிராணனே போய்விடும் போல் இருந்தது. எனவே, அந்த இடத்திலேயே நன்றாக உதைத்து நின்றுகொண்டு தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள விரும்பி னான். அப்பொழுது—

எதிரே தெரிந்த பாறைச் சுவரில் ஏதோ வெண்மையான கோடு போல் தெரிந்தது. முதலில் என்னவோ ஏதோ என்று அலட் சியமாய் இருந்தவன் பிறகு கவனிக்க ஆரம் பித்தான். கண்ணைத் துடைத்துக் கொண்டு அந்தக் கோட்டின் அருகில் முகத்தை வைத்துக் கொண்டு பார்த்தான். இப் பொழுது அது வெறும் கோடு அல்ல என் பது தெரிய வந்தது. ஆம்! அது ஒரு பிளவு. அங்கே இருந்த மர்மக் கதவு சரியாகப் பொருந்தாததால் அந்த இடைவெளி ஏற் பட்டிருந்தது. அந்தப் பிளவு வழியாகப் பார்த்த பொழுது ஜகஜ்ஜோதி யான பிரகாசம் கண்ணைக் கூசச் செய்தது.

அந்த ஜோதிமயமான வெளிச்சம் எங் கிருந்து வருகிறது என்பது அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அங்கே ஏதோ ஒரு மர்மம் இருக்க வேண்டும் என்று மட்டும் எண்ணினான்.

உடனே தன் இடையில் இருந்த ஈட்டியை எடுத்தான். பாறையில் தெரிந்த பிளவில் கொடுத்துப் பெயர்க்கத் துவங்கினான். கால் நாழிகை நேரம் கஷ்டப்பட்ட பின் அவன் முயற்சி வெற்றி அளித்தது. சுவரில் இருந்த கதவு போன்ற பகுதி நகர்ந்து மறைந்தது.

இப்பொழுது ஒரு நீண்ட வழி தென் பட்டது. அதன் வழியாகத் தூரத்திலிருந்து சூரிய வெளிச்சத்தையும் தோற்கடிக்கும்

படியான ஒளி வந்து கொண்டிருந்தது. வீராங்கன் அந்த வழியில் புகுந்து வெளிச்சம் வந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் அந்த வெளிச்சத்தை நெருங்க நெருங்க 'ஹோ......' என்ற பெரும் இரைச்சல் தொடர்ந்து கேட்டது.

பாறை முடியும் சமயத்தில் வீராங்கன் சட்டென்று பின் தங்கி நின்றான். எதிரே ஒரே ஒளி வெள்ளம் கண்ணைப் பறிப்பதாக இருந்தது. அந்த ஒளி எதிரே இருந்த ஒரு மாடத்திலிருந்துதான் எழுந்து கொண்டிருந்தது.

அந்த மாடத்துக்குள் ஒரு பெரிய அகல மான பொன்னிறச் சிப்பி ஒன்று இருந்தது. அதற்குள் ஏதோ ஒரு பொருள் வைக்கப் பட்டிருந்தது. அந்தப் பொருளிலிருந்து தான் அப்படிப்பட்ட ஒளி எழுந்து வெகு தூரத்துக்கு வெகு தூரம் வீசிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட பொருள் என்ன வாக இருக்கும்? ஒருவேளை குமரி முத்தாக இருக்குமோ?

இவ்வாறு எண்ணியபடியே கீழே குனிந்து தரையை நோக்கிய வீராங்கன் ஸ்தம்பித்துப் போய் விட்டான். அந்தப் பெரிய மண்டபம் முழுவதும் ஒன்று பத்து நூறு ஆயிரம் கோடி என்று எண்ண முடியாதபடி உயிருள்ள முத்துச் சிப்பிகள் வாய் திறந்த நிலையில் காணப்பட்டன. அவைகளிடமிருந்து தான் அந்த 'ஹோ' என்ற பெரும் இரைச்சல் எழுந்து கொண்டிருந்தது.


இப்படி வீராங்கன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே பல மான குரலில் யாரோ பேசுவது கேட்டது.

"தோழர்களே! இன்று உங்களை இங்கு குழுமச் செய்ததற்கு மிகமிக முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நமக்கு எவ்விதத் துன்பமு மின்றிக் காத்து வரும் நமது குல தெய்வ மான குமரி முத்துக்குப் பேரபாயம் வந்து விட்டது. இதற்கு முன்பு இதைக் கைப் பற்ற வந்த மனிதர்கள் அத்தனை பேரும் நம் குமரி மலையில் உண்டாகும் தீயில் அகப்பட்டு மடிந்து போனார்கள். ஆனால் இப்பொழுது ஒரு சிறுவன் எத்தனையோ ஆபத்துக்களைக் கடந்து நமது குகைக் குள்ளும் புகுந்து இரண்டு சுரங்க வாசல்களை யும் தாண்டி மூன்றாவது சுரங்கத்துக்கும் வந்து விட்டான். உடனே அவனைத் தந்திர ஓசையினாலும் மயக்கும் வாசனையினாலும் மூர்ச்சை அடையச் செய்து அதளபாதாளச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறேன். அவன் மிகவும் வல்லமை பொருந்தியவனாக இருக்கிறான். எப்படியும் அதள பாதாளத்தி லிருந்து தப்பி நம் குல தெய்வத்தை அபகரிக்க முயற்சி செய்வான். அதற்குள் நாம் ரகசிய வழியாகச் சென்று அவனைக் கொன்று விடவேண்டும்."

இதைக் கேட்ட வீராங்கனின் உடல் சிலிர்த்தது. ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது. வாளையும் ஈட்டியையும் கையில் பிடித்துக் கொண்டு கண் மூடிக் கண் திறக்கும் நேரத்தில் அந்தச் சிப்பிக் கூட்டத்தில் பாய்ந்தான். வாளையும் ஈட்டி யையும் கரகர வென்று சக்கரம் சுற்றுவது போல் சுழற்றினான். அதில் சிக்கிய சிப்பிகள் நொறுங்கி உயிரை இழந்தன.

இதற்குள் "அபாயம்..........அபாயம்! எல்லோரும் ஓடி வாருங்கள்" என்று முன்பு பேசிய சிப்பி கத்தியது.

அது கத்தி முடிவதற்குள்ளாக எங்கெங் கிருந்தோ சிறிய பெரிய முத்துச் சிப்பிகள் வாயைப் பிளந்தபடியே ஓடி வந்தன. மேலே இருந்து வேறு மழை பொழிவது போல் சரமாரியாகக் கொட்ட ஆரம்பித்தது. சற்று நேரத்தில் அந்த மண்டபமே முத்துச் சிப்பியால் நிறைந்து விட்டது. வீராங்கன் அந்த முத்துச் சிப்பிகளால் மூடப்பட்டுப் புதைந்து போனான். (தொடரும்)



வாழ்த்துகிறோம்

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று பாடினார் பாரதியார். திரு ஏ. அழகப்பன் மேற்கு ஜெர்மனியி லுள்ள ஸ்டட்கார்ட்டுக்கு ஜூன் 13ந் தேதி பயண மானார். உலகப்பிரசித்திபெற்ற மெர்ஸிடிஸ்-பென்ஸ் மோட்டார் உற்பத்தியாளர் ஸ்தாபனத்தில் மூன்று வருஷங்கள் அவர் தொழில் நுணுக்கப் பயிற்சி பெறப் போகிறார். அவர் ஆனைமலை பஸ் டிரான்ஸ் போர்ட் கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் திரு என். மகாலிங்கம் அவர்களின் மைத்துனர். இவனர் அழகப்பன் இன்ஜினியரிங் கலையில் அபாரத் தேர்ச்சி பெற்று வெற்றியுடன் திரும்பிவர வாழ்த்துகிறோம்.

ப்ரீஸ் சோப்புக்கு ஒரு 'புதுமைத் தோற்றம்'!



புதிய மேலுறை

ரோஜா நிறமுள்ளது, லேஸ் போன்ற
சித்திர வேலைப்பாடு அமைந்தது



புதிய வடிவம்

மழமழப்பு மிகுந்தது . . .
கண்கவரும் அழகுள்ளது

அதிக நறுமணம்

உங்கள் மேனிமீது அதிக
நேரம் கமழ்ந்திருக்கும்

சரும ஆரோக்கியத்திற்கான ஆக்டமர் கலந்த சோப் —**ப்ரீஸ்**

BZ. 10-50 TM

ஏன் நம்பிக்கையை விடுகிறீர்கள்!



அது இயற்கை, நரை மயிர் உங்களுடைய தோற்றத்தைக்கெடுக்கிறது. ஆனால் நீங்கள் நம்பிக்கையை விட வேண்டாம். ஆயிரக்கணக்கான ஜனங்களைப் போல் நீங்களும் லோமா உபயோகித்து அமைதியுடனும் தகுதிவாய்ந்த தோற்றத்துடனும் இருங்கள்.

லோமா

கருமையையும்
வனப்பையும் தருபவை



சோல் ஏஜெண்டுகள் :
எம். எம். கம்பாட்வாலா, அஹமதாபாத் 1
ஏஜெண்டுகள் :
வி. நரோத்தம் அண்டு கோ பம்பாய் 2 Tel : 30575

MP3-TAM.

சென்னை ஏஜண்டுகள் : ஜே பரபைரம் & கம்பெனி, 260, எஸ்பிளனேட், மதராஸ்-1 ● இலங்கை ஏஜண்டுகள் : சேதுக் கதிர் & கோ., 41 & 43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11



கல்லும் கன்னியும்

அரபிக் கதை

மஹ்மூத் தைமூர்

தமிழாக்கம் : ரா. வீ.

பேஷ்ஹார் என்னும் இடத்து ரத்ன வியாபாரியான பிர்தௌஸ் ஜமால் மரணம் நெருங்கியபொழுது, தனது தீனின் கலாசாரத்துக்கும் பழக்க வழக்கத்துக்கும் ஏற்றபடி, தன் பிள்ளைகளைத் தன்னிடம் அழைத்துக் கூறினான் :

''இந்தப் புவியில் இன்றுதான் எனது கடைசி நாள். எனக்கு ஆண்டவனின் அழைப்பு வந்து விட்டது. இன்றே நான் போய் ஆக வேண்டும். அதனால் நீங்கள் முக்கியமான பழக்க வழக்கத்தில் உள்ள சடங்குகளைச் சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள். மௌல்வி களை அழைத்து வரச் செய்யுங்கள். துக்கம் கொண்டாடுபவர்களையும் அழைத்து வரச் சொல்லுங்கள். சம்பிரதாயப்படி நல்ல நல்ல தின்பண்டங்களும் தயார் செய்யச் சொல்லுங்கள். இந்த ஏற்பாடுகளை யெல்லாம் முடித்த பிறகு மாலையில் என்னிடம் வாருங்கள். என்னிடமுள்ள உடைமைகளை உங்களுக்குப் பங்கிட்டுத் தந்து விடுகிறேன்.''

மாலையில் எல்லா வேலைகளும் முடிந்ததும் மூன்று பிள்ளைகளும் மீண்டும் தங்கள் தந்தையினிடம் வந்தார்கள். தந்தை முதலில் தன் முதல் தனயனைக் கூப்பிட்டுச் சொன்னான் :

''குழந்தாய்! நீ என் மகன்களில் எல்லோருக்கும் மூத்தவன். அதனால், உன் யோக்கியதையையும் தகுதியையும் உத்தேசித்து உன்னிடம் எனது கப்பல் பகுதியை ஒப்படைக்கிறேன். அதன்மூலம் திரைகடலோடி வைர-ரத்ன வியாபாரம் செய்து திரவியம் தேடு. என்னைப் போலவே பணக்காரனாக ஆக முயற்சி செய். ஆனால் அதோடு ஒரு பொறுப்பையும் உன்மீது சுமத்திச் செல்கிறேன். உனது சிறிய சகோதரன் காஸிமை என்னைப் போலவே நேசி. அவன் இன்னும் அறியாப் பாலகன் ; கல்வி வாசனை பெருதவன். தமையனாக இருந்தாலும் தந்தையாக இருந்து காப்பாற்று !''

நீர் நிறைந்த கண்களுடன் மூத்த மகன், ''அன்பு மிக்க தந்தையே ! தங்கள் ஆணையைச் சிரமேற் கொள்ளுகிறேன் !'' என்றான்.

''ஆண்டவன் உனக்கு அருள் புரிவாராக!'' என்று ஆசிர்வதித்து ஜமால் தனது இரண்டாவது மகனை அழைத்தான். அவனுக்குத் தன்னுடைய நிலம், நீச்சு, பேரிச்சை மரங்கள், வரிக் குதிரைகளின் லாயம் முதலியவற்றைத் தந்து கூறினான் :

''இவற்றை நூறு மடங்காகப் பெருக்கு. என்னைப் போலவே மட்டற்ற மதிப்பும் மரியாதையும் பெற்று வாழ். இதைத் தவிர உனக்கு ஒரு கடமை வேறு இருக்கிறது. உன் இளைய சகோதரன் காஸிமை என்னைப் போலவே அன்புடன் நடத்து. அவனை நன்ருகப் படிக்க வை. தேவை ஏற்படும் பொழுது அவனுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும் இருந்து உதவி செய்து வா !''

தந்தையின் தழுதழுத்த குரலினால் அவன் கண்களிலும் நீர் நிறைந்தது. "அப்பா! தங்கள் உத்தரவுக்கு அடிபணிகிறேன்!" என்று பணிவுடன் கூறினான்.

அப்புறம் பிர்தௌஸ் ஜமால் தனது கடைசி மகன் காஸிமைத் தன் அருகில் அழைத்தான். அறியாப் பாலகனைக் கண்டு அவன் அழுதே விட்டான். அவன் கைகளைத் தன் கரங்களில் ஏந்தியவாறு, "உன் வயதைப் பார்த்து எனக்கு வருத்தமாயிருக்கிறது. இந்த உலகம் பெரிய மோசக்கார உலகம். நான் உன் மூத்த அண்ணனுக்குக் கப்பல் வியாபாரத்தையும், இரண்டாவது அண்ணனுக்கு நிலம், நீச்சோடு குதிரை லாயத்தையும் கொடுத்திருக்கிறேன். அவர்கள் இருவரும் என்னைப் போலவே, உன்னை அன்பாக நடத்துவார்கள். நீ அண்ணன்மார்களிடம் மரியாதையாக நடந்து கொள். அவர்கள் சொற்படி கேள்!" என்றான்.

விம்மல் அதிகரிக்கவே அவன் சற்று நிறுத்தினான். பிறகு ஏதோ யோசித்து விட்டுச் சொல்லலானான்: "கொஞ்சம் என் தலை மாட்டில் உள்ள அந்தப் பையை எடுத்து வா. அதைத் திற. அதில் ஏழு வைரங்கள் வைத்திருக்கிறேன்" என்றான்.

காஸிம் பையை எடுத்துக் கொண்டான். தந்தையின் ஆழ்ந்த அன்பு ஸ்பரிசம் அவனைத் துவளச் செய்து விட்டது. பிர்தௌஸின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு அவன் விம்மி விம்மி அழத் தொடங்கி விட்டான்.



பிர்தௌஸ் அவனை அன்புறத் தழுவிக்கொண்டான். "இதோடு இன்னொரு விஷயமும் உனக்குச் சொல்ல விரும்புகிறேன். நீ கவனமாகக் கேள். கடலுக்கு அக்கரையில் ஒரு தீவு இருக்கிறது. அதில் மர்ஜபா என்னும் பெயருள்ள ஒரு நகரம் இருக்கிறது. அங்கே என் வியாபாரப் பங்காளி முர்துஜா நவாஜி என்பவன் இருக்கிறான். அவசியம் ஏற்பட்டால், நீ உடனே சென்று அவனைப் பார்!" என்றான்.

அருவியாகப் பாயும் தந்தையின் அன்பு, காஸிமை மெழுகென உருக்கிவிட்டது. அப்பாவின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அவன் விம்மி விம்மி அழலானான். தந்தையின் மனமும் பொங்கி வந்தது. காஸிமை மார்புறத் தழுவிக் கொண்டு, அவன் முதுகைத் தடவியவாறே கூறினான்: "பொறுத்துக் கொள், குழந்தாய், பொறுத்துக் கொள்! உலகத்தில் இருப்பவன் யாராயிருந்தாலும், என்றைக்காவது ஒருநாள் அவன் இந்த உலகத்தை விட்டுப் போக வேண்டியதுதான்! இனி எனக்கு இவ்வுலகில் தங்க நேரம் இல்லை. உன் சகோதரர்களுக்குக் கீழ்ப்படிந்து நட. உலகப் போக்கைப் புரிந்து கொள். கடவுள் மீது நம்பிக்கை வை. வருகிறேன், குழந்தாய்! விடை கொள்கிறேன்!"

பிள்ளைகள் குடும்ப வழக்கப்படி தந்தையைப் புதைத்தார்கள். துக்கம் கொண்டாடினார்கள். நாளடைவில் துக்கத்தை மறந்து தங்கள் வேலையில் ஈடுபட்டுச் சிரத்தை காட்டவும் தொடங்கி விட்டார்கள்.

நீண்ட காலம் சென்றபின் காஸிம் தன் மூத்த அண்ணனிடம் சென்றான். மிகுந்த பணிவுடன், "அண்ணா! நான் என்ன பிழை செய்து விட்டேன்? என்னை இப்படி ஒதுக்கி விட்டீர்களே! எனக்கு ஏதாவது வேலை தாருங்கள். வழிகாட்டி முன்னேற்றத்துக்கான உபாயத்தைச் சொல்லுங்கள். நாய் போல் வீடு வீடாகச் சுற்றியலைந்து கொண்டிருக்கிறேன். அது தங்களுக்கே நன்றாயிருக்குமா? உங்கள் அடி நிழலில் இடம் தந்து என்னைக் காப்பாற்றுங்கள்!" என்றான்.

ஆனால் மூத்த அண்ணன் தந்தையின் கடைசி உபதேசத்தை முற்றிலும் மறந்து விட்டான். "எனக்கு இப்பொழுது மூச்சுவிடக் கூட நேரம் இல்லை. நாலு காக கொஞ்சம் சிரமப்பட்டுச் சம்பாதித்துக் கொள்கிறேன். அப்புறம் உனக்கு ஒத்தாசை செய்கிறேன்!" என்று அழகாகத் தட்டிக் கழித்துவிட்டான்.

இரண்டாவது அண்ணனிடமிருந்தும் ஏறக்குறைய இதேமாதிரியான பதில் கிடைக்கவே, காஸிமுக்குத் தன் காலடியில் இருந்த பூமியே நழுவியோடுவது போலத் தோன்றியது. ஒருவாறு தன் நிலைபெற்றுத் தேறியபின், அவன் வீட்டை விட்டே வெளியேறினான். ஓர் இடமின்றி இங்கும் அங்கும் சுற்றியலைந்தான்.

ஒருநாள் அவன் கடற்கரையில் அலைந்து கொண்டிருந்த பொழுது, ஒரு படகோட்டி அவனைக் கூப்பிட்டு, "தம்பி! சூரியன் மறைந்து கொண்டிருக்கிறான். காற்றின் போக்கும் சரியாக இல்லை. எனக்குக் கொஞ்சம் உதவி செய். படகைக் கரையேற்றிவிடுவோம்!" என்றான்.

பேச்சுவாக்கில் அவனுக்கு உதவி செய்யும் பொழுது, "ஏன், அப்பா! உன் படகு எது வரை போகப் போகிறது?" என்று கேட்டு வைத்தான் காஸிம்.

"சரான் விரிகுடாவைத் தாண்டி மர்ஜபா நகருக்குப் போய்க் கொண்டிருக்கிறேன். நீயும் அங்கு போக வேண்டுமா, என்ன?" என்று கேட்டான் படகோட்டி.

மர்ஜபா நகரத்தின் பெயரைக் கேட்டதுமே, காஸிமுக்குத் தந்தையின் உபதேச மொழிகள் நினைவுக்கு வந்தன. அவனும் படகில் ஏறி உட்கார்ந்து விட்டான்.

மர்ஜபா நகரத்தை அடைந்தவன், முர்துஜா நவாஜியின் வீட்டைத் தேடிச் சென்றான். முர்துஜா, தன் பங்காளி காலமாகி விட்ட செய்தி கேட்டு அழுதுவிட்டான். அழுது துயரம் தீர்த்துக் கொண்டபின் அவன் தன் பணியாட்களைக் கூப்பிட்டுக் காஸிமின் உணவு உறக்கம் முதலியவற்றுக்கான ஏற்பாட்டைச் செய்ய உத்தரவிட்டான்.

காலைத் தொழுகையை முடித்துக் கொண்டு முர்துஜா, காஸிமின் அருகில் சென்றான். அவன் கையில் ஒரு வைரம் இருந்தது. வைரத்தை அவன் எதிரில் வைத்து முர்துஜா சொல்லலானான்: "குழந்தாய்! உன் தந்தை உனக்காக இந்த வைரத்தை என்னிடம் கொடுத்து வைத்திருந்தார். அவரது இந்த

அடைக்கலப் பொருளை இன்று நான் உன்னிடம் ஒப்படைக்கிறேன். இந்த வைரத்துக்கு ஈடான வைரம் இன்று இந்த ஈரான் நாட்டிலேயே இல்லை.''

இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தவன் சற்று நிறுத்திவிட்டு மீண்டும் கூறலானான்: ''ஆனால் குழந்தாய்! இந்தப் பேராபத்தான பொருளுடன், உன்னைத் தனியாக எப்படி அனுப்புவது? நீ இங்கேயே என்னிடமே தங்கிவிடேன். என்னோடு தங்கி உனக்கு உலக அநுபவம் நன்கு ஏற்பட்டபின், நீ இங்கிருந்து எங்கு வேண்டுமானாலும் ஆனந்தமாகப் போகலாம்!'' என்றான்.

ஆனால் காஸிம் அதற்குச் சம்மதிக்கவில்லை. அவன் படகோட்டிகள் மூலமும் வியாபாரிகள் மூலமும், இந்தியாவின் ராஜாக்கள் மகாராஜாக்களைப் பற்றியும் வியாபாரிகளைப் பற்றியும் கேள்விப்பட்டிருந்தான். வைரத்தைப் பார்த்தவனின் கண்ணெதிரே பாரதத்தின் பேர் ஐசுவரியம் நர்த்தனமாடத் தொடங்கிவிட்டது. அவன் முர்துஜாவிடம் தன் எண்ணத்தைச் சொன்னான். முர்துஜாவுக்கு இது இளம் பாலகனின் அறியாத்தனமாகவே பட்டது. ஆனால் காஸிமின் பிடிவாதமோ வர வர இறுகிக் கொண்டே வந்தது. சிக்கு முடிச்சாக. முர்துஜா சிக்கறுக்க முயற்சி செய்யச் செய்ய, அது சிக்கறுக்க முடியாத முடிச்சாகி விட்டது. கடைசியில் கடவுளின் கருணைமீது பாரத்தைப் போட்டு முர்துஜா அவன் இந்தியாவுக்குப் போக அநுமதி அளித்து விட்டான்.

பாரசீக வளைகுடாவைக் கடந்து, அரபிக் கடலையும் தாண்டிய பிறகு ஒரு வாரம் கழித்து அவன் கப்பல் பம்பாய்த் துறைமுகத்தை அடைந்தது. நகரத்தை அடைந்தவன் ஒரு சத்திரத்தில் தங்கினான். உணவை முடித்துக் கொண்டு ஊர் சுற்றலானான். மூன்று நாட்கள் நகர் வலம் வந்த பின்னரே அவனுக்கு வைரத்தை விற்க வேண்டும் என்ற நினைவு வந்தது. எத்தனையோ கடைகள் ஏறி இறங்கிய பிறகு அவன் ரத்ன வியாபாரி அப்பாஸியின் கடையை அடைந்தான். முதன் முதலாக அவனிடமே தன் வைரத்தைக் காட்டவும் செய்தான். வைரத்தைப் பார்த்த அப்பாஸி மூச்சு விடவே மறந்து விட்டான். தன் வாழ்நாளில் அவன் இதுபோன்ற வைரத்தைப் பார்த்ததே இல்லை.

வைரத்தை நன்றாகப் பரிசோதனை செய்து முடித்த பின்னர் அப்பாஸி கூறினான்: ''உண்மையில் இந்த வைரம் ஈடு இணையற்றது. இதை விலை கொடுத்து வாங்க எனக்குச் சக்தி இல்லை. ஆனால் நான் இங்கேயுள்ள ஒரு நவாபை அறிவேன். அவரை உனக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன். ஆமாம், நீ அந்தச் சத்திரத்திலே போய்த் தங்கியிருப்பானேன்? உன் பொருள்களை எடுத்துக்கொண்டு என் வீட்டுக்கே வந்து விடேன்!'' என்று வற்புறுத்தி அழைத்தான்.

ஒருநாள் இரவு உணவு முடிந்த பின்னர், அப்பாஸியின் அண்ணன் மகள் நர்கிஸ் வெற்றிலைத் தட்டு எடுத்துக் கொண்டு வந்தாள். நர்கிஸின் சௌந்தரியத்தைப் பருகிய காஸிம் அப்புறம் தன் நிலை மறந்துவிட்டான்.

மறுநாள் அவன் ஆண்டவனது தொழுகையை முடித்துக் கொண்டு அப்பாஸியைப் போய்ச் சந்தித்தான். ''ரத்ன வியாபாரி அவர்களே! உன் வைரத்தை விலை கொடுத்து வாங்க எனக்குச் சக்தி இல்லை என்று நீங்கள் என்னிடம் பொய் தானே சொன்னீர்கள்? ஆனால் நேற்று இரவு என் வைரத்தைக் காட்டிலும் விலையுயர்ந்த வைரம் உங்களிடம் இருப்பதைக் கண்டேன். அந்த வைரம் எது, தெரியுமா? உங்கள் அண்ணன் மகள் நர்கிஸ் தான்!'' என்றான்.

அப்பாஸி வியப்பினால் கலங்கிப் போய், ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள், புரியவில்லையே!'' என்றான்.

''உங்கள் அண்ணன் மகள் நர்கிஸ் என் வைரத்துக்குத் தகுந்த கிரயம் ஆவாள். அவளை எனக்கு மணம் முடித்து வைத்து விட்டால் இந்த வைரம் உங்களுக்குச் சொந்தமாகி விடும்!'' என்றான் காஸிம்.

திருமண ஏற்பாடு பிரமாதமாக நடந்தது. அலங்காரப் பந்தல்களும் அணி விளக்குகளும் அப்பாஸியின் வீட்டை அலங்கரித்தன. ஏழு நாட்கள் தொடர்ந்து இனிமையான விருந்து நடந்தது. அரசாங்க ஆடம்பரத்துக்கொப்பாக, காஸிமின் திருமணம் நர்கிஸோடு நடந்து முடிந்தது.

ரத்ன வியாபாரி அப்பாஸி வைரத்தை அடைந்து பூரித்து விட்டான். காஸிமினுடைய முட்டாள்தனத்தை எண்ணி உண்மையில் அவனுக்கே இரக்கம் பிறந்தது.

ஒருநாள், கணவன் தன் பேச்சுக்கு அநுகூலமாக இருப்பதைக் கண்ட நர்கிஸ், காஸிமிடம் சொன்னாள்: ''நான் உங்களை மோசம் செய்து விட்டேன். தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள். என் சித்தப்பா உங்களை ஏமாற்றி விட்டார். எல்லாம் அவருடைய சூழ்ச்சி. வைரத்தின் ஆசையில்தான் அவர் இந்தச் சூழ்ச்சியைச் செய்தார்!''

அறியாத காஸிம் இதைக் கேட்டானோ இல்லையோ, அகல விரிந்த அவன் கண்கள் அகல விரிந்தபடியே இருந்து விட்டன. ஆத்திரத்தில் அவன் வாயில் வந்தபடியெல்லாம் திட்டினான்; ஏசினான். கடைசியில், வழக்கத்தை அநுசரித்து அவன் விருந்தாளிகளிடம் உபதேசமும் நல்லாசியும் பெற்றுக் கொண்டு ஆப்பிரிக்காவுக்குப் பயணமானான்.

நர்கிஸின் மீதும் அவன் கொஞ்சமாக ஆத்திரப்படவில்லை. அவளைத் தன் எதிரிலிருந்து விலகச் சொல்லி, ''என்முன் நில்லாதே, போ! மோசக்காரி என்றால் நீதான். பெண்ணா நீ? பேய்! வஞ்சகி, கிராதகி!'' என்றெல்லாம் தூற்றினான். பிறகு தன் நிலையை நினைத்துத் தன்னையும் மீறி அழலானான்.

ஆனால் நர்கிஸ் அவ்வளவு இடிக்கும் வசவுக்கும் தன் நிலை கலங்கவில்லை. அவள் காஸிமின் கால்களைப் பிடித்துக் கொண்டாள். பொறுமையும் உள்ளத்துடன், தழுதழுத்த குரலில் சொல்லலானாள்: ''என் கதை இப்பொழுதுதான் ஆரம்பமாகிறது. முதலில் அதைக் கேளுங்கள். அப்புறம் தண்டனை அளியுங்கள். என் சித்தப்பாவை நான் நன்கு அறிவேன். ஆசைக்கு அடிபணிந்து அவர் எதுவும் செய்யத் துணிந்து விடுவார். நான்

திருமணத்துக்குச் சம்மதிக்கா விட்டால், அவர் தங்களைக் கொலை செய்தாவது வைரத்தைக் கைப்பற்றத் தயங்கியிருக்க மாட்டார். தாங்களோ என்னிடம் கட்டுக்கடங்காத அன்புகொண்டு என்பொருட்டு எல்லாவற்றையும் தியாகம் செய்யத் தயாரா யிருந்தீர்கள். தாங்கள் இப்படி அன்பு செலுத்தும்பொழுது... நான் வேறு என்ன செய்திருக்க முடியும்?...''

கண்ணீர் மல்கும் கண்களுடன் அவள் தன் ஆடைத் தலைப்பை அவிழ்த்து, அதே வைரத்தை எடுத்துக் காஸிமின் எதிரே வைத்தவாறு சொன்னாள் : ''இந்தாருங்கள். உங்கள் வைரத்தை நான் கொண்டுவந்து விட்டேன். தாங்கள் இதைத் திருட்டு என்று எண்ணுதீர்கள். இது உங்களுடையதுதானே? இன்னும் ஒன்று. தாங்கள் வைரத்தைக் கொடுத்து மனைவி என்பவளை விலைக்கு வாங்கி அடிமையாக்கி, பணிப்பெண் என்னும் ஸ்தானம் கொடுக்கத் தீர்மானித்திருந்தால்... நான் தங்களுடன் வரத் தயாராயில்லை.''

காஸிமுக்குத் தன்னைப் பெரிய மலையிலிருந்து உருட்டித் தள்ளியது போலிருந்தது. அதுவும் வீழ்ந்த இடத்தில் கூரிய முள் படுக்கை போட்டிருப்பது போலவும் தோன்றியது. அவன் ஒரு முறை வைரத்தைப் பார்த்தான். உடனே நர்கிஸைப் பார்த்தான். மாறி மாறி வைரத்தையும் நர்கிஸையும் பார்த்தான். திடீரென்று எழுந்தான். தன் பலம் கொண்ட மட்டும் கை வீசி அந்த வைரத்தைக் கடலினுள் விட்டெறிந்தான். வெகு தொலைவில் போய் விழுந்தது அது. நர்கிஸ் பிரமித்துப் பிரமை பிடித்தவள் போல் நின்றாள். அடுத்தகணம் உரத்த குரலில், ''என்ன காரியம் செய்து விட்டீர்கள்? இவ்வளவு பெரும் தண்டனையா?'' என்று கேட்டாள்.

கூரியகண்களால் அவளைக் கூர்ந்து நோக்கிய வாறே மௌனமொழியில் காஸிம் கூறினான்:

''கல்லுக்குக் கல்லின் மதிப்பேதான் கிட்ட வேண்டும். இல்லாவிடில் அது பெரும் ஆபத்தையும் விநாசத்தையும் உண்டு பண்ணும்.''

படித்துப் பாருங்கள்

புதுச்சேரியைப் பாருங்கள்!

சென்னையிலிருந்து ரயில்பாதை வழியாக 122 மைல் தூரத்தில் உள்ள புதுச்சேரியைப் பற்றி நிறையக் கேள்வியுற்றவர்கள் இருப்பார்கள். பார்த்தவர்கள் பலர் இருப்பார்கள். ஆனால் பார்க்காதவர்களும் இருப்பார்கள்.

அவ்வூரைப் பார்த்தவர்கள், பார்க்காதவர்கள் யாருக்குமே பயன்படும் வண்ணம் அமைந்திருக்கிறது இந் நூல். மகாகவி பாரதி தங்கியிருந்த காரணத்தினால் தனிச் சிறப்புப் பெற்ற புதுச்சேரியைப் பற்றிப் பல விஷயங்கள் நிறைந்துள்ளன இந் நூலில். தமிழகத்தின் அரசியல் வாழ்விலும், சமூக வாழ்விலும் புதுச்சேரி கொண்டிருக்கும் பங்கு யாவரும் அறியத் தக்கது.

தொகுத்தவர்: மன்னர் மன்னன்; பிரசுரம்: மணிமொழி நூல் நிலையம், மாதாகோவில் தெரு, புதுச்சேரி; விலை: 75 காசு.

ஆட்கொல்லிப் பெண் புலி

வேட்டையாடுதல் என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டும் அல்ல, வனத்தில் வாழும் கொடிய மிருகங்களிடமிருந்து மக்களைக் காக்கும் பெரும் பணியும் கூட.

ஸ்ரீ ஜிம்கார் பெட் என்பவர் தமது வேட்டை அநுபவங்கள் மூலம் இவ்வரலாற்று நூலில் இதை வெகு அழகாகச் சித்திரிக்கிறார்.

ஆட்கொல்லிப் புலி ஒன்றை வேட்டையாட எடுத்துக் கொண்ட பிரயாசைகள், கொடிய விலங்குகளின் குணாதிசயங்கள், பேராபத்தில் சிக்கி, அதிலிருந்து தப்பியதும் கிடைக்கும் பேரானந்தம் ஆகியவற்றை அழகாகச் சித்திரிக்கும் இந்நூலைத் திறம்படத் தமிழாக்கித் தந்துள்ளவர் ஸ்ரீ தி. ஜ. ர.

பிரசுரம் : ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ், சென்னை-2, விலை ரூ. 1-00

குலப்பெருமை

வாழ்க்கையில் வேரோடியிருக்கும் குறைகளை யெல்லாம் உள்ளத்தில் உறைக்கும்படியாக, எகத்தாளமாக எடுத்துரைப்பதில் வல்லவர் திரு கே. எம். முன்ஷி. குஜராத்தி மொழியிலே தலைசிறந்த இலக்கியகர்த்தா.


சமதி சங்கரின் வம்ச கௌரவத்தை வானளாவ உயர்த்தி, கடைசியில் அவரது பாட்டனார் கௌமதி தாத்தாவின் பூஜை அறை இரகசியம் வெளியாகும் போது, அவரது குலப்பெருமை அதள பாதாளத்தில் ஆழப் புதைபடுவதை அழகாகச் சித்திரித்திருக்கிறார்.

இரண்டாந்தாரம் கல்யாணத்தின் கொடுமைகளைப் பற்றி விவரித்து எத்தனையோ கதைகளைப் படித்திருக்கிறோம். ஆனால் அவை அவ்வளவு உள்ளத்தை உருக்கும்படியாக அமைந்திருக்காது. 'சாமல்ஷாவின் திருமணம்' என்னும் கதையைப் படித்தால், கிழவனுக்கும் குமரிக்கும் மணம் முடித்துப் பாழடிப்பதை நிச்சயம் விட்டுவிடுவார்கள் என்பதில் ஐயமில்லை. கிழவர் சாமல்ஷாவின் திருமண வைபவத்தை விவரிக்கும் விதம் நம்மை நகைப்பில் ஆழ்த்துகிறது. அம்மி மிதிக்கும் காட்சியைப் பாருங்கள்.


பச்சிளம் குழந்தை அம்மி மிதிக்கும் தருணத்தில் உறங்கி விடுகிறது. 'ஸேட்ஜி அந்தக் குழந்தையின் கரத்தைப் பற்றிய வாறே எழுந்தார். எத்தனையோ முயன்றும் கண் விழிக்கவில்லை. கடைசியில் சிறுமியின் தாயாரே எழுந்து குழந்தையைத் தோளில் சாத்திக் கொண்டு ஸேட்ஜியுடன் விவாக வேதியைப் பிரதக்ஷிணம் வந்தாள்......'

இந்தத் தொகுதியில் அமைந்துள்ள ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு விதத்தில் தனிச் சிறப்புடன் விளங்குகிறது. இந்தக் கதைகளைச் சுவைபடத் திறமையாகத் தமிழாக்கம் செய்திருக்கிறார் திரு ரா. வீழிநாதன். பிரசுரம். பாரதி பதிப்பகம், சென்னை - 17; விலை ரூ. 2

வாழ்க



கால்டெக்ஸ் ஏஜண்ட் திரு பி. ஆர். நாராயணசாமி அய்யரின் புதல்வி சௌ. சேஷாம்பாளுக்கும் திரு கிருஷ்ணமூர்த்திக்கும் பள்ளிபுரத்தில் திருமணம் நடந்தது.




சென்னை திரு எ. ஆர். கோவிந்தசாமி அய்யரின் மருமான் திரு ஆர். வைத்திய நாதனுக்கும் சௌ. ராஜலக்ஷ்மிக்கும் கோவையில் விவாகம் நடந்தேறியது.



விருதுநகர் இந்தியன் பாங்கியைச் சேர்ந்த திரு எஸ். ராகவய்யங்கார் புதல்வி சௌ. அலங்காரவல்லிக்கும் திரு ரங்க ராஜனுக்கும் திருமணம் நடைபெற்றது.



திரு எம். கணபதி அவர்களின் புதல்வி சௌ. லீலாவுக்கும், டாக்டர் ஜி. விஜய ராகவன் எம். பி. பி. எஸ்.ஸுக்கும் பம்பாயில் விமரிசையாக விவாகம் நடந்தது.



திருச்சி அட்வகேட் திரு கே. எஸ். நாராயணன் அவர்களுக்கும் சௌ. ராஜ லக்ஷ்மிக்கும் ஒப்பிலியப்பன் சந்நிதியில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.




திரு என். கிருஷ்ணய்யர் சகோதரர் புதல்வி ருக்மிணிக்கும் கல்கி காரியாலயத்தைச்சேர்ந்த திரு வி. வி. பரசுராமனுக்கும் கோழிக்கோட்டில் திருமணம் நடந்தது.


மணமக்கள்




எஸ்ட்ரெல்லா பாட்டரி கம்பெனியைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் அவர்கள் சௌ. பூச்சாம்பாளைச் சமீபத்தில் மணம் புரிந்து கொண்டார்.




திரு வி. ராதாகிருஷ்ணன் பி. எஸ்ஸி. சௌபாக்யவதி வஸந்தாவை மாயூரத்தில் சென்ற மே மாதம் இருபத்துமூன்றாம் தேதி மணம் செய்து கொண்டார்.




திரு வெங்கட்டராமன் அவர்களுக்கும் சௌபாக்யவதி மீனுவுக்கும் சமீபத்தில் பம்பாயில் வெகு விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.




ஜோலாருர் ரயில்வே ஜங்ஷன் உதவி ஸ்டேஷன் மாஸ்டர் திரு ஹரி நாராயணனுக்கும் சௌ. விமலாவுக்கும் தாராபுரத்தில் திருமணம் நடந்தேறியது.




பம்பாய் டாடா பவர் கம்பெனியைச் சேர்ந்த திரு எஸ். கிருஷ்ணசாமி அவர்கள் சௌ. கல்யாணியை மயிலாப்பூரில் மணம் புரிந்து கொண்டார்.



சென்னை ரேடியோ கம்பெனியைச் சேர்ந்த திரு கிருஷ்ணசாமிக்கும் சௌ. ஜமுனாவுக்கும் நத்தம் குடியாத்தத்தில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லெட் பவுடர்
ஜயண்ட்சைஸ் அழகிய டப்புடன் கிடைக்கும்!


OK
ஓ. கே. வனஸ்பதி
இனும் பரிசுத் திட்டம்
முக்கிய அறிவிப்பு
1958 ஜூலை 1-ந் தேதியிலிருந்து.
ஓ. கே. வனஸ்பதி வாங்குபவர்களுக்கு.
இனும் பரிசுக் கூப்பன்கள் வழங்குவது
நிறுத்தப்படும் என்கிற செய்தி,
இதன்மூலம் ஓ. கே. வனஸ்பதி
உபயோகிப்பவர்கள் அனைவருக்கும்
அறிவிக்கப்படுகிறது.
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை
இனும் பரிசுகளாகப் பெற உங்களுக்கு
ஒரு கடைசி வாய்ப்பு. உங்கள் தேவைக்
கான ஓ. கே. வனஸ்பதியை இப்பொ
ழுதே வாங்குங்கள்.
குறிப்பு: 30-9-58 வரை, எல்லா
ஓ. கே. டிப்போக்களிலும், கூப்பன்
களை ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பரிசு
களுக்காக மாற்றிக் கொள்ளலாம்.
தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா)
பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.
EP



பிரியம்வதை

விஜயஸ்ரீ

"பிரியம்வதை! பிரியம்வதை!" என்று அழைத்தவாறு வந்தாள் சிறுமி அனுசூயை.

மணலில் விளையாடிக் கொண்டிருந்த பிரியம்வதை நிமிர்ந்து பார்த்தாள். சுருண்ட குழற் கற்றைகள் அவளது கருவண்டுக் கண்களை மறைத்துக் கொண்டிருந்தன.

"இப்படி மணலில் அலைந்து கொண்டிருக்கிறாயே? உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம் கொண்டு வந்திருக்கிறேன். என்ன சொல், பார்க்கலாம்" என்று தோழியின் ஆவலைத் தூண்டினாள் அனுசூயை. சிறுமியே ஆனாலும் அவளுடைய பழக்கவழக்கங்கள் ஒரு கிழவியினுடையதைப் போலவே இருக்கும்.

"அப்பா வந்து விட்டாரோ?" என்ற சிறுமியின் குரலில் மகிழ்ச்சி தொனித்தது.

"ஆமாம், அது மட்டுமில்லை. நமக்கு அவர் ஒரு பரிசும் கொண்டு வந்திருக்கிறார்."

"புதுச்செடி கொண்டு வந்திருப்பார்."

"ஊஹூம். நீயே நேரில் வந்து பாரேன்."

பிரியம்வதை துள்ளியோடினாள்; தந்தையைக் காண. ஆனால் அவரை நெருங்குவது எளிதாக இல்லை. அந்தப் பகுதியிலுள்ள ரிஷிகணங்களுக்குத் தலைவரான அவரைச் சுற்றிலும் எப்பொழுதும் முனிவர்கள் சூழ்ந்த வண்ணமே இருப்பார்கள். ஆயினும் இன்று ஏன் ஆசிரமத்தில் அசாதாரணமான கூட்டம்? முண்டியடித்துக் கொண்டு உள்ளே வேகமாகச் சென்றாள் பிரியம்வதை.

அங்கே இருந்த பரிசுப் பொருள்களைக் கண்டதும், அவள் கண்கள் வியப்பால் விரிந்தன. கௌதமியின் மடியில் கொழுகொழுவென ஒரு அழகான குழந்தை கிடத்தப்பட்டிருந்தது. அருகில் நின்றிருந்த காச்யபர் குழந்தை கிடைத்த விவரத்தைப் பற்றி அங்கு இருந்தவர்களிடம் கூறிக் கொண்டிருந்தார்.

"அப்பா!" வளர்ப்புத் தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கினாள் பிரியம்வதை.

"என்ன கண்ணே?"

"இந்தக் குழந்தை ஏது?"

"உன்னைப் போலக் கிடைத்தது. உனக்குத் தங்கை இல்லை அல்லவா? அதற்காகக் கடவுள் உனக்குக் கொடுத்திருக்கிறார்" என்று விளக்கினாள் மூதாட்டி கௌதமி.

"இதற்குப் பேர் என்னம்மா?"

"சகுந்தலை என்று பெயர் வைத்திருக்கிறார் உன் தகப்பனார்."

"நிஜமாக நமக்கேதானா அப்பா இந்தக் குழந்தை?" என்ற சிறுமியின் குரலில் ஆவலும், பரபரப்பும் போட்டியிட்டன.

"ஆம், குழந்தாய்! நீதான் உன்னுடைய தங்கையைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்."

"சரி, அப்பா! இனிமேல் விளையாடவே போக மாட்டேன்" என்றவாறே குழந்தையின் பக்கத்தில் அமர்ந்தாள் பிரியம்வதை.

* * *

காலச் சக்கரம் உருண்டோடியது. பிரியம்வதை, அனுசூயை, சகுந்தலை மூன்று யுவதிகளும் ஒருவரையொருவர் கணநேரமும் பிரிவதில்லை. அதிலும் பிரியம்வதை சகுந்தலையின்மீது தாககூடப் படச் சகியாமல் கண்ணை

இமை காப்பது போலக் காத்து வந்தாள். தாவரங்களிடமும், பிராணிகளிடமும் சகுந்தலையின் வருகைக்கு முன் பிரியம்வதை காட்டிய அன்பைத் தற்சமயம் அவர்கள் மூவரும் சேர்ந்து செலுத்தினர்.

"என்ன பிரியா! உனக்கு சார்ங்கரவன் இல்லாமல் எப்படிப் பொழுது போகிறது?" என்று பரிகசித்தாள் சகுந்தலை.

"என்னவோ உனக்காகப் பொறுத்துக் கொண்டிருக்கிறாள். இல்லா விட்டால் அவர்களுடைய திருமணம் அப்பொழுதே நடைபெற்றிராதா?" என்று மேலும் கேலி செய்தாள் அனுசூயை.

"போதுமடி, உங்கள் பரிகாசம். நீ மட்டும் என்ன வாழ்ந்தாயாம்? சகுந்தலையின் ஜன்ம நட்சத்திரத்தில் தோஷம் இருக்கிறது என்பதற்காக அப்பா ஹோமம் செய்ய உதவிக்கு சார்ங்கரவன், சாரத்வதன் இருவரையும்தானே அழைத்துப் போயிருக்கிறார்? அவர்கள் திரும்பியவுடன் உனக்கும், சாரத்வதனுக்கும் கூட மணம் நடக்கப் போகிறது. இதில் என்னை மட்டும் என்ன கேலி?" என்று அனுசூயையைக் கடிந்து கொண்டாள் பிரியம்வதை, முகத்தில் பொய்க் கோபம் ஜ்வலிக்க.

"சரி, சரி! இருவரும் சண்டை பிடித்துக் கொள்ள வேண்டாம். நேரமாகி விட்டது. நாம் போய்ச் செடிகளுக்கு நீர் ஊற்றலாம், வாருங்கள்" என்று சகுந்தலை அழைக்கவே மூவரும் சென்றனர்.

• •

"**பி**ரியம்வதை! சகுந்தலையைப் பார்த்தாயா? அப்பொழுதே முதல் தேடுகிறேன். காணவில்லையே!" என்று மிகுந்த கவலையுடன் வினவினாள் கௌதமி.

"அப்பா நிஷ்டையில் அமரும் பர்ணசாலை இருக்கிறதல்லவா? அங்கு படுத்துக்கொண்டு கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாள். சாப்பிடக்கூட வர மறுக்கிறாள்" என்றாள் பிரியம்வதை துன்பம் தோய்ந்த குரலில்.

"அவளுடைய துயரத்துக்கெல்லாம் நீயும் அனுசூயையும்தான் காரணம்!"

"என்ன அம்மா! பெரிய இடியாக இருக்கிறதே! நாங்கள் காரணமா?"

"பின் என்னவாம்? நீங்கள் இருவரும்தான் சகுந்தலையின் காதலுக்கு உரமூட்டினீர்கள். அதை எனக்குத் தெரியாமலும் மறைத்து வைத்தீர்கள். உங்களுடைய தூண்டுதல் இல்லாவிட்டால் சகுந்தலை பெற்றோரைக் கேட்காமல் மணம் செய்துகொள்ளத் துணிவாளா? எத்தனையோ ராஜகுல ஸ்திரீகளும், பேரழகிகளும் அரசன் துஷ்யந்தனின் காதலில் விழக் காத்திருக்கும்போது அவன் இந்த முனிவர் பெண்ணைத்தான் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்கப் போகிறானா?



இந்தச் சமயத்தில் அவளுடைய மனத் துயர் அவள் உடல் நிலையைப் பாதிக்காதா? உங்கள் தந்தை வந்தால்தான் என்ன பதில் சொல்லப் போகிறேன் நான்?" என்று அடுக்கிக் கொண்டே சென்ற கௌதமி மேலே பேச முடியாமல் திணறினாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்களெனச் சிதறிக் கீழே விழுந்தது.

பிரியம்வதைக்கு அப்பொழுதுதான், தான் செய்த தவறு விளங்கியது. தன் உயிர்த் தோழிக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு பெரிய தீங்கல்லவோ இழைத்து விட்டாள்? அவள் நெஞ்சைத் துயரச் சுமை அழுத்தியது. உதட்டைக் கடித்துச் சற்று நேரம் யோசித்தாள்.

சட்டென்று ஓர் தீர்மானத்துக்கு வந்தவளாய், "அம்மா! அவளைச் சமாதானப் படுத்துவதற்கு வழி நான் செய்கிறேன்" என்று கூறி விடுவிடென்று சகுந்தலை படுத்திருந்த குடிலை நோக்கிச் சென்றாள்.

"சகுந்தலை, சகுந்தலை! எழுந்திரு. கண்ணைத் துடைத்துக் கொள். ஒரு முக்கியமான விஷயம்."

"வேண்டாம், ப்ரியா! என்னைத் தனியே இருக்கவிடு. எந்தச் செய்தியும் இனி சுவாரஸ்யமற்றதுதான்."

"சகுந்தலை! நான் சொல்ல வந்தது உன்னைப் பற்றிய விஷயம்தான். வித்யுத்லதா ஹஸ்தினாபுரத்தில் இருக்கும் தன் பிறந்த வீட்டுக்குச் சில நாட்கள் இருந்து விட்டு வரப் போகிறாள். ஒரு கடிதம் எழுது. அவள் மூலம் அரசனிடம் கொடுத்துப் பார்ப்போம்" என்றவாறே ஏட்டையும், எழுத்தாணியையும் எடுத்து வந்து தன் தோழியிடம் அளித்தாள்.

பேதை சகுந்தலை தன் மனம் படும் பாட்டை விவரித்து, உருக்கமாக மன்னனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதைப் பத்திரமாக வாங்கி வைத்துக் கொண்ட பிரியம்வதை, "சரி, வா! சாப்பிடப் போகலாம்" என்று அவளை அழைத்துச் சென்றாள்.

சகுந்தலை சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், உபவனத்தின் வழியே ஓடும் மாலினி நதியில் அந்த ஓலைச் சுவடியை எறிந்து விட்டுக் கண்களில் பொங்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள் பிரியம்வதை.

சில நாட்கள் கழித்துச் சகுந்தலை, "ப்ரியா! நான் அவருக்கு எழுதினேனே, அந்தக் கடிதத்துக்குப் பதிலே வரவில்லையே?" என்று ஏக்கம் நிறைந்த குரலில் கேட்டபொழுது பிரியம்வதை திடுக்கிட்டாள்.

உடனே சமாளித்துக் கொண்டு, "என்ன ஆச்சரியம்! நான் சொல்ல வந்ததை நீயே கேட்டு விட்டாயே! இன்றுதான் வித்யுத்லதா திரும்பி வந்தாள். அரசர் சாவகத்

திவுக்குச் சென்றிருக்கிறாராம். வரச் சில நாட்கள் செல்லுமாம். திரும்பியவுடன் நம் ஹயக்ரீவனையே போகச் சொல்லலாம்.''

ஹயக்ரீவன் மூலம் சிறிது காலம் 'கடிதப் போக்குவரவு' நடைபெற்றது. அரசனிடமிருந்து சகுந்தலைக்கு அவள் தந்தை திரும்பியவுடன், தான்வந்து அவளை அழைத்துச் செல்வதாகக் காதற் கனிவு சொட்டும் கடிதங்கள் வந்தன. சகுந்தலையின் விழிதங்களோ ஆற்றைச் சரணடைந்தன.

*　　　*　　　*

துயரே உருவாக மாலினி நதியின் கரையில் உட்கார்ந்திருந்தாள் பிரியம்வதை. நீரின் நடுவே 'தொப்'பென்று கல் விழுந்ததால் உண்டான சத்தத்தைக் கேட்டுத் திரும்பினாள்.

''எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை உருவாகிக் கொண்டிருக்கிறதோ?'' என்றவாறு கலகலவென நகைத்தாள் அனுசூயை. அவள் உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சி விழிகளின் வழியே தெறித்தது. பதில் பேசாது அவளை ஏறிட்டு நோக்கினாள் அவள் சிநேகிதி.

''என்ன ப்ரியா! ஏன் என்னமோ போல் இருக்கிறாய்?''

''ஒன்றுமில்லையே!''

''என்னிடம் மறைக்காதே, தோழி! உன் மனவருத்தம் என்ன? சொல். நம் தந்தை ஆசிரமத்துக்குத் திரும்பியவுடன் நம் விவாகங்களை நடத்த வேண்டி ஏற்பாடுகள் செய்தபோது ஏன் நீ மணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டாய்?''

''எனக்குத் தற்சமயம் திருமணத்துக்கு அவசரமில்லை.''

''என்ன! அவசரமில்லையா? என்னையும் சகுந்தலையையும் விடப் பெரியவள் நீ. எங்களுக்கே திருமணம் நடந்து விட்டதே! உனக்கு வயதாக வில்லையா? உனக்காக இல்லாவிட்டாலும் சார்ங்கரவன் எத்தனை நாட்கள்தான் காத்திருப்பார்?''

''நம் தோழி தன் கணவன் வீடு சென்று மகிழ்ச்சியுடன் இருக்கிறாள் என்று தெரிந்த பின்பே என் கல்யாணம்...''

''அவளுடைய நிலையைத்தான் பக்குவமாக நம் தந்தையிடம் கூறி அவள் மீது இன்னும் அதிகப் பரிவும், பாசமும் ஏற்படும்படி செய்து விட்டாயே? அவளும் சீக்கிரத்திலேயே ஹஸ்தினாபுரம் போய் விடுவாள். உன்னுடைய திருமணத்தைப் பார்க்காமல் போகிறோமே என்று அவளுக்குத்தான் எத்தனை மனக் குறை!''

''இல்லை, அனுசூயா! முதலில் அவள் புக்ககம் செல்லட்டும். என்னுடைய மனம் என்னவோ மிகவும் சங்கடப்படுகிறது.''

''ஓஹோ! துர்வாச மகரிஷியின் சாபத்தை நினைத்துக் கொண்டு பயப்படுகிறாயா? நீதான் உன்னுடைய சாதுர்யமான பேச்சாலும், உபசாரத்தாலும் அவரை மயக்கிச் சாபத்தை மாற்றி விட்டாயே? முதலில் அவர் சகுந்தலையை, 'நீ யாரை நினைத்துக் கொண்டு என்னை மதிக்கவில்லையோ, அவன் உன்னை



பரிசு கொடுப்பவர்: வெள்ளித்தட்டு ரொம்ப மெல்லிசா இருக்கு. கொஞ்சம் ஜாக்கிரதையா ஓதி இடச் சொன்னேன்...... நீர் ஒரேயடியா அதை ஊதி விட்டு மானத்தை வாங்குறீரே!

மறக்கக் கடவது' என்று சபித்தாலும் பிறகு, 'அடையாளத்தைக் காண்பித்தால் ஞாபகம் வந்துவிடும்' என்று மாற்றுக் கூறினாரே? அரசன் அளித்த மோதிரம் அவள் கையில் இருக்கும் வரை என்ன பயம்?''

''அனுசூயை! என் மன நிலையை அறிந்து கொள்ளாமலே பேசுகிறாயடி. நேற்றிரவு ஒரு கனவு கண்டேன். சகுந்தலை காட்டில் தனியே தவிக்கிறாள். அப்போது ஜனககுமாரி சீதைப் பிராட்டி அவளிடம் வந்து, 'வா, மகளே! உன்னுடைய நிலையும் என்னுடையதைப் போலவே ஆகிவிட்டதே! வருந்தாதே. என்னுடன் வந்து விடு' என்று அழைத்துச் செல்கிறாள். அது முதல் என் உள்ளம் அமைதியாகவே இல்லை.''

''பைத்தியம் போல் உளறாதே. சார்ங்கரவன் சகுந்தலையை ஹஸ்தினாபுரத்துக்குக் கொண்டு விட்டு வந்ததும் உங்களுடைய திருமணம் நடப்பதற்கு ஏற்பாடாகி இருக்கிறது. தைரியத்தைக் கைவிடாமல் சந்தோஷமாக இரு.''

அச்சமயம் அனுசூயையைத் தேடிக் கொண்டு அவள் கணவன் சாரத்வதன் வரவே, அவள் சென்று விட்டாள்.

*　　　*　　　*

பிரியம்வதை ஆற்றிலிருந்து நீர் மொண்டு வருகையில், சகுந்தலையைக் கொண்டுவிடச் சென்றிருந்த சார்ங்கரவன், சாரத்வதன், கௌதமி மூவரும் பர்ணசாலைக்குள் நுழைவதைக் கண்டு அங்கு விரைந்து சென்றாள்.

முனிவர் காசியபர் நிஷ்டையில் அமர்ந்திருந்தார். 'குருதேவா!' என்று அழைத்த சார்ங்கரவனின் குரலில் உணர்ச்சியே இல்லை. 'சார்ங்கரவா! எல்லாம் எனக்குத் தெரியும். நீ ஒன்றும் கூறவேண்டிய அவசியமே இல்லை'' என்ற முனிவரின் வார்த்தைகள் பிரியம்வதைக்கு எரிச்சலை மூட்டின. அவளுக்கு ஞானதிருஷ்டி இல்லையே!

''அம்மா! என்ன நடந்தது? என் தோழி கணவன் வீட்டில் சுகமாக இருக்கிறாளா? விவரமாகத்தான் சொல்லுங்களேன்!'' என்று

துக்கப்படுபவர்: **என்ன ஐயா உமக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை!**
சிரிப்பவர்: **இந்த வருஷம் அநேகம் பேர் பெயிலாகி என் டியூட்டோரியல் காலேஜில் சேர்ந்து விட்டார்கள் அதான்... ஆமாம்! நீர் ஏன் துக்கமாக இருக்கிறீர்?**



துக்கப்படுபவர்: **என் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டு இருந்த பையன்கள் எல்லோரும் கலியாணம் ஆகிப் போய் விட்டார்கள், சார்!**

கண்ணீர் விட்டுக் கொண்டு நின்ற கௌதமியின் தோள்களைப் பற்றி உலுக்கினாள் அந்தப் பேதைப் பெண்.

"என்ன சொல்வேன், அம்மா! நடக்கக் கூடாதது நடந்து விட்டது! அரசன் துஷ்யந்தன் உன் தோழியை மறந்து விட்டான்."

"அவர் கொடுத்த மோதிரத்தைக் காண்பிப்பதுதானே?"

"அதுதான் வழியில் எங்கேயோ தொலைந்து விட்டதே! ஸசிதீர்த்தம் என்ற ஏரியில் படகில் செல்லும்போதுதான் மோதிரம் நழுவியிருக்க வேண்டும்."

"என்ன? ஏரியில் விழுந்து விட்டதா? அதைக் கண்டுபிடிக்கவே வழியில்லையா?"

"எப்படி அம்மா தேட முடியும்? அரசன் அவளை ஏற்றுக்கொள்ள இசையவில்லை. 'நம்முடன் அழைத்து வந்து விடலாம்' என்றதற்குச் சார்ங்கரவன் மறுத்து விட்டான்."

"சகுந்தலையை அங்கேயேயா விட்டு வந்தீர்கள்? சூது வாது அறியாத, பூரண கர்ப்பிணியான அந்த அபலை அவ்வளவு பெரிய நகரத்தில் தனியே என்ன செய்வாள்? உங்களுக்கு அதற்கு எப்படி மனம் துணிந்தது?" என்று சார்ங்கரவனை நோக்கி அரற்றினாள் பிரியம்வதை.

"என்ன செய்வது பிரியம்வதை! சகுந்தலை ஹஸ்தினாபுரத்துக்குப் புறப்படும்போது குருதேவரிடம், 'நான் எப்பொழுது உங்களையெல்லாம் பார்ப்பேன்?' என்று கேட்டதற்கு அவர், "உன் மகனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தபின் நீயும், உன் கணவனும் இங்கு வரலாம்' என்று கூறியது உனக்குத் தெரியாதா? இடையில் நான் எப்படி அவளை அழைத்து வருவது?"

சற்று நேரம் அங்கு நிலவிய மௌனத்துக்குப் பின் பிரியம்வதை வேகமாக வெளியே சென்று விட்டாள்.

• • •

சிற்றைக் கெல்லாம் பிரியம்வதையைத் தேடி வந்தான் சார்ங்கரவன். அவளோ அவன் வந்ததைக் கவனியாமல் தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

"பிரியா!"

பதில் இல்லை.

"பிரியே! ஏன் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாய்?"

"பிரியா என்று அழைக்க வேண்டாம். முழுப் பெயரைச் சொல்லியே கூப்பிடுங்கள்."

"பிரியம்வதை! ஏன் உனக்கு என்மீது இத்தனை கோபம்? நம்முடைய விவாகத்துக்கு ஏற்பாடுகளெல்லாம் நடக்கின்றனவே, பார்த்தாயா?"

"முனிகுமாரா! என் திருமணம் இனி நடைபெறாது. நான் என்றுமே கன்னிதான்."

"பிரியம்வதை! என்ன சொல்கிறாய்? நினைவுடன்தான் பேசுகிறாயா?" என்று வியப்புடன் கேட்டான் சார்ங்கரவன்.

பிரியம்வதை அமைதியாகக் கூறினாள்: "பூரண நினைவுடனேயேதான் பேசுகிறேன். எனக்கு நினைவு தெரிய ஆரம்பித்த பருவத்தில் என் தந்தை சகுந்தலையைக் கொண்டு வந்து, 'இவள் உன் சகோதரி. இவளைக் கவனமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு' என்றார். அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவதாக நினைத்தே நடந்தேன். கர்ப்பிணியாக இருந்த அவளுக்கு அவளுடைய கணவன் எழுதுவது போலக் கடிதங்கள் எழுதினேன். அவள் மனம் அதிர்ச்சியடையக் கூடாது என்பதற்காகவே துர்வாசருடைய சாபத்தைப் பற்றி அவளிடம் கூறவில்லை. ஆனால் அதுதான் நான் செய்த பெரும் தவறு. நான் அப்பொழுதே அவளிடம் அதைப் பற்றிச் சொல்லியிருந்தால், அவள் மோதிரத்தைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருப்பாள் அல்லவா? அவளுடைய வாழ்க்கை பாழானதற்கு நான்தான் காரணம். அதற்குப் பிராயச்சித்தமாக நான் தண்டனை அனுபவித்தே தீர வேண்டும்."

"பிரியம்வதை! உனக்குத்தான் நீ தண்டனை விதித்துக் கொண்டாய். நான் என்ன தவறு செய்தேன்? எனக்கு ஏன் இவ்வளவு கொடிய தண்டனை?"

"ரிஷிபுத்ரா! கணவனால் கைவிடப்பட்டு நிராதரவான நிலையில் இருக்கும் பெண்ணின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்று உணராமல், குருதேவர் கூறினார் என்பதற்காக விட்டு வந்தீர்களே! அப்படியானால் அவள் கணவனைச் சேர்ந்தாளா. பிற்காலத்தில் மகனுக்குப் பட்டம் சூட்டியவுடன் புருஷனுடன் ஆசிரமத்துக்கு வர? நீங்களா நாளைக்கு மனைவியின் விருப்பத்தை அனுசரித்து நடக்கப் போகிறீர்கள்? ஒரு நாளும் இல்லை. இங்கேயே இருந்தால் என்றேனும் ஒரு நாள் என் மனம் தடுமாறி விடும். நான் மனித சஞ்சாரமற்ற அடுத்த வனத்துக்குத் தவம் செய்யச் செல்கிறேன். வருகிறேன். கடைசியாக உங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன்."

"பிரியம்வதை! பிரியம்வதை!" என்று அலறிய சார்ங்கரவனின் குரல் காடு முழுவதும் எதிரொலித்தது. ஆனால் அதைக் கேட்க அவள்தான் அங்கில்லை!

யார் குற்றம்



''கௌசிகன்''

உல்லாசமான காலை வேளை. என் உள்ளம் அன்று குதூகலத்தால் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. விடிந்தும் கூடப் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனமில்லை. அன்று ஞாயிற்றுக்கிழமை வேறு. நான் விழித்துக் கொண்டே படுத்திருப்பதைக் கண்ட என் மனைவி குறும்பாக அறைக்குள் தலையை நீட்டி, 'பள்ளி எழுந்தருளீரோ, பல் துலக்கிக் காப்பி அருந்த வாரீரோ?' என்று அபிநயம் பிடித்தாள். அவளைப் பிடிக்கத் தாவினேன். கலகலவென்று சிரித்தபடி துள்ளியோடித் தன் கோட்டைக்குள் புகுந்துகொண்டாள் பத்மினி.

அவள் சிரிப்பு உள்ளத்தைக் கிளுகிளுக்க வைத்தது. 'பெண்களின் சிரிப்புக்குத்தான் எத்தனை கவர்ச்சி?' என்று எண்ணமிட்டபடி படுக்கையைச் சுற்றி வைத்துவிட்டு எழுந்திருந்தேன். பத்மினியை மனைவியாக அடைந்ததில் எனக்கு எத்தனையோ கர்வம். அழகும், அன்பும் அறிவும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒருத்தியை மனைவியாக அடைந்ததை நினைத்து யார்தான் கர்வப்படாமல் இருப்பார்கள்? பத்மினி படித்த பெண். ஆனால் பகட்டு கிடையாது. நாகரிகம் என்றால் என்ன என்று தெரிந்தவள். ஆனால் அதற்கும் மேலாக, கணவனின் உள்ளமறிந்து நடக்கக் கூடியவள். கலகலப்பான பட்டண வாசத்தை விட்டு மூணாறு எஸ்டேட் ஒன்றில்நான் உத்தியோகம் ஏற்று வந்தபோது அவள் முகம் சுளிக்கவில்லை. என் விருப்பமே தன் சந்தோஷமாக நினைத்து இந்த மலைக் காட்டுக்கு என்னுடன் வாழ்க்கை நடத்த வந்தாள். நானும், அவளுக்கும் குழந்தை ரவிக்கும் எவ்விதக் குறையும் வைக்கவில்லை. வாழ்க்கையின் சகல சௌகரியங்களையும் அனுபவிக்கத் தகுந்த வருவாய் உடைய உத்தியோகம் என்னுடையது. ஆகவே சந்தோஷமும் ஐச்வரியமும் நிறைந்த ஒரு குடும்பத்தை உருவாக்கி இருந்தாள் என் அருமை மனைவி பத்மினி.

எங்கள் ஆனந்த வாழ்வின் அருமைப் பொக்கிஷமாக ரவி விளங்கினான். ஒரு தகப்பனார் பெருமை கொள்ளும்படியான மகன் ரவி. ரொம்பச் சூட்டிகை. ரவியிடம் நாங்கள் உயிரையே வைத்திருந்தோம். அதற்குக் காரணமும் இருந்தது. ரவியைப் பெற்றபோதே சொல்லி விட்டார்கள், டாக்டர்கள் இனி பத்மினி காய்க்காத மரம்தான் என்று. அவ்வை பெற்ற அரி நெல்லிக்கனியைப் போல் குழந்தை ரவியைப் பெற்ற பெருமையிலே நாங்கள் பூரித்துக் கிடந்தோம்.

கண்ணாடிமுன் நின்று தலைவாரிக் கொண்டிருந்தபோது பத்மினியிடம் ''குழந்தை ரவி எங்கே காணோம்? காலையிலிருந்தே அவன் என்னுடைய கண்ணில் படவேயில்லையே?'' என்று கேட்டேன்.

என் தோளில் கிடந்த ஈரத்துண்டை எடுத்துப் பிழிந்து கொண்டே, ''காலையில் ஐந்து மணிக்கே அவன் எழுந்திருந்து விட்டான். இன்றைக்கு அவன் அப்பா அவனைப் படகில் உல்லாசமாக அழைத்துப் போகப் போகிறாராம். அவனுக்குப் பெருமை பிடிபடவில்லை'' என்றாள் ஒய்யாரமாக ஓரக்கண்ணால் என்னைப் பார்த்தபடியே.

''உல்லாசப் படகுப் பிரயாணத்தில் கலந்து கொள்ள அவன் அம்மாவுக்கும் அனுமதியுண்டு'' என்றேன், கண்ணாடியில் தெரிந்த அவள் உருவத்தைப் பார்த்துக் கொண்டே. ரவியை இன்று மூணாறு நீர்த்தேக்கத்தில் படகில் அழைத்துப் போவதாக முதல் நாள் இரவே சொல்லி இருந்தது பத்மினி சொன்ன பிறகுதான் எனக்கு நினைவு வந்தது. சீக்கிரமாக எழுந்திருந்து தன் நண்பன் கோபுவையும் அழைத்துக் கொண்டு நீர்த்தேக்கத்துக்குப் போய் அவன் காத்திருக்க வேண்டியது என்றும், நான் சிறிது நேரத்துக் கெல்லாம் பின்னாலேயே அங்கு வருவதாகவும் ஏற்பாடு. ஏற்பாட்டின்படி அவன் கிளம்பிப் போய் விட்டான். நான்தான் அந்த நினைவே சிறிதும் இல்லாமல் சாவகாசமாக எழுந்திருந்து மனைவியுடன் வேடிக்கை செய்து கொண்டிருக்கிறேன்.

''சீக்கிரம் காப்பி சாப்பிட்டு விட்டுக் கிளம்புங்கள். குழந்தை போய் வெகுநேரமாகி விட்டது. அப்பா வரவில்லையே என்று காத்திருப்பான்'' என்றாள் பத்மினி.

''நீயும் வருகிறாயா பத்மினி...?'' என்றேன்.

''உங்களோடு படகில் வருவதற்கு ஆசைதான். ஆனால் நானும் வந்து விட்டால் இங்கு சமையல் செய்வது யார்? குழந்தையோடு நீங்கள் போய் வாருங்கள்'' என்றாள்.

காலைக் கதிரவன் வீசியிருந்த பொன்னிறப் போர்வையிலே பொலிவோடு விளங்கும் பசும் புல் தரைகளைப் பார்த்துக் கொண்டே காப்பியைச் சுவைத்தபடி உட்கார்ந்திருந்தேன். நெஞ்சிலே ஏனோ ஒரு இனந்தெரியாத பூரிப்பு.

திடீரென்று அந்தப் புல் தரையில் கால்களே தரையில் பாவாமல் அலங்கோலமாக ஓடி வரும் ஒரு உருவத்தை என் கண்கள் பார்த்தன. மயக்கத்தை உதறிவிட்டு உற்றுப் பார்த்தேன். அது எங்கள் வேலைக்காரன் முனுசாமிதான். ஸ்நான சரியான அவன்

அத்தனை வேகமாக ஓடி நான் பார்த்ததே இல்லை. பளீரென்று நெஞ்சை வலித்தது.

''எசமான்...எசமான் கொளந்தே...நம்ம சின்ன எசமான்?'' மேலே பேச முடியாமல் பீரிட்டெழுந்த அழுகை அவன் வார்த்தைகளுக்கு அணையிட்டது.

''என் ரவிக்கு என்ன முனுசாமி?'' பதறினேன். என் இதயத்தை யாரோ அழுத்திப் பிழிவது போலிருந்தது. என் முகத்தைப் பார்க்க முடியாமல் அவன் தலை குனிந்தபடி தணிவான குரலில் மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசினான். ''ரெசர்வாயர்லே தவறி விழுந்து மூழ்கிட்டாரு. நான் மாடு குளிப்பாட்டிக்கிட்டு வந்த போது, சண்முகம் ஐயாவோட மகன் போட்ட கூக்குரல் கேட்டு ஓடினேன்...'' விம்மினான் முனுசாமி. மரங்கள், புல்வெளி, வீடு, முனுசாமி எல்லாம் என்னைச் சுற்றித் தட்டாமாலை ஆடின.

''உடனே தண்ணீரிலே குதிச்சேன். குழந்தையையும் தேடி எடுத்துட்டேனுங்க... ஆனால்'' இரும்புக் கிராதியில் தன் தலையை மோதிக் கொண்டு 'கோ'வென்று கதறினான் முனுசாமி. அவன் வளர்த்த குழந்தை ரவி.

என் பின்னால் நின்று கொண்டிருந்த பத்மினி ''ஐயோ என் ரவியா?'' என்று வீரிட்டாள். அவள் விழிகள் கீழே விழுந்து விடுவன போல நிலைத்து நின்றன. திறந்த வாயுடன் திக்பிரமை பிடித்துப் போயிருந்த அவளிடமிருந்து அழுகை வெடித்து வழியச் சில விநாடிகள் ஆயின. தாங்க முடியாத துக்கத்தின் வடிகாலாகப் பெற்ற வயிற்றிலிருந்து பீரிட்டுக் கொண்டு வந்தது அழுகை. என் வேதனையை, தவிப்பை, குமுறலை உள்ளுக்குத் தள்ளி அழுத்திக் கொண்டு விம்மிப் புலம்பும் அவளைக் குலுக்கி, ''பத்மினி! நீ போய் டாக்டருக்குப் போன் செய்து அவரை உடனே இங்கு வரச் சொல், போ'' என்று சொல்லிவிட்டு வேகமாக ஓடினேன்.

நீர்த்தேக்கம் என் வீட்டிலிருந்து ரஸ்தா வழியாகச் சென்றால் அரை மைலுக்கு மேல் இருக்கும்.

எனக்கு மூச்சு முட்டியது. மேட்டின் மீது ஏறும்போது இரண்டு தடவைகள் சறுக்கி விழுந்தேன். மூகட்டை அடைவதற்குள் மூச்சு வாங்கியது. காலை வேளை. இன்னும் பனிசரியாக விலகவில்லை. தூரத்திலே புல் தரையில் ஒரு உருவம் நிற்பது தெரிந்தது. அது கோபுவாகத்தான் இருக்க வேண்டும். கோபுவே தான். என் ரவியின் உயிர்த்தோழன். ரவியை விட ஒரு வயது மூத்தவன். நானும் சண்முகமும் எப்படி இணைபிரியாத நண்பர்களோ, அப்படியே ரவியும் கோபுவும்.

'அதோ தூரத்தில் அங்கே - அந்தப் புல் தரையில், ஐயோ, என் ரவி, தலை வெடித்து விடும் போலிருந்தது. ஓடினேன். முகம் கவிழக் கிடந்தான் ரவி—முனுசாமி முதல் சிகிச்சை செய்த அதே நிலையில்.

'ஐயோ அப்படி இருக்காது. இருக்கக் கூடாது' என்ற மனத் தவிப்புடன் அருகே சென்றேன். தாவி எடுத்துக் குப்புறக் கிடந்த அவனை நிமிர்த்திக் கிடத்தினேன். உடலில் சூடே இல்லை. ஒரு வேளை என் கைகளுக்குத் தான் உணர்ச்சி இல்லையோ?

''ஐயோ! கடவுளே ... கடவுளே வேண்டாம்'' குனிந்து குழந்தையின் மார்பிலே காது வைத்துக் கேட்டேன். 'ஹோ' என்ற பேரிரைச்சலாகக் கேட்டதே தவிர என் மகனின் இதயத் துடிப்பை—அந்த இனிய ஒலியை உணர முடியவில்லை.

நீரிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட தாமரைக் கொடியைப் போலத் துவண்டு கிடந்த என் அருமை மகனை இரு கைகளாலும் அள்ளி எடுத்துக் கொண்டேன். அன்போடு ஆசையோடு சீராட்டித் தாலாட்டி வளர்த்த உடல், கைக்கு அடங்காமல் வழிந்தது. பிடிக்கு அகப்படாமல் ஒரு கை தொங்கலாடியது.

'விநாடியும் தாமதிக்காமல் வீட்டுக்குப் போகணும். டாக்டரிடம் ரவியை ஒப்படைக்க வேண்டும்' என்று தவித்தது உள்ளம். குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினேன். ஓடு



வதினால் குழந்தையின் உடல் அலங்கி விடுமோ? அதனால் எங்கோ ஒட்டிக் கொண்டிருக்கும் உயிர் — மூச்சு நின்று போய் விட்டால்...?'

ஓட வேண்டும் என்று துடிக்கும் உள்ளத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தினேன். வேகமாக நடக்கலானேன். ரவி என்னுடைய கைகளுக்குக் கனமாகவே தோன்றவில்லை.

பத்தடி நடந்திருப்பேன். கோபுவின் நினைவு வந்தது. திரும்பிப் பார்த்தேன். இப்போது அவன் அழவில்லை. பீதியினால் பிதுங்கிய கண்களுடனும் வெளுத்த முகத்துடனும் என்னையே - நான் ரவியைத் தூக்கிக் கொண்டு போவதையே பார்த்தபடி சிலையாக நின்று கொண்டிருந்தான்.

''கோபு போ...போய் உன் அப்பாவிடம் நடந்ததைச் சொல்லு போ, ஓடு'' என்று சொல்லி விட்டு வேகமாக நடக்கலானேன். குழந்தையின் உடல் நலுங்கி விடுமோ என்று அடிக்கடி நடையின் வேகத்தைக் கட்டுப்படுத்தினேன். மனமோ பறந்து கொண்டிருந்தது.

டாக்டர் ராஜு என் வீட்டு வாசலில் என் வரவுக்காக நின்று கொண்டிருந்தார். என் மனைவி அவரிடம் என்ன சொன்னாளோ? அவர் எப்படித்தான் அத்தனை சீக்கிரமாக அங்கு வந்தாரோ? நான் ரவியைப் படுக்கையில் கிடத்த ஓடி வந்து உதவினார். தவிப்போடு எவ்வி எவ்விப் பார்த்துக் குமுறினாள் பத்மினி—பொங்கிவரும் விம்மலைப் புடவைத் தலைப்பினால் அழுத்திக் கொண்டு எட்ட நின்றாள். அழுதால்—புலம்பினால் டாக்டருக்கு இடையூறாக இருக்கும் என்றுதான் அவள் அப்படி இருந்திருக்க வேண்டும். ரவியைப் பெற்ற தாயின் துயரம் தாங்கக் கூடியதா, என்ன?

அவள் அமைதிக்கு எதிரிடையாக நான் புலம்பினேன். ''டாக்டர் எங்கள் ரவியை எங்களுக்கு நீங்கள்தான் அளிக்க வேண்டும், டாக்டர். உங்கள் திறமையெல்லாம் காட்டி என் கண்மணியைப் பிழைக்க வையுங்கள்.'' பேச முடியாமல் துக்கம் வார்த்தைகளுக்குக் கொக்கி போட்டு உள்ளுக்கு இழுத்தது.

டாக்டர் பேசவில்லை. குழந்தையைக் குனிந்து சோதித்தார். முடிவாக எழுந்திருந்தார். முதிய அவர் முகத்திலே ஒரு முடிவு தென்பட்டது. ஆனால் அதில் மகிழ்ச்சியின் கீற்றுக்கூடக் காணோம். என்னைப் பார்த்து மெதுவாகத் தலையை அசைத்தார். ''காலங் கடந்து விட்டது கணபதி. நான் செய்வதற்கு ஏதுமில்லை'' என்ற அவர் வார்த்தைகளைக் கேட்க என் காதுகளுக்கு உணர்வே இல்லை.

தேக்கி வைத்திருந்த அழுகை வெள்ளமாக வெடித்தது ''ஐயோ, என் கண்ணே ரவி!'' என்று அலறியபடி குழந்தை மீது போய் விழுந்து, அவனை அந்தச் சலனமற்ற உடலைக் கட்டிக்கொண்டு புலம்பினாள் பத்மினி.

புயலைப் போல ஓடி வந்தார் சண்முகம். தன் மகன் கோபுவிடமிருந்து விஷயத்தைக் கிரஹித்துக் கொண்டதும் என்னைக் காண ஓடோடி வந்திருக்கிறார். விம்மலும் அழுகையுமாக ஏதேதோ சொல்லிக் கொண்டு போனார். எதுவுமே என் காதில்-மனத்தில்- பதியவில்லை. டாக்டரும் என் நிலை அறிந்து சண்முகத்தை மெதுவாக அழைத்துக் கொண்டு வெளியே போய் விட்டார்.



எல்லாம் முடிந்து விட்டது—கனவுபோல, நினைக்க நினைக்க நெஞ்சம் பொங்கிப் போயிற்று. பன்னிரண்டு வருடங்களாக யாருடைய வளர்ச்சியிலே, யாருடைய வாழ்விலே, யாருடைய பேச்சிலே, சிரிப்பிலே சிந்தையைப் பறி கொடுத்திருந்தோமோ அந்த ஜீவன் ஒரு நொடிப் பொழுதிலே எங்களை விட்டுப் பிரிந்து விட்டது—எங்கள் இதயத்தையும் இன்ப வீட்டையும் சூனியமாக்கி விட்டு. சூனியம் என்று சொன்னேன்? இல்லை...அவன் உயிர்தான்

பிரிந்தது. உருவம்தான் மறைந்தது. எங்கள் உள்ளங்களை விட்டு அவன் போகவில்லை.

* * *

குழந்தையின் கைத் தின்பண்டத்தைத் தட்டிப் பறித்துச் செல்லும் கழுகைப்போல் கண்மணி ரவியை, எங்களை விட்டுப் பிரித்து விட்ட விதியை எண்ணி எண்ணி ஏக்கப் பெரு மூச்சு விட்டேன்.

அத்தகைய முடிவு அவனுக்கு எப்படி ஏற்பட்டது என்பதை மறுநாள், சண்முகத்துடன் வந்திருந்த கோபு விம்மல்களுக்கிடையே கண்ணீர் ஒழுக நடுங்கும் குரலில் சொன்னான்.

இவர்கள் நீர்த்தேக்கத்தை அடைந்தபோது அங்கு யாருமே இல்லை. படகுத் துறைக் காவலாளி கூட அந்த அதிகாலையில் இன்னும் வரவில்லை. படகிலே செல்லப் போகிறோம் என்ற ஆவல்—அடக்கிக் கொண்டு காத்திருக்க முடியவில்லை. 'வா, வா' என்று அழைப்பது போல் படகு நீரிலே ஆடி அசைந்து கொண்டிருந்திருக்கிறது. 'படகு வலிப்பது ஒன்றும் பிரயாதமில்லை' என்று பெருமையடித்துக் கொண்டிருக்கிறான் கோபு. ரவியை விட ஒரு வயது மூத்தவன் அவன். பேச்சோடு நிற்கவில்லை. கட்டி இருந்த படகை அவிழ்த்து அதில் தாவி ஏறி உட்கார்ந்து ரவியையும் வரும்படி அழைத்திருக்கிறான். இதற்குள் மிதந்து நகர ஆரம்பித்துவிட்ட படகில் ரவி குதிக்கவே, அது ஆடிய ஆட்டத்திலே சமாளித்து நிற்க முடியாமல் நிலை தடுமாறி நீருக்குள் விழுந்து விட்டான். ரவிக்கு நீந்தத் தெரியாது. தவிர, அணைக்கட்டின் மதகுகள் திறந்து விடப்பட்டிருந்ததால் இழுப்பும் சுழிப்புமாக நல்ல வேகம் எடுத்த உடனே நல்ல ஆழமும் கூட. ரவி நீரிலே விழுந்து விட்டதும் கோபு கலவரமடைந்து கத்தி இருக்கிறான். இவன் கூக்குரலைக் கேட்டு ஓடிவர யாருமில்லை. படகு சுழலின் நடுவில் போய் மாட்டிக் கொள்ளாமல் சிறிது தூரம் சென்று மறுபடியும் கரைக்கே ஒதுங்கி யிருக்கிறது. கோபு புத்திசாலித்தனமாகத் துணிவுடன் படகிலிருந்து புல் தரையில் குதித்து விட்டான். கரைக்கு வந்ததும் வெறி பிடித்தவனைப் போலக் கத்திக் கொண்டு—அங்கும் இங்கும் ஓடி இருக்கிறான். இந்தச் சமயத்தில் தற்செயலாக அங்கு வந்த முனுசாமி விவரம் அறிந்து நீரில் குதித்து என் குழந்தையின் உடலைத் தேடி எடுத்து மேலே கொண்டு வந்து போட்டிருக்கிறான்...

இதைச் சொல்லிவிட்டுக் கோபு விக்கி விக்கி அழுது கொண்டிருந்தான். சண்முகம் அடைபட்ட குரலில் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார். எதையுமே யாருடைய பேச்சையுமே கேட்க எனக்குப் பிடிக்கவில்லை. சிறிது நேரத்தில் என் மௌனத்தைக் கண்டு அவசரமே எழுந்து போய் விட்டார்.

மாலை வேளை. வெறுப்புடன் வயல் வெளியைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தேன். முனுசாமி பத்மினியிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தான். "ஆமாம்மா! மூணு நாளா அவரு மகன் ஆஸ்பத்திரியிலேதான் இருக்காம். இன்னும் காய்ச்சல் இறங்கவே இல்லையாம். அதிர்ச்சியினாலே வந்த ஜுரம்னு சொல்றாராம் டாக்டர்."

சண்முகத்தின் மகன் கோபுவைப்பற்றித் தான் அவன் சொல்லி இருக்க வேண்டும். ஆனால் அந்தச் செய்தி என்னிடம் எவ்வித சலனத்தையும் உண்டாக்கவில்லை.

"ஐயோ, பாவம்! தன் நினைவில்லாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறானா? ஏண்டா, முனியா?" என்று கேட்டாள் என் மனைவி. அவள் குரலில்தான் எத்தனை தவிப்பு—பச்சாத்தாபம்! முனுசாமி தலையை அசைத்தான்.

எதையோ நினைத்துக் கொண்டவளைப்போல் பத்மினி டெலிபோனை எடுத்துப் பேசினாள்: "யாரு சுமதியா? இப்பத்தான் முனுசாமி சொன்னான். குழந்தை கோபுவுக்கு மூணு நாளா பிரக்ஞையே வரல்லியாமே...ம்! அதனாலே என்ன சுமதி. துக்கமும் வேதனையும் எல்லாருக்கும் ஒண்ணுதானே?" என் மனைவியின் பேச்சு எனக்கு ஆத்திரமூட்டியது. அநுதாபப்படுகிறாள். யாருக்கு? என் மகன் உயிருக்கு யமனாக இருந்த அந்தக் குடும்பத்தாரிடம்—அந்தக் கொலைகாரக் கோபுவிடம்—அநுதாபம் காட்டுகிறாள்.

சில நிமிஷ மௌனத்துக்குப் பிறகு மறுபடியும் பத்மினி பேசினாள். "குழந்தைக்கு அதிர்ச்சி தான். வேறு ஒண்ணுமில்லே. குழந்தை கோபுவிடம் நாங்கள் சொன்னதாகச் சொல், சுமதி. ரவியோட விதி முடிந்து விட்டது. கடவுளின் விருப்பம் அது...அப்படித்தான்



ஆம், இதுதான் சரியான பெயிண்ட்!
...வெகு காலம் நீடித்து உழைக்கும்...
...ஏனெனில், எல்லோரும் விரும்பும் நேர்த்தியான இந்த ஷாலிமார் ஸுப்பர்லாக் ஸிந்தடிக் எனாமலை நான் உபயோகித்திருக்கிறேன்...
SHALIMAR
பல தடவை அலம்பினாலும் அழியாதபடியும், நல்ல பாதுகாப்பாகவும், மிக்கப்பளபளப்புடனும் இருப்பதற்கு இந்த எனாமலை பிரஷ்ஷினாலாவது, ஸ்ப்ரேயினாலாவது அல்லது டிப்பிங் முறையிலாவது பூசலாம். கலர்கள் ஒன்றோடொன்று கலக்கக்கூடியவைகள்
ஒரு காலனைக் கொண்டே அதிகமான இடத்திற்குப் பூசமுடியும்
உட்புறமோ, வெளிப்புறமோ, எந்தப்புறமானாலும் பூசலாம்
SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., PRIVATE LTD.
CALCUTTA • BOMBAY • MADRAS • NEW DELHI • KANPUR

எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அதை நம்மால் தாங்கமுடியும். அழாதே கமலி...எதற்காக அழுகிறாய்? நடந்ததையே எண்ணிக் கொண்டிருந்தால் நாளெல்லாம் பாழாக வேண்டியதுதான். நாம் வாழுவது தான் எப்படி? நாம் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்ற விவேகம் வந்தால் தான் வேதனையை ஜீரணிக்க முடியும்.''

என் பத்மினி ஒரு அதிசயப் பெண்தான். இல்லாவிட்டால் இத்தனை பெரிய துக்கத்தை மனத்தில் புதைத்துக் கொண்டு இவ்வளவு அமைதியாகப் பெருந்தன்மையோடு யாரால் பேசமுடியும்? வியப்பினால் விம்மிதமடைந்தது என் நெஞ்சம். வேதனை வெள்ளத்திலே விழுந்து மூழ்கிக் கொண்டிருக்கும் மனிதனுக்கு விதி, கடவுள் என்ற மிதப்புக் கட்டைகள் இருப்பதினால்தான் அவனால் மீள முடிகிறது. நம்பிக்கை என்பதோ அன்றாட வாழ்க்கையின் ஒரு அங்கமாகி விட்டது. கமலிக்கு என் மனைவி கூறிய சமாதானங்களையெல்லாம் எண்ணி வியந்து கொண்டிருந்தேன். ஆனால் அவள் முடிவை நான் ஏற்கவில்லை. ஏற்கவும் முடியாது.

அன்று காலை ரவி வெகுநேரம் தூங்கி இருந்தாலும்? கோபு அன்று ரவியோடு படகுத் துறைக்கு வராதிருந்தால்? கோபுவின் பொறுப்பற்ற புத்தியில்லாத அதிகப் பிரசங்கித்தனத்துக்குக் கடவுளைக் காரணமாக்குவதா? என் ரவி தனக்குத் நீரத் தெரியாத காரியங்களில் துணிந்து செயற்படவே மாட்டான். கோபு படகிலே உட்கார்ந்து ரவியையும் ஏறிக் கொள்ளும்படி அழைத்ததினால் தானே இந்த விபத்து ஏற்பட்டது? இதை எதிர்பாராத செயல் என்று ஏற்றுக் கொள்ள என் உள்ளம் மறுத்தது. என் அருமை ரவி. என் உயிரின் உயிர் இனி நான் போகுமிடங்களுக்கெல்லாம் என்னோடு எனக்கு முன்னால் ஓடி வரமாட்டான் என்பதை நினைக்க நினைக்க வேதனை குமுறிக் கொண்டு எழுந்தது.

நரக வேதனையாக நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

குழந்தை கோபுவைக் குற்றவாளியாக்கிக் குமுறிக் கொண்டிருக்கும் என் உள்ளக் கொதிப்பை உலகத்தாரின் கண்களுக்குப் படாமல் நெஞ்சாழத்திலே அழுத்தி வைத்துக் கொண்டிருந்தாலும் பத்மினியை நான் முட்டாளாக்க முடியவில்லை. என் மூச்சுக் காற்றாக வாழ்ந்து வருபவள் அவள். ரவியோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு சிறுவிஷயங்களும் அந்தப் பயங்கர நினைவுக்குப் பசுமையளித்து என்னை அல்லல்படுத்துகிறது என் மனதை அவள் அறிவாள். தெருக்கோடியில் பள்ளிக்கூடம். மாலையிலே குழந்தைகள் ஓடி வரும் குதூகல ஆரவாரத்தைக் கேட்டு அவர்களோடு ஓடிவர என் ரவி இல்லையே என்பதை நினைக்கும்போது நெஞ்சு விண்டு போகும்.

ஒரு மாதம் ஓடி விட்டது. அன்று... உடைந்து விட்ட ரேடியோ ஏரியல் மூங்கிலை நேர் செய்வது என்று நிச்சயித்துக் கொண்டு அதற்கு வேண்டிய உபகரணங்களுடன் ஏணியை வாசல் சார்ப்புக்கு இறக்கி இருந்த ஓட்டின்மீது சாய்த்து வைத்து ஏறினேன். ஏரியல் கம்பியைக் காய்கறி நறுக்கும் கத்தி



கிழவர்: அடாடா! அவர் குடும்பக் கட்டுப்பாடு அதிகாரி! அவரைப் போய்க் குழந்தை ஆசீர்வாதம் பண்ணச் சொல்லுகிறீர்களே!

யினால் சீவிக் கட்டுவதற்குத் தயாராகினேன். கம்பியை இழுத்துக் கட்ட வேண்டியதுதான். பத்மினி அழைக்கும் குரல் கேட்டது. திரும்பினேன். திரும்பிய வேகத்தில் கைக்கு எளிதாகக் கைப்பிடிச் சுவரின் மீது வைத்திருந்த கத்தியின்மீது என் முழங்கை படவே அது நழுவியது. விழுவதைப் பிடிக்கப் போனேன். முடியவில்லை. சார்ப்பிலே தடாலென்று விழுந்து வெகு வேகமாகக் கீழ் நோக்கிப் போகலாயிற்று. கீழே என் மனைவி பத்மினி என்னையே நிமிர்ந்து பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். சூரிய ஒளி பட்டுக் கத்தி பளபளத்தது. என் நெஞ்சு நின்றே விட்டது. செயலற்று ஸ்தம்பித்து விட்டேன். அந்த வேகத்தோடு அது அப்படியே போனால் நேரே பத்மினியின் முகத்திலோ அல்லது மார்பிலோதான் போய்ப் பதிந்து விடும்.

எல்லாம் ஒரு இமைப் பொழுதில். 'ஐயோ, பத்மினி!' என்று கிரீச்சிட்டேன். என் கூச்சலினால் திடுக்கிட்ட பத்மினி தடுமாற்றத்துடன் இரண்டு அங்குலம் நகர்ந்தாள். அவள் அசைவுக்கும்; வெகு வேகமாகக் குறி தவறாமல் வந்த அந்தப் பயங்கர ஆயுதம் அவள் கால்களுக்கு முன்னால் பூமியில் போய்க் குத்திட்டு நிற்பதற்கும் சரியாக இருந்தது. மரணத்துக்கும் அவளுக்கும் இடையே மயிரிழைதான்! என் உடல் தெப்பமாக நனைந்து விட்டது. உணர்விழந்து துவண்டு நடுங்கும் கரங்களால் ஏணியை இறுகப் பற்றிக் கொண்டு அப்படியே சில விநாடிகள் அதன்மீது சாய்ந்துவிட்டேன். பிறகு மெதுவாகக் கீழே இறங்கினேன். தரையில் கால் பட்டபோதுதான் உடல் நடுக்கம் நின்றது.

திகைத்துப்போய் நின்ற என் மனைவியின் தோள்களைப் பற்றிப் பரபரப்புடன் ''என்ன பத்மினி இது! வேலை செய்து கொண்டிருக்கும் போது ஏணியின் கீழே இப்படித்தான் வந்து நிற்பார்களா? எத்தனை பெரிய விபத்துக்கு உள்ளாக இருந்தாய். எதற்காகக் கூப்பிட்டாய்?'' என்றேன்.

உலர்ந்த குரலில் ''ஒன்றுமில்லை. மணி நாலாகிறதே. காப்பி சாப்பிட வருகிறீர்களா என்று கேட்க வந்தேன்'' என்றாள் பத்மினி.

''ஒரு டம்ளர் காப்பிக்காக உன் உயிரையே இழக்க இருந்தாயே?''

''எனக்கு ஒரு நிமிஷம் ஒன்றுமே தோன்றவில்லை. என்னால் அசையவே முடியவில்லை'' என்றாள் பத்மினி கீழே குத்திட்டு நின்ற கத்தியைப் பார்த்தபடி.

ஆபத்து நகர்ந்து விட்டாலும் அந்த இடத்தில் அவள் இருப்பது எனக்கென்னவோ பயமாக இருந்தது. ''நீ உள்ளே போ. நான் இந்த வேலையை முடித்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லி அவளை அனுப்பினேன்.

'நாம் எதிர்பாராமல் எவ்வளவு சீக்கிரமாக விபத்துக்கள் நிகழ்ந்து விடுகின்றன. நான் அவ்வளவு அஜாக்கிரதையாக அந்தக் கத்தியைச் சற்றுப் பட்டதும் நழுவி விழும்படியான கோணத்தில் வைத்திருந்திருக்கிறேன். அது என் முழங்கை பட்டு விழும் என்று நினைத்தேனா? அது விழும் சமயத்தில் பத்மினி அங்கு வருவாள் என்றுதான் எதிர்பார்த்திருப்பேனா? கத்தி வந்த வேகத்திலே தன் காரியத்தை முடித்திருந்தால்? என் அருமை மனைவி—இதய ராணியின் கதி என்ன ஆகி இருக்கும்?' நினைக்க முடியாத அந்தச் சம்பவத்தோடு; நடந்துவிட்ட பயங்கரத்தை ஒப்பிட்டது உள்ளம். மறுபடியும் வியர்வை வெள்ளம் உடலைக் குளிப்பாட்டியது.

'கத்தி தன் வேலையை முடித்திருந்தால், பத்மினியின் பயங்கர மரணத்துக்கு யாரைக் காரணமாக்குவது? என்னையா? இல்லை, இல்லை. முடியாது.

'நான் வேண்டுமென்றா கத்தியை மேலிருந்து வீசினேன்? என் உயிரின் உயிரான மனைவியை நான் கொல்ல நினைப்பேனா? அப்படியானால்...?' விவகாரம் பேசிற்று விவேகம். 'ரவியின் மரணத்துக்குக் கோபுவைக் காரணமாக்குவது நியாயமா?'

'இல்லைதான்......' குற்றவாளியைப் போலக் குனிந்த தலையுடன் பேசியது குரோத மனப்பான்மை. 'மகனிடம் உள்ள பாசத்தால், ஒரே மகனை இழந்து விட்ட தாங்க முடியாத வேதனையில்...' இதயத்திலே அப்பிக் கிடந்த அழுக்கு - துரு - பொலபொலவென்று உதிருவது போன்ற ஒரு பிரமை. க்ஷணத்திலே இதயம் இலேசாகிவிட்டது. இனி எதிர்பாராது நிகழும் விபத்துக்களைப் பற்றி யாருக்காவது அதிகம் தெரிந்திருக்குமானால் அது நானாகத்தான் இருக்கும். பேராபத்திலிருந்து என் மனைவியைக் காப்பாற்றியதற்காக உள்ளம் நெகிழ, கண்களை மூடியபடி கடவுளுக்கு நன்றி செலுத்தினேன்.

கண்களைத் திறந்தபோது — வெளி கேட்டைப் பிடித்தபடி கோபு நின்று கொண்டிருப்பதைக் கண்டேன். என் அருகில் வருவதற்கு அவன் முயற்சி செய்தான். அதே சமயத்தில் என் ஒரு பார்வையில், என் ஒரு வார்த்தையில் விபரீதமாக ஏதாவது இருக்குமானால் அங்கிருந்து ஓடுவதற்கும் தயாராகவே இருந்தன அவன் கால்கள். அவனைப் பார்த்ததும் சற்று முன்புதான் தெளிந்த என் மனத்திலே புதிதாக முளைவிட்டிருந்த கருணையின் குருத்து வெகு வேகமாக வளர ஆரம்பித்தது.

கோபு தயங்கித் தயங்கி மெள்ள மெள்ள என்னை நோக்கி வரலானான்.

சில விநாடிகள் தரையைப் பார்த்தபடி மௌனமாக இருந்துவிட்டு, சட்டென்று தன் துணிவையெல்லாம் ஒன்று திரட்டிக் கொண்டு என்னைப் பார்த்து, ''நான் உங்களுக்கு ஒத்தாசையாக ஏதாவது வேலை செய்யலாமோ என்று நினைத்து வந்தேன், மாமா'' என்றான்.

அவன் கண்களில் பயம்—பீதி. என்னைக் காணவே அவனுக்கு நடுக்கமாக இருந்தது. மான் குட்டியின் பார்வையிலே காணப்படும் காரணமற்ற பயம். இருந்தாலும் என் மன்னிப்பை அவன் எதிர்பார்த்து வந்திருக்கிறான்—கிடைத்து விடும் என்ற நம்பிக்கையோடு.

''ரவி இருந்தால் உங்களுக்கு எத்தனையோ உதவியாக இருப்பான் மாமா. நீங்கள் அனுமதித்தால் நான் ரவியைப்போல உங்களுக்கு உதவியாக இருக்க விரும்புகிறேன். உங்களுக்கு அவன் எந்தெந்தக் காரியங்களில் எப்படி எல்லாம் உதவியாக இருப்பானோ அதே மாதிரி நானும் இருக்கிறேன், மாமா. நீங்கள் மட்டும் அனுமதி அளித்தால் போதும்...சரி என்று சொல்லுங்கள் மாமா. சொல்லமாட்டீர்களா?'' என்றான் கோபு.

என்னால் அந்தக் களங்கமற்ற சின்னஞ்சிறிய முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவன் கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் என் உள்ளத்திலே அடைபட்டுக் கிடந்த களங்கத்தைக் கழுவி விட்டது. என் இதயத்தை யாரோ அழுத்திப் பிடிப்பது போலிருந்தது. தொண்டையிலே இனந் தெரியாத உணர்ச்சி ஒன்று வந்து அடைத்துக் கொண்டது.

'ரவியின் இடத்தை எனக்கு அளிக்க மாட்டீர்களா மாமா?'' என்று மறுபடியும் பரிதாபமாகக் கெஞ்சினான் குழந்தை கோபு.

'விபத்துகளையும் அதன் தன்மைகளையும் நன்கு அறிந்த ஒரு மனிதனிடம் பன்னிரண்டு வயதுப் பையன் உதவி வேண்டிக் கண்ணீர் சிந்த நிற்கிறான். நீ என்ன செய்யப் போகிறாய்?' என்று கேட்டது உள்ளே ஒரு குரல். என் எதிரே கோபு நிற்கவில்லை. ரவி தான் நின்று கொண்டிருந்தான். ஓடிப் போய் அவனை அப்படியே வாரி எடுத்து அணைத்துக் கொண்டேன். ''அழாதேடா, கோபு! இனி நீதான் என் ரவி'' என்றபோது அவனோடு சேர்ந்து நானும் அழலானேன்.

''பத்மினி....!'' என்று கூப்பிட்டேன். உள்ளம்தான் எப்படிப் பஞ்சு போலாகி விட்டது. பத்மினி வந்தாள். ''என்னமோ டிபன் பண்ணியிருப்பதாகச் சொன்னாயே, அதை எனக்கும் கோபுவுக்கும் ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொடு. நானும் கோபுவும் இன்று உல்லாசமாகப் படகிலே போகப் போகிறோம். படகிலிருந்தபடி சாப்பிடுவது ஆனந்தமாக இருக்கும் இல்லையா?'' என்றேன்.

வியப்பினால் மலர்ந்த விழிகளோடு பத்மினி உள்ளே போனாள். என்னை எதுவும் அவள் கேட்கவேயில்லை. எப்போதுமே, எதைப் பற்றியுமே அவள் என்னைக் கேட்கமாட்டாள். ஆனால் என்னைப் புரிந்து கொள்ளும் திறன் அவளுக்கு உண்டு.

கோபுவின் கையைப் பிடித்துக் கொண்டு நான் புதிய தெம்புடன் நடந்து செல்வதைப் பார்த்தபடி வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள் பத்மினி. நீரிலே மிதந்த அவள் கண்கள் வைரமாக ஜொலித்தன.


Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam

'அனாஸின்'

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளிலிருந்து நிவாரணமளிப்பதில் சிறந்தது

ஏனெனில் அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளன.






வைத்திய விஞ்ஞானிகள், 'அனாஸின்' என்பது வலியை அகற்றும் தீவிர சக்திவாய்ந்த அநேக மருந்துகளின் சரியான விகிதாச்சார கலவை என்று கூறுகிறார்கள். அது வேறெந்த ஒரே மருந்து கலவையைவிட அதிதுரிதமாயும், அபாயமின்றியும், நிச்சயமாயும் நிவாரணமளிக்கிறது என்று ஞாபகத்தில் வையுங்கள்! 'அனாஸின்' ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலவையாகும். ஆகவே 'அனாஸின்', தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிகளிலிருந்து துரிதமாயும், முற்றிலும் குணமளிப்பதில் சிறந்தது. எப்பொழுதும் வீட்டில் 'அனாஸின்' வைத்திருங்கள்.

GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER

7 (R) TAM.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

தனது சட்டையே வெண்மையென நினைத்தவள் ரின்ஸோவினுல் வெளுக்கப்பட்ட ராமுவின் சட்டையைப் பார்த்ததும் பிரமித்தாள்



ரின்ஸோவினுல் வெளுக்கப்பட்ட துணிகள் கண்ணைப்பறிக்கும் வெண்மை உடையவை—பார்த்த மாத்திரத்தில் பளிச்சிடும் உன்னதமான வெண்மை! உங்கள் குடும்பத்தின் சகல சலவைகளுக்கும் ரின்ஸோ உபயோகித்துப் பாருங்கள்! அதன் விறுவிறுப்பான நுரை எவ்வளவு இலகுவாகவும் விரைவாகவும் அழுக்கை அறவே அகற்றிவிடுகிறது. துணிகளுக்கு எவ்வளவு அற்புதமான சுத்தம் அளிக்கிறது என்பதைக் கண்டு திருப்தி அடைவீர்கள். ஞாபகமிருக்கட்டும். அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ தேவையில்லை!

வெள்ளைத் துணிகள் அதிவெண்மையாவதற்கும், வர்ணத் துணிகள் அதிகப் பிரகாசமடைவதற்கும் ரின்ஸோ சலவைப் பவுடர் உபயோகியுங்கள்!

பெரிய சைஸ் உபயோகியுங்கள்—அதனுல் சிக்கனம் அதிகம்.



அதி வெண்மையாக வெளுப்பது ரின்ஸோ

உங்கள் வேலையை இலகுவாக்கும் அற்புத சோப் பவுடர்!

R. 15-50 TM

பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தயாரிப்பு